கல்கி



KALKI
23.12.1962
30
காசு

சுபகிருது, மார்கழி 8உ
டிசம்பர் 23உ 1962

கல்கி

பொருளடக்கம்

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

புகைபிடிக்கும் இங்கிதம்

தீப் பொறியின் திக்குவிஜயம்!

சிகரெட்டைப் பற்றவைக்கையில் —அதுவும் வெளியிலோ அல்லது காற்றடிக்கையிலோ—எவர் மீதும் குறிவைப்பதுபோலத் தீக்குச்சியைக் கிழிப்பது சரியல்ல. தவறிப் போய் தீப்பொறி தெறிக்குமேயானால் பாவம், அருகிலிருக்கும் பெண்மணியின் ஆடைக்கு வந்தது ஆபத்து.



உயரிய பண்போடு உபயோகிப்பதற்கும் உதவுவதற்கும் உகந்தது

பனாமா



இழுக்க இழுக்க இன்பம்-இறுதிவரை

விசேஷக் கவனை செய்வோர்:
கோல்டன் டுபாக்கோ கம்., ப்ரைவேட் லிட்.,
பம்பாய்-56.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT. 611 TAM

Greens' Advtg.



மலர் 22 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 21

ராவணனும் கும்பகர்ணனும்

சென்ற 'கல்கி' இதழில் மாவ் - ஸே - துங்கை ராவணனாகவும், குருஷேவைக் கும்பகர்ணனாகவும் சித்திரித்து ஒரு 'கார்ட்டூன்' வெளியிட்டிருந்தோமே அது எவ்வளவு பொருத்தமான உவமை என்பது இந்த வாரச் சம்பவங்களால் நிரூபணமாகியுள்ளது.


'சீனாவுடன் சமாதானம் செய்து கொள்ளாவிடில் இந்தியா மேல்நாட்டு வல்லரசுகளின் உதவியை நாடியே ஆக வேண்டும். உதவி அளிப்பதாகச் சொல்லி மேல்நாட்டு ஏகாதிபத்தியவாதிகள் இந்தியாவின் சுதந்திரத்தைப் பறித்து விடுவார்கள். இவ்வாறு இந்தியா தன் சுதந்திரத்தை இழக்கக்கூடிய நெருக்கடி நிகழலாகாது என்றேதான் சீனா ஒருதலைப்பட்சமாகப் போர்நிறுத்தம் செய்தது. தான் இந்தியாவை விடப் பலவீனமான நாடு என்றெண்ணிச் சீனா படைகளை வாபஸ் பெறவில்லை. தான் இந்தியாவைவிடப் பலம் பொருந்திய நாடு என்பது சீனாவுக்குத் தெரியும். எனினும் இந்தியா மேல்நாட்டு ஏகாதிபத்தியவாதிகளின் கண்ணியில் சிக்கித் தனது சுதந்திர வாழ்வை இழக்கக் கூடாது என்பதற்காகவே சீனா படைகளைப் பின்வாங்கிக் கொண்டிருக்கிறது. இதனைப் புரிந்து கொண்டு இந்தியாவும் தற்போது சீனாவுடன் சமாதானமாகப் போக வேண்டும்' என்றெல்லாம் பொருள்படப் பேசியிருக்கிறார் குருஷேவ்.

சமாதானம் உண்மையானதாக இருக்குமானால் அதனை அடைவதில் எக்காலும் முயலத்தான் வேண்டும். சமாதானம் நிலைக்காது என்று நினைக்கும்போது இம் முடிவு எடுப்பதில் பயனில்லை. 'சீனாவுடன் சமாதானமாகப் போக வேண்டும்' என்று யோசனை கூறுபவர்கள் இதை எண்ணிப் பார்க்க வேண்டும். கொழும்பில் கூடிய ஆறு நடுநிலைமை நாட்டுத் தலைவர்களும் சமாதான யோசனையைத்தான் வழங்கியுள்ளனர். ஆனால் சீனாவை உண்மையான சமாதானத்துக்கு இணங்க வைக்க முடியுமா என்பது பற்றி அவர்கள் ஆலோசித்துப் பார்த்ததாகத் தெரியவில்லை.

சீனாவுடன் சமாதானமாகாவிடில் மேல்நாட்டு வல்லரசுகளின் அடிமைகளாவோம் என்று எச்சரிக்கை செய்கிறார் குருஷேவ். மேல் நாடுகள் மண்ணாசை வெறி பிடித்தவை என்று அவரைப் போல் நாம் கருதவில்லை; நம் நாட்டில் யாருமே இவ்வாறு எண்ணவில்லை. இவ்வாறு ஓர் ஆபத்து இருப்பதாகவே எண்ணிச் சீனாவுடன் சமாதானம் செய்துகொள்ள முற்பட்டாலும் இந்தச் சமாதானத்தைச் சீனா எவ்வளவு நாள் மதிக்கும்? ஒரு தூண்டுதலுமின்றி நம் நாட்டில் வாய் வைத்த சீனப் புலியை எதிர்காலத்தில் நாம் எப்படி நம்புவது? குருஷேவ் தமது கம்யூனிஸ சித்தாந்தத்தின் எதிர்காலத்தை மனத்தில் வைத்துக்கொண்டு நமக்கு மேல்நாட்டு ஆபத்து நேரும் என்று பூச்சாண்டி காட்டுகிறார். இதனால் நாம் கண்கூடாகக் கண்டு, அநுபவித்து வரும் சீன ஆபத்தை மறக்க முடியுமா? நமுடைய அபாய நிலையில் உதவி புரியும் நேச நாடுகள் நம்மை அடிமை கொள்ளுமா; நம் நாட்டின் பகுதிகளைப் பீரங்கிக் குண்டுகளாலும், டாங்குகளாலும் கவர்ந்த சீனா நமது சுதந்திரத்தைப் பறிக்குமா என்பது பற்றி எந்த இந்தியனுக்கும் ஐயம் கிடையாது.

சீன-இந்திய எல்லைத் தகராறு முற்றியபோது 'இந்தியா நமது நண்பன்; சீனாவோ சகோதரன்'' என்று கூறியதைத்தான் இப்போது வேறு விதத்தில் மொழிந்திருக்கிறார் குருஷேவ்.

ராவணனும் கும்பகர்ணனும் சகோதரர்கள்தானே? இந்தக் கும்பகர்ணனும் சகோதர தர்மத்தைப் போற்றி ராவணனுக்குத்தான் உதவுவான்; சந்தேகமே வேண்டாம்.



சீனவுக்கும் ருஷியாவுக்கும் கருத்து வேற்றுமை இருப்பதாக நம் நாட்டில் பலர் பெரிதுபடுத்தி வருகிறார்கள். இது நமது பிரச்னைக்குச் சம்பந்தமில்லாத விஷயம். சீனவுக்கும் ருஷியாவுக்குமிடையேயுள்ள அபிப்பிராயபேதம் இந்திய எல்லையைப் பற்றியதல்ல. கம்யூனிஸம் என்ற சர்க்கார் சர்வாதிபத்தியத்தை நிலைநிறுத்தக் குருஷேவ் ஓர் உபாயம் சொல்கிறார்; இதே இலட்சியத்தைஅடைய மாவ்-ஸே-துங் வேறொரு வழி கூறுகிறார். இப்போதைக்குக் கம்யூனிஸ உலகின் தனிப் பெரும் தலைவராகக் குருஷேவ் இருந்தால் ஜனநாயக நாடுகளுக்கு உடனடி ஆபத்து இராது என்று ஓரளவு நிம்மதி பெறலாம். ஆனால் இவ்விஷயம் இந்தியாவினால் தீர்க்க முடியாதது. சீனவும் ருஷியாவும் பிரிந்து கம்யூனிஸ உலகம் பலம் குன்ற வேண்டும் என்று விரும்பி அதற்கான காரியங்களை யாரேனும் செய்ய முடியுமானால் அது அமெரிக்கா போன்ற வல்லரசுகள்தான். அப்படி இரு கம்யூனிஸ நாடுகள் பிளவுபடுமா என்பது கேள்விக்குரிய விஷயமே. எப்படியாயினும் இது இந்தியாவின் சக்திக்கு அப்பாற்பட்ட பிரச்னை. இதை நமது பத்திரிகைகளும், தலைவர்களும் பெரிதுபடுத்துவதும் இதனால் நமக்கு ருஷியா ஆதரவாக நிற்கும் என்று எண்ணுவதும் பொருளற்றது.

இன்னொரு விஷயத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். ருஷியா 'மிக்' விமான ஒப்பந்தப்படி நம்மிடம் நடப்பதால் நமக்கு ஏதோ பேருதவி புரிவதாக ஒரு தவறான எண்ணம் நிலவி வருகிறது. என்றோ உற்பத்தியாகப் போகும் 'மிக்' விமானத்துக்கும் இன்றைய எல்லைச் சண்டைக்கும் ஒரு தொடர்பும் கிடையாது. இன்று பயன்தரும் வகையில் நமக்குப் பக்கபலமாக நிற்பது அமெரிக்காவும் பிரிட்டனும்தான்.

இப்போது நடைபெறுவது இந்திய-சீனச் சண்டை மட்டுமல்ல; ஜனநாயகம் என்ற தத்துவமே சர்வாதிபத்தியத்துடன் போராடுகிறது. இவ்வாறு கொள்கைகளின் அடிப்படையில் பார்த்து, சீனவுக்கும் ருஷியாவுக்குமுள்ள வித்தியாசம் மிகவும் சொற்பமே என்பதை இன்று புரிந்துகொள்ள வேண்டும். தேசப் பாதுகாப்புக்கு அளிக்க வேண்டிய ஒருமுகமான கவனத்தை இதர விஷயங்களில் சிதற அடிப்பதை நிறுத்த வேண்டும்.

நிரந்தர ஆபத்து

ராஜாஜி

சீனாவுடன் நடக்கும் யுத்தம் சிறிது காலம் நடக்குமா, நீண்ட நாள் நீடிக்குமா என்றெல்லாம் ஆராய்வதில் அர்த்தம் இல்லை. இது சிறிய போர் அல்ல; பெரிய போரும் அல்ல. இது ஒரு நிரந்தரமான அபாய நிலை. சீனா என்றென்றைக்கும் நம் மீது பாயத் தயாராகத்தான் இருக்கும்.

சாசுவதமான சீன அபாயத்தை எதிர்த்து நிற்க நாம் சக்திகளைத் திரட்ட வேண்டும், நட்புக்களை நிரந்தரமாக நிலைப்படுத்திக் கொள்ள வேண்டும். இதைத்தான் நான் மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்லி வருகிறேன்.

யுத்த அபாயம் உள்ள மட்டும் அவசர நிலைமையும் நாட்டில் நிலவ வேண்டும் என்று எண்ணினால் நாம் என்றென்றுமே ஜீவாதார உரிமைகளை இழந்து நிற்போம். 'அவசர நிலை'யை நிரந்தரமாக்குவது அராஜகத்துக்கு ஒப்பாகும். கம்யூனிஸத்துக்கு ஜனநாயகத்தை இரையாக்குவதற்குப் பதில் அவசர நிலைச் சட்டத்துக்கு ஜனநாயகத்தை இரையாக்குவதாகவே இது முடியும். எனவே அவசர காலச் சட்டத்தை ரத்து செய்து, நாட்டில் சகஜ நிலையை ஏற்படுத்த வேண்டும்.

சீனாவின் நிரந்தரமான பயமுறுத்தலைத் தடுக்க நமது படைகளையும், தளவாடங்களையும் எவ்வளவோ மடங்கு பெருக்க வேண்டும். இதற்கு இப்போது கிடைக்கும் தங்க ஆபரணங்களும், கம்பளி ஆடைகளும் போதாது. சீனாவுடன் ஓர் ஆயுதப் போட்டியில் நாம் ஈடுபட வேண்டுமானால் அதற்கான நிதியை இந்த ஏழை நாடு தாங்காது. சீனாவுக்குப் பதிலாக நம்முடைய பாதுகாப்பு பட்ஜெட்டே ஒரு பசி வெறி பிடித்த ஓநாயாகி மக்கள் மீது பாயும். ஆனபடியால் கம்யூனிஸ எதிர்ப்புக் கொள்கையில் நம்முடன் ஒன்றுபட்ட வல்லரசுகளுடன் நட்பை வலுப்படுத்திக் கொண்டு அவர்கள் உதவியுடன் பலத்தைப் பெருக்கிக் கொள்வதே முறை.

ரூபாய் நோட்டுக்களை வரம்பின்றி அச்சிட்டுப் பாதுகாப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்ய எண்ணினால் பணவீக்கம் பெருகும். பெரிய முதலாளிகளின் பணப் பெட்டிகள் நிரம்பும். ஏழை மக்களின் இன்னல்கள் அதிகமாகும். 'பாதுகாப்புச் செலவுக்காகப் பற்றாக்குறை பட்ஜெட் போட மாட்டோம்' என்று நிதிமந்திரி அவர்கள் சொல்லியிருக்கிறார். உண்மை. என்றாலும் அத்தியாவசிய நிலையில் இது போன்ற வாக்குறுதிகள் பறந்து போய்விடும். பிரிட்டனையும் அமெரிக்காவையும் நாம் நன்றாகப் புரிந்து கொள்ள முடிகிறது. அவை நம்முடைய பாஷையைத்தான் பேசுகின்றன. சீனாவின் வார்த்தைகள் நமக்கு விளங்குவதே கிடையாது. நமது பாஷை பேசும் நாடுகளுடன் நல்லுறவு காண ஏன் தயக்கம்?

இந்தியாவும் பாகிஸ்தானும் ஒன்று கூடி, தங்களது பொதுவான தாய் நாட்டைக் காக்கும் நன்னாள் பிறக்க ஆண்டவன் அருள வேண்டும். இரு தேசத்து மக்களும் தப்பெண்ணங்களை விட்டு அன்பில் இணைவதற்கு உடன்படிக்கை ஷரத்துக்களை நம்பிப் பயனில்லை. ஆண்டவனைத்தான் நம்ப வேண்டும். அன்பு என்பது பேரத்தில் வாங்கும் 'ரெடி-மேட்' சரக்கல்ல. கதரைப் போல் நூற்று நெசவு செய்ய வேண்டிய பண்டம் அது. இந்துக்கள் முஸ்லீம்கள் இருவருமே ஆண்டவன் மக்களின் இதயத்தில் வசிப்பதாக நம்புகிறார்கள். அந்த ஆண்டவனே இவ்விரு மக்களையும் இணைக்க வேண்டும். சீன அபாயமே ஒரு தெய்வீக எச்சரிக்கையாகி நம்மை அத்தகைய நட்புப் பணியில் நடத்திச் செல்லுமாக.

சென்னைக்குப் புதிய ஷெரீப்



நடப்பு ஆண்டு 1962-63க்குச் சென்னை நகரின் 'ஷெரீப்' பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள திரு ஜே. எச். தாராபோர் சென்னைத் தொழிலதிபர்களில் முக்கியமானவர். மவுண்டு ரோட்டிலுள்ள தாராபோர் கம்பெனியின் தலைவர்.

கோபாலரத்தினம் மறைந்தார்

வாழ்க்கை முழுதும் நகைச்சுவை மணம் பரப்பி எண்ணற்ற நண்பர்களைச் சிரிக்கச் செய்துவந்த ஸ்ரீ வி. வி. கோபாலரத்தினம் அவர்கள் இன்று அவர்களை யெல்லாம் கண்கலங்கச் செய்து விட்டார். அவர் காலமானவுடன், உறவினர் ஒருவரை இழந்தாற்போன்ற துயரத்துடன் அவரது இல்லத்தில் குழுமியவர்கள் எத்தனை துறைகளைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிந்தால் ஸ்ரீ கோபாலரத்தினம் அவர்கள் எத்தனை துறைகளில் ஆழ்ந்த பரிசயம் பெற்றிருந்தார் என்பது புரியும். சண்டப் பிரசண்டமாக வாதப் பிரதிவாதம் செய்யும் வழக்கறிஞர்; புல்லாங்குழல், வயலின், கோட்டு வாத்தியம் முதலியவற்றை இசைக்கும் ஆற்றல் பெற்ற இசைக் கலைஞர்; கலை நுட்பம் செறிந்த நாடகங்களை ஆக்கித் தந்த ஆசிரியர்; அந்த நுட்பங்களைச் சிதையாமல் வெளிப் படுத்திய மேடை நடிகர் — எல்லாமாக இருந்து எல்லாவற்றுக்கும் மேலாக நட்பு பூணும் பான்மையில் நிபுணராகவே விளங்கியவர் ஸ்ரீ கோபாலரத்தினம். நடிகர்களைக் கூத்தாடி என்று கருதிய காலத்தில் ஸுகுண விலாஸ சபையில் தமிழக நாடக மறுமலர்ச்சிக்கு வழிகாட்டியான நாடகங்களை அரங்கேற்றிய வி. வி. ஜி.யின் கலைப் புலமையைப் பாராட்டிச் சங்கீத நாடக சங்கம் விருதளித்தது. நீதிக்கும் எழுத்துக்கும் அவர் புரிந்த சேவைக்கு, சமீபத்தில் வெளியான அவரது சென்னை உயர்நீதி மன்ற வரலாறு அத்தாட்சி பகர்ந்தது. அவருடைய அன்பு மனத்துக்கோ இன்று அவரைப் பற்றி எண்ணும் இதயங்களும், எழுதும் ஏடுகளும் சான்று கூறுகின்றன. தங்களது பிரிவுத் துயரில் இவ்வளவு பேர் பங்கு கொள்கிறார்கள் என்பதில் ஸ்ரீ கோபாலரத்தினம் அவர்களின் குடும்பத்தினர் ஆறுதல் பெறுவார்களாக.



ஆங்கிலப் பழமொழி தலைகீழாயிற்று !



கையிலுள்ள பறவைகளை விட்டு விட்டு, புதரிலுள்ளதைப் பிடிக்கப் பார்க்கிறார்.



வித்வத் சபை விழா

சென்னை சங்கீத சபைகளும், மற்றும் இசைக் கலையில் பேரார்வம் கொண்ட ஸ்தாபனங்களும் வழக்கம் போல் இவ்வாண்டும் சங்கீத விழாக்களை நடத்தத் தீர்மானித்திருக்கின்றன.

சென்னை சங்கீத வித்வத் சபையின் விழா அதனுடைய கம்பீரமான புது மண்டபத்தில் சிறப்பாக நடக்கும். இதைத் தனிப்படச் சொல்வதில் விசேஷமுண்டு. சென்ற ஆண்டு எல்லாப் புது வீடு கட்டுபவர்களும் செய்வது போல, அவசரம் அவசரமாக "கிருஹப் பிரவேசம்" நடந்தேறியது. கச்சேரிகளும் நடந்து விட்டன. ஆனாலும் மண்டப வேலைகளும் அதை அழகுபடுத்தும் நடவடிக்கைகளும் தொடர்ந்து நடந்து இப்போதுதான் கட்டடம் பூரணப் பொலிவு பெற்றிருக்கிறது. இதைச் சம்பிரதாயமான முறையில் மைசூர் மகாராஜா அவர்கள் திறந்து வைக்கிறார்கள். இசை நுட்பங்களையும், கலை நுட்பங்களையும், கலைக்கும் பக்திக்கும் உள்ள பிணைப்புக்களையும் நன்கு உணர்ந்து ரசிப்பவர் மேன்மை தங்கிய மகாராஜா. பாரதப் பண்பாட்டுக்குப் பிரதிநிதி அவர். இவ்விழாவில் அவர் கலந்து கொள்ளுவதே ஒரு சிறப்பு அம்சம். சென்னை மாநில கல்வி அமைச்சர் திரு எம். பக்தவத்சலம் வித்வத் சபை விழாவைத் தொடங்கி வைக்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

இவ்வாண்டு வித்வத் சபை விழாவுக்குத் தலைமை வகிக்கும் கௌரவத்தை சங்கீத வித்துவான் ஸ்ரீ (பாப்பா) கே. எஸ். வேங்கட்ராமய்யா அவர்களுக்கு வித்வத் சபையினர் அளித்துள்ளனர். வயலின் வாத்தியத்தைக் கையாளுவதில் முந்தைய தலைமுறையில் பிரபலமானவர் மலைக்கோட்டை கோவிந்தசாமி பிள்ளை அவர்கள். பக்கவாத்தியம் என்ற அந்தஸ்தை உடைய வயலின் கருவியைத் தனி வாத்தியக் கச்சேரியாகவே செய்து பிரக்யாதி பெற்றவர். அவரிடம் குருகுல வாசமாக சிக்ஷை பயின்று அவருடனே பல கச்சேரிகளில் 'ஜோடி வயலின்' ஸோலோ கச்சேரிகள் செய்து புகழடைந்தவர் பாப்பா. அவருடைய குருவிடம் சிறப்பு அம்சங்கள் என்று கருதப்பட்ட கர்நாடக சுத்த ராக வின்யாசங்களும், கமக விசேஷங்களும், காதுக்கும் மனத்துக்கும் இனிய குழைவும் தானத்தில் அசைவுப் பொழிவுகளும் பாப்பாவின் வயலினில் எழிலுறக் காணலாம். மறைவிலிருந்து அவருடைய வயலின் இசையைக் கேட்டால் அவருடைய குருநாதர்தான் வாசிக்கிறாரோ என்ற பிரமை உண்டாகும். தம்மை அண்டின மாணவர்களுக்கும் இக்கலையைக் கற்பித்து ஸ்ரீ பாப்பா சேவை புரிந்துள்ளார்.



பாப்பா வேங்கடராமய்யா

அடக்கமும், அமைதியும் நிரம்பிய பாப்பா விளம்பரத்தை விரும்பாதவர். அவர் தலைமை இவ்வாண்டு விழாவுக்குச் சிறப்பளிக்கும் என்பதில் ஐயமில்லை. ஸதஸ் விழாவுக்குத் தலைமை வகிக்கும் பொறுப்பைத் தாங்கும் கம்பீரமும் தகுதியும் பூரணமாக உள்ளவர் முன்னாள் நீதிபதி ஸ்ரீ டி. எல். வேங்கடராமய்யர். தீட்சிதர் கிருதிகளில், "அதாரிட்டி" என்ற ஸ்தானம் வகிப்பவர். ஏற்கனவே வித்வத் சபை விழாவுக்குத் தலைமை வகித்து சங்கீத கலாநிதி என்ற விருது பெற்றவர். சங்கீத வித்வத் சபை விழா அமோகமாக இருக்கும் என்பதற்கு இவை முன்னறிவிப்புக்களாகும்.



பக்தவத்ஸலம்



மைசூர் மகாராஜா



டி.எல். வேங்கடராமய்யர்

இசை விற்பன்னர்கள் பலருடைய ஒத்துழைப்பும் கிடைக்கப்பெற்ற வித்வத்சபையின் விவாதங்களும், கச்சேரிகளும் பயனுள்ள முறையில் நடைபெற இறைவன் அருள்வானாக. புதிய மன்றத்தில் 'அதிகாரபூர்வ' மாகப் புகுவதை யொட்டி வித்வத் சபையின் பணி நாள்தோறும் சிறப்புற்று, நம் ரசிகப் பெருமக்கள் அதன் பலனை நுகர்வார்களாக.

தமிழ் இசை விருந்து

தமிழ் இசைச் சங்கத்தின் விழா ஆண்டுக்கு ஆண்டு சிறப்பும் விரிவும் அடைந்து வருவது போற்றத் தக்கது. தமிழ் இசைக் கல்லூரி சென்ற ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுச் சீரிய முறையில் பணியாற்றி வருகிறது. முத்துத் தாண்டவர் பாடல்களிலும் திருப்புகழ் பாடல்களிலும் கோபால கிருஷ்ண பாரதி கிருதிகளிலும் இந்தக் கல்லூரி மாணவர்கள் பெற்றுள்ள தேர்ச்சி அபாரம். இவர்கள் நடத்தும் பண் ஆராய்ச்சிகளும், ஆண்டு தோறும் புதிது புதிதாக அளிக்கும் தமிழகத்துக் குறவஞ்சி நாடகங்களும், பல்லக்கு நடனம், காவடியாட்டம் போன்ற அம்சங்களும், திருக்கோயில் நவசந்தி நடனங்களும் இச் சங்கம் நடத்தி வரும் ஆராய்ச்சிக்கும் சேவைக்கும் எடுத்துக்காட்டு. அவர்கள் வெளியிட்டுள்ள இசை நூல்களும் ஒவ்வொரு வருஷமும் பெருகிக் கொண்டே செல்கின்றன.

இவ்வாண்டு தமிழிசை விழாவைச் சென்னை சபாநாயகர் திரு எஸ். செல்லபாண்டியன் தொடங்கி வைக்கிறார். விழாவுக்குத் தலைமை தாங்கும் வித்துவான் மதுரை ஸ்ரீ மணி அய்யர் அவர்கள் தமிழ் இசை உலகில் பல ஆண்டுகளாக முன்னணியில் இருப்பவர். பெயருக்கு ஏற்றபடி அவருடைய கானமும் மணியாகவே அமைந்துள்ளது. ஸ்வர சுத்தத்துக்கு இருப்பிடம் என்று போற்றப்படும் மணி அய்யர் ஏற்கனவே சங்கீத கலாநிதி விருது பெற்றவர். இசைப் பேரறிஞர் என்ற விருதும் இப்போது அவரைச் சென்றடைகிறது.

தமிழ் இசைச் சங்கப் பண் ஆராய்ச்சியை ஆரம்பித்துவைக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திரு தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான் 'கல்கி' வாசகர்களுக்கு உறவினர் போன்றவர். தமிழகத்துக் கோயில் கலையில் விரிவாக ஆராய்ச்சி செய்துள்ள அவர் திருக் கோயில்களுடன் சம்பந்தப்பட்டே வளர்ந்து வந்துள்ள தமிழிசைப் பண் ஆராய்ச்சியை மிளிர வைப்பார் என்று எதிர் பார்க்கிறோம்.

பாஸ்கரத் தொண்டைமான்



மதுரை மணி



செல்லபாண்டியன்



மியூஸிக் அகாடமி, சென்னை

36-வது சங்கீத மகாநாடும், கச்சேரிகளும் — 20-12-1962 முதல் 5-1-1963 வரையில்

சென்னை, 115-E, மௌபரேஸ் ரோடு, மியூஸிக் அகாடமி, புதிய கட்டிடத்தில் - தினசரி நிகழ்ச்சி விவரங்கள் (D.V.)

மைசூர் மகாராஜா அவர்கள் கட்டிடத்தைத் திறந்து வைப்பார்கள். கனம் ஸ்ரீ எம். பக்தவத்சலம் அவர்கள் மகாநாட்டைத் தொடங்கி வைப்பார்கள்

வயலின் வித்வான் ஸ்ரீ பாப்பா கே. எஸ். வேங்கட்ராமய்யா அவர்கள் மகாநாட்டுக்குத் தலைமை வகிப்பார்

சங்கீத கலாநிதி ஸ்ரீ டி. எல். வேங்கடராம அய்யர் அவர்கள் ஜனவரி 2-ந் தேதி சதஸுக்குத் தலைமை தாங்குகிறார்

சங்கீத சர்ச்சைகளும், விமர்சனங்களும் காலை 8 மணி முதல் 10 மணி வரை, போட்டிகள் 12 மணி முதல் 2 மணி வரை

20 - 12 - 62 வியாழக்கிழமை மாலை 6-30 மணிக்கு ... காருகுறிச்சி அருணாசலம் - நாகஸ்வரம்

21 - 12 - 62 வெள்ளிக்கிழமை மாலை 6 முதல் 8 மணி வரை ... ரமணி - புல்லாங்குழல்

22 - 12 - 62 சனிக்கிழமை

பிற்பகல் 2-30 மணி	பிற்பகல் 3-30 மணி	மாலை 5 மணி	இரவு 9 மணி
வி. ராமச்சந்திரன் -பாட்டு	ராமன் & லக்ஷ்மணன் -பாட்டு	டி. கே. பட்டம்மாள் -பாட்டு	சிவானந்தம் & சாரதா -வீணை
வி. எஸ். சிவஸ்வாமி —வயலின்	திருப்பாப்புலியூர் ராஜம்—வயலின்	எம். எஸ். அனந்தராமன்—வயலின்	திருச்சி ராகவன் —மிருதங்கம்
ரமணி —மிருதங்கம்	நாகூர் அம்பி அய்யர் —மிருதங்கம்	குஞ்சுமணி —மிருதங்கம்	
		கிருஷ்ணமூர்த்தி ராவ் —கடம்	

23 - 12 - 62 ஞாயிற்றுக்கிழமை

சீர்காழி சகோதரர்கள் -பாட்டு	கமலா கைலாசநாதன் -பாட்டு	கமலா -பரதநாட்டியம்	ராமநாதபுரம் கிருஷ்ணன் -பாட்டு
நூரி ஸ்ரீனிவாச சர்மா —வயலின்	ஆலந்தூர் நடராஜன் —வயலின்		வீரராகவன் -வயலின்
ஸ்ரீனிவாசன் —மிருதங்கம்	கனகாம்புஜம் —மிருதங்கம்		கணேசன் -மிருதங்கம்

24 - 12 - 62 திங்கட்கிழமை

தென்காசி முத்துசாமி -பாட்டு	சி. பி. ஞானசுந்தரம் -பாட்டு	ஜி. என். பாலசுப்ரமணியம் -பாட்டு	துவாரம் வேங்கடசாமி நாயுடு - வயலின்
ஏதாபூர் சீனிவாசன் -வயலின்	கிருஷ்ணசாமி -வயலின்	லால்குடி ஜயராமன் —வயலின்	
கே. நாராயணன் -மிருதங்கம்	என். கணேசன் -மிருதங்கம்	பாலக்காடு ரகு —மிருதங்கம்	மதராஸ் கண்ணன் —மிருதங்கம்
		விநாயக்ராம் —கடம்	

25 - 12 - 62 செவ்வாய்க்கிழமை

ரவீந்திரன் -பாட்டு	தஞ்சாவூர் எல். வெங்கடேசன் -பாட்டு	எம். எல். வசந்தகுமாரி -பாட்டு	எம். டி. ராமநாதன் -பாட்டு
பி. ராமச்சந்திரய்யா —வயலின்		திருவள்ளூர் சுப்ரமண்யம்—வயலின்	கோவிந்தசாமி நாயக்கர் —வயலின்
பரமேஸ்வரன் —மிருதங்கம்	டி. என். மணி —வயலின்	கிருஷ்ணமூர்த்தி ராவ் —மிருதங்கம்	ராமச்சந்திரன் —மிருதங்கம்
	ஆலப்புழை ராகவன் —மிருதங்கம்	டி. எஸ். வில்வாத்ரி அய்யர்—கடம்	

26 - 12 - 62 புதன்கிழமை

அரியூர் சகோதரிகள் -பாட்டு	கலா அச்சுதராமன் - ஹரிகதை	ஆலத்தூர் சகோதரர்கள் -பாட்டு	டி. எம். தியாகராஜன் -பாட்டு
மீஞ்சூரி விஸ்வநாதன் —வயலின்		வேங்கட்ராமய்யா —வயலின்	அனந்தசாமி —வயலின்
ஆர். ராமச்சந்திரன் —மிருதங்கம்		ராமபத்ரன் —மிருதங்கம்	ராமஸ்வாமி —மிருதங்கம்
		நடேச பிள்ளை —மோர்சிங்	

27 - 12 - 62 வியாழக்கிழமை

டி.ஏ. ஹரிஹரன் -புல்லாங்குழல்
திருப்பாம்புரம் பாலு —வயலின்
பி. விசுவநாதன் —மிருதங்கம்

ஆர். கே. ராமனுதன் -பாட்டு
நாராயணசாமி -வயலின்
சி. எஸ். கிருஷ்ணமூர்த்தி -மிருதங்கம்

மதுரை மணி அய்யர் -பாட்டு
கோவிந்தராஜ பிள்ளை —வயலின்
சி.எஸ். முருகபூபதி —மிருதங்கம்
ஆலங்குடி ராமச்சந்திரன் —கடம்

பிருந்தா & முக்தா -பாட்டு
ராமஸ்வாமி —வயலின்
குருவாயூர் துரை —மிருதங்கம்

28 - 12 - 62 வெள்ளிக்கிழமை

ஆர். கே. சூரியநாராயண -வீணை
ராமகிருஷ்ணன் —மிருதங்கம்

பழனி விஜயலக்ஷ்மி -பாட்டு
பாபநாசம் பாலசரஸ்வதி—வயலின்
பழனி சி. குமார் —மிருதங்கம்

செம்மங்குடி சீனிவாசய்யர் -பாட்டு
டி. என். கிருஷ்ணன் —வயலின்
பாலக்காடு மணி —மிருதங்கம்
சுவாமிநாத பிள்ளை —கஞ்சிரா

டி. விஸ்வநாதன் -புல்லாங்குழல்
வி. தியாகராஜன் —வயலின்
டி. ரங்கநாதன் —மிருதங்கம்

29 - 12 - 62 சனிக்கிழமை

சேலம் நீலா -பாட்டு
ஆர். கமலா —வயலின்
ஏ. ஈஸ்வரன் —மிருதங்கம்

ஏ. சீனிவாசராகவன் -பாட்டு
ராமநாதன் —வயலின்
மாஸ்டர் சேகர் —மிருதங்கம்

பண்டிட் ஓம்காரநாத் டாகுர்
-ஹிந்துஸ்தானி சங்கீதம்
கோபாலகிருஷ்ணன் —வயலின்
சாந்தா பிரசாத் —தபேலா

ராகினி குழுவினரின்
ராமாயணம் (நாட்டிய நாடகம்)
இந்திய நடனங்கள்

30 - 12 - 62 ஞாயிற்றுக்கிழமை

ராஜலக்ஷ்மி ஜெகந்நாராயணன் -பாட்டு
ரங்கநாயகி —வயலின்
ஏ. கல்யாணசுந்தரம் —மிருதங்கம்

சி. சரோஜா & சி. லலிதா -பாட்டு
வசந்தா கோபாலன் —வயலின்
தாயுமானவர் —மிருதங்கம்

எம். எஸ். சுப்புலக்ஷ்மி -பாட்டு
டி.என். சுந்தரேச ஐயர் —வயலின்
டி. கே. மூர்த்தி —மிருதங்கம்
கோதண்டராம ஐயர் —கடம்

அண்ணாசாமி பாகவதர் - ஹரிகதை

31 - 12 - 62 திங்கட்கிழமை

பாபநாசம் விஜயலக்ஷ்மி -பாட்டு
கோபாலரத்தினம் —வயலின்
ஏ. ஜயலட்சுமி —மிருதங்கம்

பிச்சுமணி -வீணை
கண்டதேவி சீனிவாசன் — மிருதங்கம்

முசிரி சுப்ரமணிய அய்யர் -பாட்டு
டி. என். சுந்தரேச ஐயர்—வயலின்
சிவராமன் —மிருதங்கம்
எம். ராஜப்பா —கடம்

ஹிந்துஸ்தானி வாத்திய இசை
பண்டிட் ரவி சங்கர் -சிதார்
சாந்தா பிரசாத் —தபேலா

1-1-63 செவ்வாய்க்கிழமை

என். திரிபுரசுந்தரி -பாட்டு
ஒய். ராஜகோபாலன் —வயலின்
கபாலி —மிருதங்கம்

திருவாரூர் ராஜரத்தினம் - நாகஸ்வரம்

மகாராஜபுரம் விஸ்வநாதய்யர்-பாட்டு
டி. சௌடையா —வயலின்
கிருஷ்ண ஐயங்கார் —மிருதங்கம்
மஞ்சுநாத் —கடம்

எம்பார் விஜயராகவாச்சாரியார் - ஹரிகதை


2 - 1 - 63 புதன்கிழமை

மாலை 4-30 மணி ; சதஸ் ... மாலை 5 மணி : பாலசரஸ்வதி - பரதநாட்டியம் ... இரவு 9 மணி : எம். எ. கல்யாணகிருஷ்ண பாகவதர் - பாட்டு

3 - 1 - 63 வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு வைஜயந்திமாலா - பரதநாட்டியம் ... இரவு 9 மணிக்கு கே. வி, நாராயணசாமி - பாட்டு

5 -1 - 63 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு சமஸ்கிருத ரங்கா அளிக்கும் '' மாலதி மாதவம் '' (சமஸ்கிருத நாடகம்)


சீஸன் டிக்கட்டுகள்: ஸ்பெஷல் ரூ. 250; ஸ்பெஷல் ரிஸர்வ்டு ரூ. 100; முதல் வகுப்பு ரூ. 40; 2ம் வகுப்பு ரூ. 25; ரிஸர்வேஷன் ரூ. 10 (முதல் வகுப்புமட்டும்)
சீஸன் டிக்கட்டுகள் கிடைக்குமிடம்: மியூஸிக் அகாடமி, 115-E, மௌபரேஸ் ரோடு, சென்னை-14 (போன்: 85619) ரஸிக ரஞ்சனி சபை மயிலாப்பூர், சென்னை-4
மைக் மற்றும் ஒலிபெருக்கி ஏற்பாடுகள்: ஸ்டாண்டர்டு ரேடியோ அண்டு எலக்ட்ரிக் கம்பெனி, திருவல்லிக்கேணி, சென்னை-5



மிகவும் நல்ல
சுவையுள்ளது
Stanes
INSTANT COFFEE
ஸ்டேன்ஸ்
இன்ஸ்டெண்ட்
காபி
தி யுனைடெட் காபி சப்ளை கம்பெனி லிமிடெட்
த. பெ. நெ. 12, கோயமுத்தூர்



சமைக்கும்போதே இளைப்பாறலாம்
இந்த அற்புத மண்ணெண்ணெய் அடுப்பு கண்டு பிடிக்கும் வரையில் சமையல் என்றாலே மிகக் கஷ்டமான காரியம் என்று கருதப்பட்டு வந்தது. இப்பொழுது நீங்கள் சமைக்கும்போதே இளைப்பாறலாம். கரி உடைக்கும் கஷ்டமோ அடுப்பூதும் சிரமமோ, கண்ணில் புகை மண்டுதலோ இல்லை. சமையலறையில் புகைக்கரிப் பிடிக்காது. இந்த அடுப்பு துப்புரவானது. எளிதானது. எளிமையானது.
PATENT
மண்ணெண்ணெய் அடுப்பு
காஸ் ஜனதா
சுவையான சமையல்
சுலபமான சமையல்
தயாரிப்பாளர்கள்:
தி ஓரியண்டல் மெட்டல் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்
77, பௌபஜார் தெரு, கல்கத்தா-12



பொற்பணிக்கு வெள்ளி விழா


புத்தமுதாம் தமிழ்மதப் பெருமைதனைப்
பாரறியப் புகட்டும் வண்ணம்...
பலநூல்கள் பதிப்பித்தும், பலபெரியோர்
பிரசங்கம் பண்ணுவித்தும்
நலமுடைய கலாசாலை புத்தகசா
லை பலவும் நாட்டியும் தம்
குலமுயர நகருயர நாடுயர
உழைக்கின்றார், கோடி மேன்மை
நிலவுற இச்சங்கத்தார் பல்லூழி
வாழ்ந்தொளிர்க, நிலத்தின் மீதே!

என்று அன்று பாரதியார் தமிழ் மதாபிமான சங்கத்தாரை வாழ்த்திப் பாடியது அவ்வளவும் பொருந்துமாறு அரும் பணி புரிந்து வருகிறது பாரதிய வித்யாபவனம். பம்பாயில் குலபதி ஸ்ரீ முன்ஷி அவர்களும், ஸ்ரீமதி லீலாவதி முன்ஷி அவர்களும் தந்தை தாயாக இருந்து நிர்வகித்து வரும் கலைக் கோயிலாகிய வித்யாபவனம் நாடெங்கிலும் பல கிளைகளுடன் நாள்தோறும் வளர்ந்து வருகிறது. காலவரை கடந்த பாரதப் பண்பாட்டு மகிமையை உலகறியச் செய்யும் உயர்பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஸ்தாபனம் பாரதிய வித்யாபவனம். உண்மை, அன்பு, அழகு என்ற மூன்று தத்துவங்களும் அறத்தின் மூன்று அம்சங்கள் என்ற கோட்பாட்டின்படி 'சத்தியம், சிவம், சுந்தரம்' மூன்றையும் போற்றித் தர்மப் பயிர் தழைக்கச் செய்யும் ஸ்தாபனம் அது. இவ்வுலகுக்கு வேண்டிய பொருளையும் அவ்வுலகுக்கு வேண்டிய அருளையும் பெறுவதற்கான பல கல்வி நிலையங்கள் பவனத்தின் ஆதரவில் அருமையான முறையில் நிர்வகிக்கப்படுகின்றன. சர்தார் படேல் பொறி இயல் கல்லூரி உள்படப் பல கலைகளிலும் மாணவர்களைப் பயிலுவிக்கும் பள்ளிகள் பல இருப்பினும் பாரத நாகரிகத்தின் பொதுமொழியாகிய வடமொழி வளர்ச்சிக்குப் பவனம் ஆற்றிவரும் தொண்டு முதன்மையாக மதிக்கத் தக்கது.

இவை எல்லாவற்றையும்விட 'பாரதிய வித்யா பவனம்' என்ற உடனேயே மக்கள் நினைவுக்கு வருவது அவர்கள் வெளியிடும் அற்புதமான நூல்களும், 'பவன்ஸ் ஜர்னல்' என்ற சஞ்சிகையும்தான்.

'கலைச்செல்வங்கள்யாவும் கொணர்ந்திங்கு சேர்த்து' நம்முடைய ஆத்மாவுக்கு அமுத விருந்து படைக்கும் பற்பல அருமையான நூல்களை வெளியிடுகிறது பாரதிய வித்யாபவனத்தின் புத்தகப் பல்கலைக் கழகம் (Book University). ராஜாஜியின் மகா பாரதத்தைத் தம் முதல் ஆங்கில வெளியீடாக இவர்கள் பிரசுரித்தது போலவே, சமீபத்தில் ராஜாஜியின் கடோபநிஷத்துடன் தமிழ் மொழியில் புத்தகவெளியீட்டினைத் தொடங்கியிருக்கிறார்கள். 'பெங்குவின்', 'பெலிகன்' புத்தகங்களைப்போலக் குறைந்த விலையில், உயர்ந்த முறையில், வாசகர்களை நிறைந்த உள்ளத்தினராகச் செய்யும் நன்னூல்கள் பல பவனத்தாரால் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. 'இந்திய மக்களின் வரலாறும், நாகரிகமும்' (History and Culture of the Indian People) என்ற பெயரில், பத்து பாகங்களில் பவனம் வெளியிட்டுள்ள சரித்திர நூல் உலகம் முழுவதிலும் ஆமோதனம் பெற்றிருக்கிறது. இந்த ஆண்டில் இவர்களது வெளியீடுகளில் இரண்டரை லட்சம் பிரதிகள் விற்பனை ஆகி உள்ளன என்பது பவனத்தாருக்கு மட்டும் பெருமை அல்ல; அவர்களது பணியினை மதிக்கத் தெரிந்து பயன்படுத்திக் கொள்ளும் நம் எல்லோருக்குமே பெருமை தரக்கூடிய விஷயமாகும்.





முன்ஷி தம்பதியர்

இம்மாதம் 30ந் தேதி 75வயது நிரம்பும் ஸ்ரீமுன்ஷி இன்னும் பல்லாண்டு வாழப் பிரார்த்திக்கிறோம்.

கலி மலிந்த பாரதத்தில் கிருத யுகத்தின் நிறுக்களைப் பரப்பி வரும் பாரதீய வித்யா பவனம் தொடங்கி இப்போது இருபத்தைந்து ஆண்டுகள் நிறைகின்றன. தங்கமான பணி புரியும் நிறுவனம் வெள்ளி விழா கொண்டாடுகிறது.

ராஜன் பாபு அவர்களைத் தலைவராகவும், முன்ஷி அவர்களை அக்ராஸனராகவும், இந்தியாவின் தலைசிறந்த பெருமக்கள் பலரை அங்கத்தினராகவும் கொண்ட ஒரு குழு வெள்ளி விழாவை அதிவிமரிசையாகக் கொண்டாட நீண்ட பெரிய நிகழ்ச்சி நிரல் தயாரித்துள்ளது. இம்மாதம் 20-ம் தேதியிலிருந்து 31-ம் தேதி வரை பம்பாயில் நடைபெறும் இந்தப் பண்பாட்டு விழாவினை நமது வேதாந்தி ராஷ்டிரபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள் தொடங்கி வைக்கிறார். காலை வேளைகளில் வேத கானம், பஜனை, சதசண்டியாகம், மகாருத்ர யாகம், இவற்றுடன் அகண்டானந்த சரஸ்வதி, ஸ்வாமி ரங்கநாதானந்தா ஆகியோர்கள் உபந்நியாசங்கள் நிகழுகின்றன.

வெள்ளி விழா நிகழ்ச்சி மாலையின் வைரப் பதக்கம் போல இம்மாதம் 21, 22, 23 தேதி மாலைகளில் 'நமது பண்பாடு' என்ற பொருள் பற்றிப் பண்புப் பெட்டகமான ராஜாஜி அவர்கள் மூன்று பேருரை நிகழ்த்துகிறார்கள். முன்ஷி எண்டோமெண்ட் உரை என்ற பெயரில் ஆண்டுதோறும் நடைபெற்று வரும் இந்தச் சொற்பொழிவினை இவ்வருடம் ராஜாஜி நிகழ்த்துகிறார். மூன்று நாட்களிலும் முறையே ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட், ஹுமாயூன் கபீர், ஸ்ரீ ஸ்ரீ பிரகாசா ஆகியோர் தலைமை தாங்குகின்றனர்.

ரவீந்திரநாத் அம்சமாகிய பிர்லா எண்டோமெண்ட் உரையினை இவ்வாண்டு 26, 27, 28 தேதி மாலைகளில் நிகழ்த்த ஸ்ரீ சம்பூர்ணானந்த் அவர்கள், இந்தியாவில் தெய்வ வழிபாடு ஆதியிலிருந்து இன்றுவரை எப்படியெல்லாம் உருவாகி வந்திருக்கிறது என்பதை விளக்குவார். ஸ்ரீ ஸ்ரீ மாலி, ஸ்ரீ படேரியா, ஸ்ரீ முன்ஷி ஆகியோர் தலைமை வகிக்கிறார்கள். 29-ம் தேதியன்று 'தொழில் நுணுக்க வளர்ச்சியும் நமது ஜீவாதாரத் தத்துவங்களும்' என்பது பற்றிக் கருத்தரங்கு நடைபெறுகிறது. 30-ம் தேதி, பவனத்தின் ஜீவநாடியாகிய முன்ஷி அவர்களின் எழுபத்தியாறுவது பிறந்த தினம் கொண்டாடப் பெறும். கடைசி நாளன்று தோட்டக் கலைக் காட்சி, ஸ்தாபகர் தின விருந்துபசார மெல்லாம் நடைபெறுகின்றன. வித்தியாபவனம் நடத்தி வரும் கலாகேந்திரத்தைச் சேர்ந்தவர்கள் 21லிருந்து 30ம் தேதி வரை பிரதி இரவும் கலைநிகழ்ச்சிகள் நடத்துகிறார்கள்.

இருபத்தைந்தாவது ஆண்டு விழாவை இவ்வளவு சிறப்புற நடத்த விருக்கும் பாரதீய வித்யா பவனம் இனி வரும் ஆண்டுகளில் தனது பணியினை மேலும் பயனுள்ள முறையில் விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது. திட்டத்தின் முக்கியமான அம்சங்கள்:

இந்தியாவின் பல பகுதிகளிலுமுள்ள பவனத்தின் கேந்திரங்கள் ஒவ்வொன்றுக்கும் ஓர் இல்லம் எழுப்புவது;

பவனத்தின் ஆதரவில் நடக்கும் சம்ஸ்கிருதப் பரீட்சைகளின் நோக்கத்தை விரிவு படுத்துவது;

புத்தகப் பல்கலைக் கழகத்தின் பணியினை விஸ்தரிப்பது. இந்தியாவின் முக்கியமான மொழிகள் யாவற்றிலும் நூல் தொடர்கள் வெளியிடுவது;

இந்தியாவின் எல்லா முக்கியமான பாஷைகளிலும் 'பவன்ஸ் ஜர்னல்' தொடங்குவது;

இந்தியாவின் அரசியல் நிர்ணய அமைப்பைப் பற்றிய பூரண விவரங்களும் அடங்கிய 'முன்ஷி தொகுப்பை'ப் பிரகரிப்பது;

மொத்தத்தில் நமது பாரதத்தின் பெருமைகளைப் பாரதத்தில் மட்டுமின்றிப் பாரெங்கிலும் பரப்பும் முயற்சியைத் தீவிரமாக்குவது.

இந்த நற்காரியங்கள் நிறைவேற அங்கத்தினரும், தொண்டர்களும், நண்பர்களும் தேவை. முக்கியமாக இவற்றை நிறைவேற்ற நிரம்ப நிதி வேண்டும். இருபத்தைந்தாண்டு நிறைவை முன்னிட்டு 25 ரூபாயாகவோ, அதன் மடங்குகளாகவோ நிதி உதவலாம். ஆயிரம் ரூபாயும், அதற்கு மேலும் அளிப்பவர்கள் பவனத்தின் ஆயுள் அங்கத்தினராவார்கள். 500 ரூபாய் அளித்தால் பவனத்தின் நூல்நிலையத்தில் ஆயுள் அங்கத்தினராகலாம். நன்கொடை உதவுபவர்களுக்கும் பல அற்புதமான நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்படும். 'பொருளாளர், பாரதீய வித்யா பவனம், பம்பாய் - 7' என்ற விலாசமிட்டு நீங்கள் அனுப்பி வைக்கும் எந்தத் தொகையும் பாரதத்தில் உருவாக இருக்கும் பண்பு மாளிகையின் ஒரு செங்கல்லாகவோ, கதவாகவோ, சாளரமாகவோ, தூணாகவோ விளங்கும் என்பது நிச்சயம்.

''பாரதீய வித்தியா பவனம் வெறும் ஸ்தாபனம் மட்டுமல்ல; அது மாபெரும் இலட்சியமொன்றுக்கு அர்ப்பணமானதோர் இயக்கம். பவனத்தின் பணி பகவானின் பணி'' என்று அவர்களது விஞ்ஞாபனம் கூறுகிறது. பகவானின் பணியில் பங்கு பெறுமாறு நமது நேயர்களை யெல்லாம் கேட்டுக் கொள்கிறோம். இப்பணி ஆல்போல் தழைத்து, நாடு முழுவதற்கும் அன்பு என்ற நிழலையும், அறிவு என்ற மலரையும், ஆன்மீகம் என்ற கனியையும் அளிக்க வேண்டுமென வாழ்த்துகிறோம்.



ஆஹா என்ன ருசி...

எண்களின் நண்பர்

கனவில் கண் தெரிவது என்றால் அது அதிசயமாகத்தானே தோன்றுகிறது? ஆனால் அந்த அதிசயத்தையே அனுபவமாகக் கொண்டு நம் தமிழ் நாட்டில் ஒரு மாமேதை வாழ்ந்திருக்கிறார். அவர்தான் காலஞ்சென்ற ஸ்ரீ ஸ்ரீநிவாச ராமாநுஜன் அவர்கள். 'இப்படியும் ஓர் அதிசயமா! தூங்கும்போதாவது, கண் தெரியவாவது?' என்றுதானே ஆச்சரியப்படுகிறீர்கள்? கனவில் அவருக்குக் கிடைத்த பார்வை ஊனக் கண்ணுடையதல்ல. 'எண்ணும், எழுத்தும் மாந்தருக்கு இரு கண்கள்' என்று தமிழ் மறை கூறும் கணிதம் என்ற கண்ணைத்தான் ராமாநுஜன் அவர்கள் தமது கனவில் பெற்று வந்தார்.

ஸ்ரீ ராமாநுஜனுக்குக் கணிதக் கல்வியைக் கனவில் அளித்தது நாமக்கல்லின் அதிதேவதையாகிய நாமகிரி தேவிதான். இது அவரது வாய்மொழியாகவே நமக்குக் கிடைத்துள்ள செய்தியாகும்.

ராமாநுஜன் கண்ட கனவுகள் எத்தனை எத்தனையோ! அவை யெல்லாம் நனவாகு முன்பு, அவரது வாழ்க்கையே ஒரு கனவாகி அல்ப ஆயுளில் மறைந்து போனார் அந்த மேதை. இந்த டிசம்பர் 22ந் தேதி யன்று அவரது எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் போது அந்த வாழ்க்கைக் கனவு முழுவதும் நம் நெஞ்சை நிரப்புகிறது.

கனவுகளில் ராமாநுஜத்துக்குக் கணித நுட்பங்களைக் கூறிய அதே நாமகிரித் தாயாருக்கு அவரது தாய்வழிப் பாட்டனார் வேண்டுதல் செலுத்தித்தான் ராமாநுஜன் பிறந்ததே என்பார்கள். ஈரோட்டில் முன்சிப் அலுவலகத்தில் பணி புரிந்து வந்த தாய் வழிப் பாட்டனாரின் வீட்டில் 1887-ம் ஆண்டு டிசம்பர் 22-ந் தேதியன்று பிறந்தார் ராமாநுஜன்.

ஸ்ரீ வைஷ்ணவ அந்தணகுலத்தைச் சேர்ந்த அவருக்கு மதாசாரியரின் பெயரே சூட்டப் பெற்றது. அவரது தந்தை கும்பகோணம் ஜவுளிக்கடை யொன்றில் கணக்கராக இருந்து வந்தார். செல்வ நிலை சிறிதும் திருப்திகரமாக இல்லாத குடும்பம் அது. ஏழாவது ஆண்டில் 'கும்பகோணம் டவுன் ஹைஸ்கூலில்' சேர்ந்த போது ராமாநுஜன் பெற்றிருந்த அருள்விலாஸம் வெளிப்படலாயிற்று. அமைதியாகவும், சதா சிந்தனையாகவும் இருந்த பாலன் கணிதத் தேற்றங்களையும், சூத்திரங்களையும், சம்ஸ்கிருத தாதுக்களின் பட்டியல்களையும் சரமாரியாகப் பொழியலானான். அதோடு மட்டுமல்ல.

கணிதத்தில் வர்க்க மூலம் (square root) என்பது மிகவும் சிக்கலான ஓர் அம்சம். $4=2\times 2$; $9=3\times 3$ என்பதெல்லாம் நமக்குத் தெரியும். அதாவது 4ன் வர்க்கமூலம் 2; 9ன் வர்க்கமூலம் 3 என்பது எளிதில் தெரியும் விஷயம். எனினும் இதே போல 2-ன் வர்க்க மூலம் என்ன; எந்த எண்ணை அதனாலேயே பெருக்கினால் 2 என்ற விடை கிடைக்கும் என்று முறைப்படி காண உயர் கல்வி அவசியம். இப்படிக் கணக்குப் போட்டுப் பார்த்தால் 2-ன் வர்க்க மூலம் 1.41.... என்று எத்தனையோ தசமஸ்தானங்களுக்கு முடிவுறாமல் போகும். சிறுவன் ராமாநுஜனோ அநாயாசமாக எத்தனை தசமஸ்தானங்களுக்கு வேண்டுமானாலும் இரண்டின் வர்க்க மூலத்தைச் சொல்லிக் கொண்டே போவானாம். இதை அருள் விலாசம் என்றும் வரப்பிரசாதம் என்றும் சொல்வதைத் தவிர வேறெப்படி விளங்கிக் கொள்ள முடியும்? மேதை என்று சொல்வதும் இதனைத்தான். ராமாநுஜனே தன்னை மேதை என்று சொன்னதில்லை. நாமக்கல் தேவியாகிய நாமகிரி அம்மை சொப்பனத்தில் தோன்றித் தனக்குச் சூத்திரங்களை அருளியதாகவே சொல்லியிருக்கிறான்.

பன்னிரண்டாவது வயதிலேயே அவன் பூமத்திய ரேகையின் நீளத்தைக் கணக்குப் போட்டுக் கண்டுபிடித்திருந்த விடை அதன் உண்மையான நீளத்தை விட ஒரு சில அடிகள்தான் வித்தியாசப்பட்டிருந்தது என்றால் விந்தையாக இல்லை?

பதினைந்தாவது வயதில் ராமாநுஜன் தனது ஆற்றல்களை வெளிப்படுத்தும் அரிய தூண்டுகோலான ஒரு கணித நூலைக் கண்டான். கார் என்பவர் எழுதிய Synopsis of Pure Mathematics என்ற அந்தப் புத்தகத்தை நண்பர் ஒருவர் ராமாநுஜனுக்கு வழங்கினார். அது ராமாநுஜனின் மின்சார அறிவு பல அரிய சுடர்ப் பொறிகளை உதிர்க்க உதவிற்று. அதில் கண்டிருந்த விஷயங்கள் அவனுக்குப் புரிந்ததோடு மட்டுமின்றி, அவற்றை ஆதாரமாகக் கொண்டு மேலும் பல கணித நுணுக்கங்களையும் ராமாநுஜன் கண்டு கொண்டான். அதிலிருந்த குறிப்பு ஒவ்வொன்றும் சரியா என்று தானே நிரூபித்துப் பார்த்துப் பரவசமடைந்தான் அவன்.

கனவில் தான் கண்ட சூத்திரங்களைக் காலையில் எழுந்தவுடனே குறித்துக் கொண்டு அவற்றைச் சரி பார்ப்பான் ராமாநுஜன். எப்போதுமே அவனால் முறைப்படி நிரூபணம் செய்ய முடியாது. எனினும் சரியான விடை மட்டும் கிட்டி விடும். சில சமயங்களில் இந்த விடைகளும் தவறாக இருந்ததுண்டு. இந்தக் கனவுக் கல்வி ராமாநுஜத்தின் ஆயுள் இறுதி வரை பல முறை நிகழ்ந்ததுண்டாம்.

பதினாறாவது வயதில் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற ராமாநுஜன் 'சுப்பிரமணியம் ஸ்காலர்ஷிப்' பெற்றுக் கும்பகோணம் கல்லூரியில் சேர்ந்தார். கணிதம் ஒன்றில் மட்டுமே அவர் முழு கவனத்தையும் செலுத்தி மற்றப் பாடங்களைப் புறக்கணித்ததால் கல்லூரிப் பரீட்சையில் தேறவில்லை. 'ஸ்காலர்ஷிப்'பையும் இழந்தார். 1909ம் ஆண்டில் திருமணமும் ஆகிவிட்டது. வேலை வேட்டையில் இறங்கினார் ராமாநுஜன். திருக்கோவலூர் டிபுடி கலெக்டர் ராமஸ்வாமி அய்யர் அவர்களிடம் தமக்கு 'கச்சேரி'யில்

குமாஸ்தா வேலை போட்டுத் தருமாறு அணுகினார். அய்யர் அவர்கள் கணிதத்தில் ஆராய்ச்சியாளராவார். எனவே ராமாநுஜனின் கணிதக் குறிப்புகளைக் கண்டு வியந்த அவர், ''நானுங்கூட ஆபீஸ் குமாஸ்தாவானால் உலகத்துள்ள கணித ஆராய்ச்சிச் சக்தி போய் விடும். அந்தப் பாபத்துக்கு நான் ஆளாகமாட்டேன்'' என்று கூறினார். ராமாநுஜனுக்குரிய இடத்தை வலைவீசிப் பார்த்தார். சென்னை மாநிலக் கல்லூரி (Presidency College) யின் கணிதப் பேராசிரியர் பி. வி. சேஷு அய்யர் அவர்களுக்கு ஒரு பொரிகைக் கடிதத்துடன் ராமாநுஜனை அனுப்பி வைத்தார்.

கணிதத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்த நெல்லூர் கலெக்டர் ஆர். ராமச்சந்திர ராவ் அவர்கள் ராமாநுஜத்தின் ஆராய்ச்சிகளைக் கண்டு மலைத்துப் போனார். இத்தகைய அறிவுக் களஞ்சியமாகிய ராமாநுஜன் புகழையோ பொருள் பதவியையோ நாடாமல் சிறியதொரு உத்தியோகத்தை நாடியது கண்டு அதைவிட மலைத்துப் போனார்.



ராமாநுஜனுக்கு மாதாமாதம் அன்பளிப்பாக ஒரு தொகை அனுப்பி வந்தார். திருவல்லிக்கேணி சாமிப் பிள்ளைத் தெருவில், ஒரு சிறிய சந்தில், 'ஸம்மர் ஹவுஸ்' என்று பெயர் கொண்ட வீட்டில் ஓர் அறையில் உணவுக்குப் போதுமில் ஒருவராகிய ராமாநுஜன் வசிஞராக, ஆடக்து விளக்காக ஆராய்ச்சி செய்து வந்தார்.

அப்போது ராமாநுஜனுக்கு வயது இருபத்தைந்து. நண்பர் ஸ்ரீநிவாசன் அந்த 'ஸ்ரீநிவாஸ'ப் பாராட்டுக் கொண்டிருந்தார். ''ஸ்ரீநிவாஸனாவது இன்னொன்றுவது. ஜீவியனின் கையைப் பார்'' என்று நண்பரிடம் கையை நீட்டினார் ராமாநுஜன். முழங்கைக்குக் கீழ் சொரசொரத்தும், தடித்தும், தன்மைத்தும், தழும்பேறியும் போயிருந்தது அவரது கை. நண்பருக்கு விஷயம் புரியவில்லை. ''இந்த ஜீவியன் இரவு பகல் பாராமல் சிலேட்டில் கணக்குகள் போட்டான். சிலேட்டில் எவ்வளவு கொள்ளும்? திரும்பத் திரும்ப அழித்ததின் காய்ப்புக் காய்த்துப் போச்சு, அப்படியே'' என்று விளக்கினார் ராமாநுஜன்.

ஏன் அப்படி சிலேட்டில் கணக்குப்போட்டு அழித்திருக்க வேண்டும், காகிதங்களில் போட்டிருக்கக் கூடாதோ என்கிறீர்களா? ஆகா, சாப்பாட்டுக்கே வழியில்லாமல் திண்டாடிய ராமாநுஜனால் காகிதம் வாங்கிச் சாத்தியப்படுமா? அதுவும் அவருடைய ஆராய்ச்சிக்கு வாரா வாரம் நாலு 'ரீம்' அல்லவா வேண்டும்?

'சாப்பாட்டுக்கு ஏன் திண்டாடவேண்டும்? நெல்லூர் கலெக்டர் ராமச்சந்திர ராவ் நன்கொடை உதவி வந்தாரே!' என்று எண்ணுகிறீர்களா? மானஸ்தரான ராமாநுஜன் எத்தனை காலம் இவ்வாறு யாசகத்தில் ஜீவனோபாயம் தேடிக்கொள்வார்? ராவ் அவர்கள் உதவி தொடங்கிச் சில காலத்துக்குப் பின் அவரது மணி ஆர்டரையே திருப்பிவிட்டார் ராமாநுஜன்.

கணித மேதை ராமாநுஜத்துக்கு அப்புறம் ஓர் உத்தியோகமே கிடைத்து விட்டது. மாதம் முப்பது ரூபாய் சம்பளத்தில் சென்னை 'போர்ட் டிரஸ்டி'ல் குமாஸ்தாவாக அமர்ந்துவிட்டார். ஆராய்ச்சி பாட்டுக்குத் தொடர்ந்தது. அவரது இருபத்தி நாலாவது வயதில் இந்திய கணித சங்கச் சஞ்சிகை (Journal of the Indian Mathematical Society) யில் முதல் ஆராய்ச்சிக் கட்டுரை பிரசுரமாயிற்று. அடுத்த ஆண்டில் மேலும் இரண்டு கட்டுரைகள் பிரசுரமாயின.

ராமச்சந்திர ராவ் அவர்களின் தூண்டுதலின் பேரில் சென்னை பொறி இயல் கல்லூரியைச் சேர்ந்த கிரிஃபித் அவர்கள் ராமாநுஜத்தின் ஆராய்ச்சிகள் தடைபெறாது நடைபெற்று உலகுக்கு வர உதவினார். சேஷு அய்யர் முதலானோர் ஊக்குவித்தன் மீது கேம்பிரிட்ஜ் ட்ரினிடி கல்லூரியைச் சேர்ந்த ஜி.எச். ஹார்டி என்ற அறிஞருடன் ராமாநுஜன் கடிதத் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார். ராமாநுஜனின் கடிதத்தில் கண்டிருந்த அவரது கணிதக் கண்டுபிடிப்புகளைப் பார்த்து ஹார்டி அசந்துபோய் விட்டார். 'அவற்றில் ஒரு நோட்டம் விட்டாலே அதி உன்னத கணித நிபுணராலேதான் இத்தகைய முடிவுகளைக் காண இயலும் என்பது தெரியும்' என்று ஹார்டி எழுதியிருக்கிறார். ''ஐரோப்பாவின் தலைசிறந்த கணித நிபுணர்கள் நூறு ஆண்டுகளாகத் தீர்க்க முயன்று இன்னமும் முடிவு காணாத கணக்குகளைப் பற்றி, முறைவிதமான உபகரணமுமில்லாத ராமாநுஜன் கனவு கண்டிருந்தால் கூட அது அற்புதமானதே'' என்கிறார் அவர். ராமாநுஜன் கண்ட கனவே அவ்வாறானது என்பதை அவர் அப்போது அறிந்திருப்பாரா?

வானியல் இலாகாத் தலைவர் ஜி. டி. வாகர், சென்னை பல்கலைக் கழகம் ராமாநுஜத்துக்கு உபகாரச் சம்பளம் அளிக்க வேண்டுமென வற்புறுத்தினார். எனினும் இவ்வாறு உபகாரச் சம்பளம் பெற விரும்பும் ஆராய்ச்சியாளர் எம். ஏ. பட்டம் பெற்றிருக்க வேண்டும் என்று விதி இருப்பதாகத் துணை வேந்தர் கூறினாராம். அப்போது ஜஸ்டிஸ் சுந்தரம் அய்யர் அவர்கள் 'இது பல்கலைக் கழகம் செய்த விதிதானே! விதியையே மாற்றிவிடலாம்' என்று அபிப்பிராயம் தெரிவித்தாராம்.

எப்படியோ ஒரு வழியாக நண்பர்களின் உதவியுடன் 1913ம் ஆண்டு ராமாநுஜன் 'போர்ட் டிரஸ்ட்' குமாஸ்தா வேலையிலிருந்து கழன்றார். அவரைக் கேம்பிரிட்ஜுக்குத் தருவித்துவிடுவதென்று ஹார்டி முழு மூச்சுடன் நின்றார். கடல்கடந்து அந்நியர் சீமை செல்லத் தன் அம்மா அனுமதிக்க மாட்டாள் என்று கூறி முதலில் அழைப்பை நிராகரித்துவிட்டார் ராமாநுஜன். பெயரையும், பதவியையும், புகழையும் திருணமாக மதிக்கும் எத்தகைய மானுடப் பண்பு பாருங்களேன்!

ஆனால் அந்த அன்னையின் அனுமதியும் அபூர்வமான முறையில் கிடைத்து விட்டது. ஒரு நாள் காலை அவள் சொன்னாள்: ''நேற்று ராத்திரி எனக்கு ஒரு கனவு. வெள்ளைக்காரர்கள் பலர் சூழ ராமாநுஜன் ஒரு பெரிய ஹாலில் உட்கார்ந்திருக்கிறான். அந்தக் காட்சி மறைகிறது. நாமகிரித் தாயார் தோன்றுகிறாள்: 'உன் பிள்ளை தான் பிறவி எடுத்ததன் பயனைப் பெறுவதற்குக் குறுக்கே நில்லாதே' என்று எனக்குக் கட்டளை யிடுகிறாள்'' என்று.

அப்புறம் என்ன? ராமாநுஜன் இங்கிலாந்துக்குச் சென்று டிரினிடி கல்லூரியில் ஹார்டியுடன் சேர்ந்து ஆராய்ச்சியில் புரிய லானார். அப்போது அவருக்கு வயது இருபத்தி யேழு. சென்னைப் பல்கலைக் கழகம் அவருக்கு 250 பவுன் வருஷாந்தர உபகாரச் சம்பளம் வழங்கியது. இதில் 50 பவுன் அவரது குடும்பத்துக்காக ஒதுக்கப்பட்டது. டிரினிடி கல்லூரியும் 60 பவுன் வருஷாந்தரசம்பளம் உதவிற்று.

ராமாநுஜன் கணித சாகரத்தில் திளைக்கலானார். முறைப்படி கல்வி பயிலாத ராமாநுஜனுக்கு—ஆங்கிலத்தில் போதிய தேர்ச்சி யில்லாத ராமாநுஜனுக்கு—க் கணித சாஸ்திரத்தைத் திட்டமிட்டுப் போதிக்க வேண்டி நேரிட்டது. ராமாநுஜன் தாமாகச் சில முடிவுகளைக் கண்டார்; வேறு சிலவோ அவையாகவே ஸ்புரித்தன. இப்படிப்பட்ட மேதையை உலக வழக்குக்கிசையப் பயிற்றுவிப்பது அவ்வளவு எளிதாக இல்லை. எப்படியோ ஒருவாறாக அவருக்குக் கணிதத்தை சாஸ்திரீயமாகக் கற்பித்த ஹார்டி 'நான் அவருக்குக் கற்பித்ததை விட, அவரிடமிருந்து கற்றதுதான் அதிகம்' என்கிறார்.

ராமாநுஜன் மதநம்பிக்கை மிக்கவர். இங்கிலாந்திலும்கூட அவர் தாமேதான் சமையல் செய்துகொள்வாராம். மரக்கறி உணவு தவிர வேறு எதையும் நினைக்கக்கூட மாட்டாராம். எவ்விதமான ஊண் சத்தும் தம்மிடம் சேராமல் தடுத்தே அவர் தமது மறுமையை விரைவு படுத்திக் கொண்டார் என்று சொல்வதுண்டு.

கேம்பிரிட்ஜில் எண்களே எண்ணமாக எண்ணரிய ஆராய்ச்சி புரிந்து வந்தார் ராமாநுஜன். ஒவ்வோர் எண்ணும் அவரிடம் தன்னைப் பற்றிய ஓர் இரகசியக் கதையைச் சொல்லிக் கொள்ளும். மற்றவர்கள் பல ஆண்டுப் படிப்பினால் காணுவதையெல்லாம் இலக்கங்களிடம் தான் கொண்ட இயல்பு நட்பினாலேயே அறிந்தார் ராமாநுஜன். அவர் நோய்வாய்ப்பட்டிருந்தபோது அவரை ஒரு முறை காணச் சென்ற ஹார்டி தான் வந்த டாக்ஸியின் இலக்கம் 1729 என்றும், அதில் விசேஷமாக ஒன்றும் இல்லை என்றும் கூறினாராம். ஆனால் ராமாநுஜனின் இதயத்தில் அந்த இலக்கமும் தன் தனித்தன்மையை அந்த நொடியிலேயே சொல்லி விட்டது. 1729 என்பது ஒன்றோடு $12 \times 12 \times 12$ சேர்ந்ததாகும். அதாவது $(1 \times 1 \times 1) + (12 \times 12 \times 12)$ இதே 1729 என்பது $(10 \times 10 \times 10) + (9 \times 9 \times 9)$ம் ஆகும். இப்படி இரு வேறு இலக்கங்களின் மூன்றாவது வர்க்கக் கூட்டுத் தொகையாக இருக்கும் பொது எண்களில் 1729தான் மிகச் சிறியது. இந்த உண்மை மாத்திரத்தில் ஹார்டியிடம் கூறி விட்டாராம் ராமாநுஜன்.

ராமாநுஜன் நோய்வாய்ப்பட்டதாகச் சொன்னேனல்லவா? மிகவும் கொடிய காச நோய்தான் அவரைப் பீடித்து விட்டது. எனவே, அவரைச் சென்னைக்கே அனுப்பி விட நேரிட்டது. அப்போது டிரினிடி கல்லூரியானது ராமாநுஜனிடமிருந்து எவ்விதப் பிரதி பலனையும் எதிர்பாராமல், எவ்வித நிபந்தனையும் விதியாது ஆண்டுதோறும் 250 பவுன் வழங்க முடிவு செய்தது. ஆங்கிலேயர்களின் பண்புக்குச் சொல்லவும் வேண்டுமோ? வேண்டியதில்லைதான். இல்லாவிடில் ''கணித இயலில் இவர் ஒரு புதையல் செல்வம். இவருக்கு இந்தியா எல்லா உதவிகளையும் அளிக்க வேண்டும்'' என்று ஆங்கிலேய ஹார்டி நம் நாட்டைச் சேர்ந்த ஒருவருக்காக நம் நாட்டுக்கே கோரிக்கை விடுப்பாரா?

சென்னைப் பல்கலைக் கழகமும் மிகுந்த பெருந்தன்மையுடன் அவருக்கு 250 பவுன் வருஷாந்திர சன்மானம் அளித்து அவர் மீண்டும் ஐரோப்பா போக விரும்பினால் அதற்குரிய செலவுகளை மேற்கொள்ள முன் வந்தது. அப்போது — அது 1918ல் — இங்கிலாந்திலிருந்து ராமாநுஜன் எழுதினார்: ''இவ்வளவு பணத்தை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது? என் தாய்க்கு ஓராண்டுக்கு 50 பவுன் போதும். எனக்கும் என் மனைவிக்கும் 75 பவுன் போதும். மீதியை நான் சென்னை வந்தபின் ஏழை மாணவர்களுக்கு உதவுமாறு ஒரு திட்டம் வகுக்க வேண்டும்'' என்று. பொருளில் ஏழையாகவும் அருளில் கோமகனாகவும் வாழ்ந்தே மாண்டவர் அவர்.

1918ல் நோய் சற்று குணமானதுபோல் இருந்தது. அப்போதுதான் அவரது ஆராய்ச்சித் திறன் சிகர ஜோதியாக ஒளிர்ந்தது. ராயல் சொஸைட்டி என்ற மகத்தான ஸ்தாபனத்தின் வரலாறு கண்டறியாத புதுமையாக முப்பத்து ஒன்றே ஆண்டு நிரம்பிய ராமாநுஜன் அதன் கௌரவ அங்கத்தினராக (Fellow) தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தப் புகழுடன் 1919ல் தாயகம் திரும்பிய ராமாநுஜன் 1920ம் ஆண்டு ஏப்ரல் மாதம் புகழுடம்பு எய்தினார்.

பூமிப்பந்தின்மேலே வையத்து உயிர் வாழ்ந்து மறைந்த மாமேதைகள் பலர், பல துறைகளில் உண்டு. கணிதத் துறை ராமாநுஜன் அவர்களுடன் இடம் பெற்று விட்டார். ராமாநுஜன் மறைந்து விட்டார். அவர் ஆற்றிய பணி மறைவதில்லை. இன்னும் அது பூரணமாக நிறைவுபெறவில்லை. அருள் பெற்ற அமரர் ராமாநுஜன், நம் குறிப்புக்களை ஆராய்ந்துவரும் ராமாநுஜன் இன்ஸ்டிட்யூட்டில் பல அருள் பெற்ற ஆராய்ச்சியாளர்கள் தோன்றித் தம் பணியை நிறைவு செய்ய ஆசி கூறுவாராக!

[இந்தக் கட்டுரையில் காணப்படும் குறிப்புக்கள் பலவற்றைத் தந்துதவியவர் பேராசிரியர் எஸ். ஆர். ரங்கநாதன் அவர்கள்.]


இண்டியன்
ஏர்லைன்ஸ்
கார்ப்பொரேஷன்
ஆல்வின்
ஸ்டீல் பர்னிசர்களை உபயோகப்படுத்துகிறது
ஆல்வின் பைலிங் கேபினட்டுகள், டிராயர்களுடன் கூடியவை. தங்கு தடையின்றி இழுத்து, பின்பு மூடுவதற்கு ஏற்ற வகையில், இவை சிறிய தண்டவாளங்களின் மேல் பொருத்தப்பட்டிருக்கின்றன. அல்லது ஆல்வின் பால் பேரிங்குகளின் மேல் ஏற்றப்பட்டிருக்கும்.
அழகிய ஆல்வின் ஸ்டீல் பர்னிசர் ரகங்களில் எக்ஸிகியூடிவ் டெஸ்க்குகள், ட்யூபுலர் நாற்காலிகள், யுடிலிடி கேபினட்டுகள் ரேக்குகள், பூட்டுள்ள பீரோக்கள், டிரேக்கள், குப்பைக் காகிதக் கூடைகள் முதலியன கிடைக்கும்.
ஹைதராபாத் ஆல்வின் மெடல் வொர்க்ஸ் லிட்.,
ஸனத்நகர், ஹைதராபாத்.
ASP/HAM-F-3 TAM
ஷோரூம்கள்: 150A, விஸ்ராந்தி மேன்ஷன், மவுண்ட் ரோடு, சென்னை - 268, பிரஞ்ச் ரோடு, பம்பாய்-7 - 8A சௌரிங்கி பிளேஸ், கல்கத்தா 15/1, அஸப் அலி ரோடு, புது டில்லி - 216, கன்பவுண்டரி, ஹைதராபாத் - 14/6, தி மால், கான்பூர்

பெண்தான்!

ஆர். சூடாமணி



அட்டைப்படக் கதை

"பையனைக் கலந்தாலோசித்துச் சீக்கிரமே சொல்லியனுப்புங்கள்."

வந்தவர்கள் எழுந்து சென்றனர். விசாலம் நகராமல் அங்கேயே உட்கார்ந்திருந்தாள்.

சிலையான வடிவத்தில் நெஞ்சு மட்டும் அலை பாய்ந்தது. பொங்கிப் பொருமும் உள்ளத்தில் இருளின் அமைதியும் இல்லை, ஒளியின் தெளிவுமில்லை. ஆழப் பாய்ந்த காயத்தினின்று அமுக்க அமுக்க ரத்தம் பீறிட்டுக் கசிவது போல், மூச்சு விடும் கணந்தோறும் நெஞ்சில் சென்ற காலத்தின் தேக்கம் வேதனையாய்ச் சுழலிட்டுச் சூழ்ந்தது.

வேதனை எதற்கு? ராதாவின் மறைவு குறித்தா? துன்பத்தின் அச்சாணிவிட்ட சோமுவின் இருப்பைக் குறித்தா?

மறைவில் வேதனை ஏது? அடிமற்ற அந்தரங்கத்தில் மூழ்கிவிட்டு முடிவற்ற மர்ம வெளியில் மறைந்துபோகும் உயிர். வேதனை மண்ணை நீத்து வானின் ஒளியாகி விடுகிறது. அந்த உயிரினிடம் பற்றுக் கொண்டு அப்புத்தி மிதித்த எஞ்சியுள்ள ஜீவன்கள்தாம் அந்த ஒளியின் வெறும் நிழலை மண்ணில் கண்டு அதைப் பற்ற முடியாமல் தடவிக்கொண்டு இழைப்பவை.

ஒவ்வொரு சமயம் விசாலத்துக்குத் தோன்றும், இனியும் சோமுவின் துன்பத்தைத் தன்னால் பார்த்துச் சகிக்க முடியாது என்று.

வெள்ளி பரப்பும் நிலா முற்றத்தில் அவன் அனல் மேல் கிடப்பது போல் துவண்டு சூழலும் கோலம். வீணையைப் பார்த்து அதன்மேல் இனியும் வருடாத விரல்களை எண்ணி நடை தடைப்பட்டுக் காலெடுத்த நிலையிலேயே அவன் உறைந்து சிலையாகும் காட்சி; காற்றுட வெளியில் உலவி விட்டு, அருகில் தொடரும் சூனியத்திலே நின்று எரிக்கும் பழைய உருவமொன்றின் நினைவினூல் காற்றெல்லாம் கனலாகி வியர்வை பொங்க விடும் இரும்பும் நிலை.

இவற்றை யெல்லாம் எத்தனை நாட்கள் தான் பார்த்திருப்பது? சதையின் சதையைப் பார்த்துப் பெற்ற வயிறு எரிந்தது.

ஆறுதலாய் ஒரு சொல் கூற நினைப்பாள்; ஆனால் அவனை நெருங்க முடியவில்லை. சதையின் சதையானாலும் என்ன? உடலினின்று உடல் வேறான பிறகு மகன் என்ற உறவை மட்டும் பற்றுவது எப்படி? அந்த உறவு நுட்பமாய்க் கிளை பிரித்துக் கொண்டாலி

விட்டது. திருமணம். இன்பம். இனிமைக் கனவுகள். இளம் நம்பிக்கை. கடைசியில் மாறாத பிரிவு - இத்தனையையும் உணர்ந்து விட்ட அவன் அவளது மகன் மட்டுமல்ல, ஒரு மனிதன்; ஒரு பூரண ஆளுமையுள்ள, வாழ்வில் அடிபடித்த ஜீவன். படித்தறிந்து அறிந்தியாய்க் கைச்சின்னங்கள் பட்டுக் கசங்கிப் புதுப் புத்தகம் மதிப்புப் பெறுவது போல் வாழ்க்கை உழுத கோடுகளால் அந்த இருபத்தைந்தே வயதான உள்ளம் சட்டென்று முதிர்ந்து ஒரு தூலப் பொருளாகி விட்டது. அத்தகைய உள்ளத்தைத் தைரியமாய்த் தீண்டுவது எப்படி?

பார்த்துப் பார்த்து அவனை குமுறினாள்.

திடீரென்று ஏதோ ஞானம். முன்பே நாட்களின் ராதா வெறும் நினைவாகி விட்டாள். அவள் சிரிப்பும், வடிவமும் ஒரு வெறுமையாய்க் கண்ட ஒரு நீண்ட கனவே போல் உணர்வின் அடி இடுக்குகளில் உருவின்றிக் கலந்து விட்டன.

யாருக்கும் எதுவும் சொல்லத் தோன்றவில்லை. பித்தனைப் போல் நின்ற அவனைப் பார்க்கவே தாயார் கூசித் தலை கவிழ்ந்தாள்.

மாலை வேளையில் ஓய்வு அதிகம். இருவரிடையே விழும் மௌனத்தில் அண்டம் அதிர்ந்துவிடும். பேச்சாக நெஞ்சம் பீறிடும் போன்ற வேகத் துடிப்பு அம்மௌனத்தின் விளிம்பினிடை தோன்றத் தொடங்குகையில் அவன் எழுந்து சென்று விடுவான். அவளும் ஆவேசத்துடன் ஆறுதல் கொள்வாள். அவன் எங்குதான் போவானோ? இரவு பத்துமணிக்குத்தான் திரும்புவான். வாய் பேசாமல் சாப்பிட்டு விட்டுப் படுக்கப் போய் விடுவான். இரவின் இந்த நியதிக்கு நன்றி கூறிக் கொண்டே அவளும் நித்திரை என்ற சாக்கில் இருளில் முகம் கவிழ்த்துச் சிந்தை கனத்து விரசமயமாயும் விழித்திருப்பாள்.

அவன் அறையில் பெட்டிக்குள் ராதாவின் தனிப் படம். பெரிதாக்கப்பட்டது. சிறிய அளவுகளில் அவளும் அவனும் ஜோடியாய் எடுத்துக் கொண்ட எத்தனையோ தோற்றங்கள். மாலையுடன் விளங்கிய திருமணப் படங்களின் மேல் அவன் கண்கள் நீர் மல்கிப் பதியும் துடிப்பின் கனலை, மூடிய கதவையும் மீறி அந்தத் தாயார் அறிவாள்.

பெட்டி நிறைய* இன்னும் ராதாவின் உடைகள், உடைமைகள். அவன் பிடியுள் அவற்றின் வெறுமை.

போனவர்களுக்காக அல்ல வேதனை; இருப்பவர்களுக்காகத்தான்.

''சோமு!''

எத்தனை தாபம் உதடு வரையில் வழிந்து விட்டது!

''என்னம்மா?''

இதைச் சொல்லும் தொனியிலேயே அவன் ஏதோ ஒரு கதவைச் சாத்தி விட்டது போல் தோன்றும். தவிப்பும் துயரும் இயல்பு நடப்பில் அமிழ்ந்து நெஞ்சின் மேல் திரை போர்த்தும்.

''ஒன்றுமில்லை. ரசத்தில் உப்பு சரியாக இருக்கிறதா?''

''ம்.''

ஒரு சிறு சத்தம்தான். புயலும் அதுவே, மூலகமும் அதுவே. பூட்டில் சாவியை மடக்கும் இறுதி ஒலி.

அவன் மௌனியாவான்.

''சோமு! நீ அந்தப் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளக் கூடாது'' என்று தடுத்தவள் அவள்.

''என் விருப்பத்துக்குத் தடை சொல்லாதே அம்மா!''

''என்டா, அப்படியானால் என் விருப்பம் ஒரு பொருட்டே இல்லையா? தகப்பன் இல்லாக் குழந்தை என்ற குறை உனக்குத் தெரியாமல் வாழ்வோடு மல்லுக் கொடுத்து என்னுடைய உடலை அழித்து உன்னை மனிதனாக்கினேனே!''

''அதற்குப் பிரதியாய் என் சந்தோஷத்தைப் பலி கேட்கிறாயா?''

வயது வந்த மகனின் வாயினால் கேலியுற்றுப் பிறகு மறந்துவிடக் கூடிய கேள்வியா அது? விசாலம் புண்பட்ட நெஞ்சோடு அவனைப் பார்த்தாள்.

''சோமு! கடைசியில்.... இது என்ன பேச்சடா?'' குரல் உடைந்து விட்டது.

''அம்மா, இதோ பார்.'' அவன் அவள் அருகில் வந்து பொறுமையாய்ச் சொன்னான். ''நீ என்னைச் சிரமப்பட்டு வளர்த்த அருமைத் தாய்தான். நான் மறுக்கவில்லை. என் அன்பும் மரியாதையும் பக்தியும் உதவியும் உனக்கு என்றும் உரியவை. ஆனால் இது வேறு விஷயம்.''

''என்னடா, வேறு விஷயம்?'' என்றாள் அவள் ஆக்ரோஷமாக.

''உயிர் கொடுத்தவள் நீ. உயிரைக் கேள், தருகிறேன். என் உடலை வளர்த்தாய் நீ. ஆனால் உள்ளம் என் சொந்தம். அதை நான் என் இஷ்டப்பட்டவர்களுக்குத் தருவதை நீ தடுக்க முடியாது.''

சட்டென்று அதிர்ந்து மௌனத்தில் ஆழ்ந்து விட்டாள் அவள். தாயின் ஸ்தானத்தைச் சுற்றி மங்கலான ஒரு வரையறை. அதைத் தாண்டி ஒலிக்கும் கட்டளை தன்னைக் கட்டுப்படுத்தாது என்று சொல்லாமல் சொல்லி விட்டவனின் முன் தனது எல்லையில் ஒதுங்கிக் கொண்டாள்.

''நீ ஒன்றும் கவலைப்படாதே, அம்மா. அந்தைக்கும் உனக்கும் உள்ள மனஸ்தாபம் நம்முடைய வீட்டின் அமைதியை ஒரு நாளும் குலைக்காது.''

அவன் குறிப்பிட்ட மனஸ்தாபத்தின் விவரம் இதுதான்: விசாலத்தின் இளவயதுச் சம்பவம். வறுமை நிலை. வியாதியில் விழுந்த கணவன். கையில் ஆறு மாதக் குழந்தை. அந்த நிலையில் தூரத்து உறவு தானே என்று கூசி ஒதுங்க முடியுமா? ஒன்று விட்டதுதான் என்றாலும் நாத்தி முறை. இளம் பெண் விசாலம் கையை நீட்டித்தான் விட்டாள் அந்த நாளில்.

ஆனால் பணம் படைத்த குரல் சொன்னதென்ன? ''அடிக்கடி இப்படித்தான் உடம்பு உடம்பென்று சொல்லி அவன் பணம் பிடுங்குவான். உழைக்க வணங்காத சரீரம். அவனுவுக்கு ஒரு உடம்புமில்லை.''

அம்முறை தற்செயலாக விசாலத்தின் மாங்கல்யம் தப்பியது. ஆயினும் ஆபத்தில் உதவாத உறவை நினைத்து அவள் நெஞ்சில் ஊறிய விஷம் தணியவே இல்லை.

சோமு மட்டும் அந்த உறவை மதித்தானா என்ன? பிறர் கையை எதிர்பாராத

உங்களால் ஆன உதவி

அகவிலை உயர்வைத் தணியுங்கள்



அதிகம் உற்பத்தி செய்யுங்கள்

அதிகம் உழையுங்கள். உற்பத்தியை அதிகரியுங்கள். வேலையில் தாமதத்தை தவிருங்கள் ஒழுங்காகவும், நேரப்படியும் வேலைக்கு வாருங்கள். இக் கூடுதல் முயற்சிகளினால் அதிகம் உற்பத்தி கிடைக்கும். நம் சண்டையிடும் சக்தியை பலப்படுத்தும்.



அதிகம் விளைவு செய்யுங்கள்

வயல்களிலிருந்து வளம் பெருக்குங்கள். உற்பத்திப் பொருள்களை நியாய விலைகளில் விற்பனை செய்யுங்கள் யாவருக்கும் உணவு கிடைக்கும். யாரும் விரையம் செய்யக் கூடாது.



குறைவாக செலவழியுங்கள்

அவசியத் தேவையை மட்டும் வாங்குங்கள். வேண்டாத செலவுகளைத் தவிருங்கள். கொண்டாட்டங்கள் அல்லது விருந்துகள் வேண்டாம்



அதிகம் சேமியுங்கள்

உங்களால் முடிந்த அளவு சேமித்து, புதிய பாதுகாப்பு சேமிப்புப் பத்திரங்களில் முதலீடு செய்யுங்கள் நீங்கள் அதிகம் சேமிக்க சேமிக்க நாட்டின் பாதுகாப்புச் சக்தி பலம் பெருகுகிறது. துரித வெற்றிற்கு வழி கோலுகிறது.



விலை வாசியை கட்டுப் படுத்துங்கள்
வெற்றி முன்னணிக்கு வழிகோலுங்கள்

ஜெய் ஹிந்த்

DA 62/595

சுயமதிப்போடு வளர்ந்து பெற்றவனுக்குப் பெருமையளித்திருந்த மகன்தான் அவன்.

ஆனால் திடீரென்று ஒரு நாள் உறவு புது வலிமை கொண்டு முளைத்தெழுந்தது. விசாலம் திரும்பிப் பார்த்தபோது மகன் தன்னைத் தாண்டிக் கொண்டு காளைப் பருவத்தில் நிற்பதைக் கண்டாள். புது உறவில் துளிர் விட்டவாறு எதிரே நிறைந்தது அத்தை மகளென்ற ஓர் அழகு வடிவம்.

''நான் ராதாவைத் தவிர வேறு யாரையும் மணக்க மாட்டேன் அம்மா.''

நெஞ்சை விழுங்கிக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது கடைசியில். நாத்தியும் அப்படித்தான் வெள்ளத்துக்குப் பணிந்து விட்டாள் போலும். அவள் இருப்போ, அதிகாரமோ ஏதும் உணர்வாகவில்லை. எதிர்த்துத்தான் இருப்பாள். ஆனால் ராதாவின் விருப்பம் மேலோங்கி விட்டது. வாலிப உள்ளங்கள் தீர்மானத்தைத் தமக்குள் முடித்து விட்டன. ஒன்றுக்கொன்றென அமர்ந்த இரு புன்னகைகளின் அதிகாரத்தில் பெரியவர்களின் நிழலுக்கே இடம் இருக்கவில்லை.

வேண்டாத நாத்தியின் மகள் தன் மருமகளாய் வீட்டில் காலடி எடுத்து வைத்த பின் விசாலம் தன் பக்தி நூல்களுடன் அறையில் விலகி விட்டாள். ஆனால் நெஞ்சம் பொங்கித் தவித்தது. சிரிப்பைக் கேட்ட காதுகள் அழுதன. இளம் ஜோடியின் இணைந்த வாழ்வைப் பார்த்த கண்களில் நட்பு இல்லை. ஒன்றாகச் சிரிப்பு எழும். இரு இளங் குரல்களிடையே வேடிக்கைப் பிணக்குகள் ஒலிக்கும். கொஞ்சு மொழிகள் மெத்தென முணுமுணுக்கும். இணை பிரியாத இரு வடிவங்கள். வீட்டில் மட்டுமா? வெளியில் செல்லும்போதும் சோமுவும் ராதாவும் கைகோத்துக் கொண்டுதான் செல்வார்கள். உற்றுப் பார்க்கும் ஜனங்களிடையே உழல்வதல்ல அவர்கள் கவனம். சினிமா என்ன, கடற்கரை என்ன, கடைகள் என்ன, தோட்டங்கள் என்ன! வாழ்வே இன்பச் சதிராட்டம் என்பது போன்றதொரு இணைக் களிப்பில் கையோடு கை பிணைத்துச் சிரிப்போடு சிரிப்பு இசைந்து அவர்கள் இரவு நெடுநேரம் கழித்து வீடு திரும்பி வரும் உல்லாசக் கோலத்திடையே விசாலத்தின் தீப் பார்வை விழுந்து தனக்குள்ளாகவே வெந்து போகும்.

''ராதா!''

''என்ன, அசட்டு அம்மாஞ்சி?''

''அடி அத்தை மகள் ரத்தினமே. கிண்டலா செய்கிறாய்?''

''இருக்கட்டும். அதென்ன அத்தர் மணம் ஜமாய்க்கிறது. ஐயாவிடம்? மைனர் என்று எண்ணமோ?''

''ஆபீஸிலிருந்து வரும்போது ரோஜாப்பூ வாங்கி வந்தேன். அத்தருமில்லை, ஜவ்வாதுமில்லை. ம், திரும்பு.''

திரும்பிச் சில இதழ்கள் உதிர ரோஜாக்களை வாழையிலையிலிருந்து ஏந்தி எடுத்து மலர் நலுங்கினாலும் மனைவியின் தலை நலுங்காமல் சூட்டினான் அவன்.

''எத்தனை அழகான ரோஜா!''

''உன் தலையில்தான் வைக்க நினைத்தேன் ராதா. தவறி முகத்தில் வைத்து விட்டேனா?''

அப்படிக் கேட்கும்படியாகத்தான் இருந்தது இன்பப் பொலிவில் பூத்து நிமிர்ந்த அவள் மலர் முகம். சந்தித்த பார்வைகளின் லயிப்பில் உலகமே வேறாகியது. பொருமிவிட்டு விசாலம் தன் கண்களை விலக்கிக் கொள்வாள்.

இப்படி எத்தனை காட்சிகளோ அந்த ஜோடிக்கு! எத்தனை கனவுகளோ! அந்த ரங்கமால், இதய ஆழத்திலுள் புதைந்து போன எத்தனை மணங்களோ, முத்து ஒளிகளோ, வண்ண ஜாலங்களோ! அவற்றையெல்லாம் எண்ணி எண்ணி, இன்று அவன் சாம்புகிறான்.

இரவின் தனிமையிலே விசாலம் ''ஐயோ, மகனே!'' என்ற ஓலத்தைத் தலையணையுள் புதைத்தாள்.

ராதா இறக்க வேண்டும் என்று அவள் விரும்பவில்லை. ஆனால் அவள் இறந்தபோது, சாதாரணமாய் எந்த மரணத்தாலும் ஒரு சராசரி மனித நெஞ்சில் தோன்றி மறையக்கூடிய வருத்தத்துக்கு மேல் விசாலத்துக்கு ஏற்படவில்லை. கண் முன் இருந்த மகனின் துயரைப் பார்த்துத்தான் அவள் குமுறி நொந்தாள்.

ஒரே ஒரு முறைதான் சொற்கள் சிறிது அதிகமாய் வெளி வந்து விட்டன.

''இப்படி வாடுகிறாயானால் சோமு...''

''இந்த விஷயமாய் என்னிடம் பேசாதே. அம்மா! நான் பைத்தியக்காரனாகி விடுவேன்.''

ராதா போய் இரண்டு மாதங்களில் நடைபெற்றது இது. அதன் பின் இருவரிடையே மௌனம் அகலவே யில்லை. அவனைப் பார்க்கும்போது வேதனை வயிற்றைப் பிசைவதோடு அந்த அசையாத பிம்பத்தின் முன் அவளுக்கு ஒரு வித அச்சமும் தோன்றும்.

ராதா போய் மூன்று மாதங்கள் ஆயின.

பிறகு ஆறு மாதங்கள்.

எட்டு மாதங்கள்.

இந்தத் துயருக்கு மாற்று என அவள் உள்ளம் ஒன்றை எண்ணியது. ஆனால்... எட்டே மாதங்களுக்குள்ளா!

உலக நடப்போ அவளுக்குத் துணை புரியலாயிற்று. இதயமில்லாத மக்கள் சமுதாயத்தால் சில இதயங்களுக்குப் பக்க பலம்!

''பெண் பி. ஏ. படித்திருக்கிறாள். நாகரிகமாக இருப்பாள். ஆனால் குடித்தனப்பாங்கு.''

''நல்ல லட்சணமான பெண். வீட்டில் அடியெடுத்து வைத்தாளானால் லட்சுமிகரமாயிருக்கும்.''

''சமையலில் கெட்டிக்காரி. பெரியவர்களிடம் மரியாதை. உங்களுக்கு அனுசரணையாயிருப்பாள்.''

''விடிய விடிய இருபத்தைந்து வயதுதானே அவனுக்கு! இரண்டாம் தாரம் என்றே பெண் வீட்டுக்காரர்கள் நினைக்க வில்லையே!''

''ஒன்றுதான் கொடுத்து வைக்கவில்லை. அதற்காக வீட்டில் விளக்கேற்றி வைக்க ஒருத்தி வேண்டாமா?''

''சின்ன வயசு. தனியா இருக்கும் வயசா? நீங்கள்தான் வற்புறுத்தி நடத்தி வைக்க வேண்டும்.''

விசாலத்தின் எண்ணங்கள் படரத் தொடங்கின. ஆமாம், ஒன்றுதான் கொடுத்து வைக்க வில்லை. யார் என்ன செய்யலாம்? ராதா வந்தாள். போனாள். ஏதோ அவசரமாய் ஒரு சொப்பனம் கண்டு விழித்தெழுந்

தூரத்போல் ஓராண்டு ஆட்டம் காட்டி ஓடிவிட்டாள். இன்னொருத்திதானே இனி அவள் இடத்தை நிரப்ப வேண்டும்?

இம்முறை தனக்குப் பிடித்த மருமகளாய்த் தானாகவே தேர்ந்தெடுக்கலாம்.

ஆனால் அவனிடம் விஷயத்தை எடுப்பது எப்படி?

''பையனைக் கலந்தாலோசித்துச் சீக்கிரமே சொல்லியனுப்புங்கள்'' என்று கூறி மாலையில் வந்திருந்த கல்யாணத் தரகரும் அவர் தம்பதிகளும் — பெண் வீட்டைச் சேர்ந்தவர் — வெளியேறினர். இது எத்தனையாவது வரன்! அடேயப்பா! கல்யாண வயதில் ஒரு பிள்ளை இருக்கிறதென்றால் இத்தனை கிராக்கியா அவனுக்கு!

யோசனையாய் நின்று விட்டாள் விசாலம். மேலே என்ன செய்வது? சோமுவிடம் எப்படியாவது கேட்டுவிட வேண்டும்.

வந்தவர்கள் விடை பெற்றுக் கொண்டனர். நெடு நேரம் சிந்தனையில் ஆழ்ந்து உட்கார்ந்திருந்தாள் விசாலம்.

இரவு வேளை. மணி ஒன்பதாகியது. ஒன்பதரை. பத்து. இன்னும் சோமு வீடு திரும்பவில்லை. இப்படி மனசை மறக்க, ராதாவோடு வாழ்ந்த வீட்டைப் பார்க்கவே கூசிப் பைத்தியக்காரன் போல் வெளியே சுற்றிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? இதற்கு எப்போதுதான் விமோசனம்? அவன் இப்படி உருகியே உயிருக்கு ஏதாவது....அவள் நடுங்கினாள்.

கதவு தட்டும் சத்தம் கேட்டது.

அப்பாடா! வந்து விட்டான் ஒரு வழியாக. மணி பத்தே கால்.

உடல் மெலிந்து எதிலும் சுவாரசியமில்லாமல் கற்சிலையே போல் உணர்ச்சிகளற்ற உறைந்த மனத்தினனாய்ச் சோமு உள்ளே நுழைந்தான்.

வழக்கம் போல் இருவரிடை மௌனம்.

அணைந்து கொண்டிருந்த தணல் மேல் ஆறிக் கிடந்த சாதத்தை எடுத்துக் குனிந்து அவனுக்கு வட்டித்தபோது அவனது குவிந்த தலை ஞாபகம் செய்த மகத்தான வேதனைச் சுமை அவளைச் சட்டென்று பேச வைத்தது.

''சோமு! உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும்.''

''என்ன அம்மா?''

இன்னும் அவன் தலை நிமிரவில்லை. அவள் மனம் உறைந்தது. நா மறுபடியும் கூசி விட்டது.

''ஆகட்டும். அப்புறம் சொல்கிறேன்.''

அவன் மேலே ஒன்றும் கேட்கவில்லை; மௌனமாய் உணவை முடித்துக் கொண்டு தன் அறைக்குச் சென்று படுத்தான்.

விசாலத்தின் தைரியம் மீண்டும் மங்கலாயிற்று. மெள்ள வந்து அவனருகில் நின்றாள். இதயம் படபடத்தது. அந்த மௌன மூர்த்தியின் முன்னே இயல்பாய்த் தோன்றும் அச்சம் கரை தாக்கி அவளைப் பற்றியது.

''சோமு!'' எப்படியோ ஒரு வழியாய்ப் பேசி விட்டாள். இருட்டில் அந்தச் சொல் எல்லையற்ற எதிரொலிகளை எழுப்பி உள்ளே புகுந்து துளைத்து உயிரையே கவர்ந்துவிடும் போன்ற பயங்கரத்துடன் யுகம் யுகமாய் ஒலித்தது போல் தோன்றியது.

அத்தனையும் ஒரு வினாடிக்குள் தான். அவன் தான் உடனேயே பதில் சொன்னானே. ''என்னம்மா?''

''வந்து... நீ வந்து....''

அவன் அசையவில்லை. அவள் உதடுகளை நாவினால் ஈரமாக்கிக் கொண்டாள். அச்சத்துடன் கூட ஒருவிதமான குற்ற உணர்வும் நெஞ்சில் நெருடியது. வேகமாய் வார்த்தைகளைக் கோர்த்து வெளியே தள்ளிவிட்டாள்.

''போனதையே நினைந்து எத்தனை நாள் மறுகுவாய் சோமு? நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். உனக்குப் பெண் கொடுக்கப் பல பேர்கள் வருகிறார்கள். என்ன சொல்கிறாய்?''

பேசி முடித்ததுமே அவள் கால்கள் பலவீனமாய் ஆடின. ஆழ்ந்த புண்ணைத் தொட்டுவிட்டாள். அவன் எப்படிச் சீறி எழுவானோ? 'நான் பைத்தியக்காரனாகிவிடுவேன்' என்று முன்பே சொன்னவனாயிற்றே. இப்போது துயரும் சீற்றமும் சேர்ந்த ஆவேசத்தில் எழுந்து அவளை அறைந்து விடுவானோ? வெறி பிடித்து ஓடிவிடுவானோ?

ஒருவாறு அவன் தலை அவள் பக்கம் திரும்பியது.

''சரியம்மா. எனக்குச் சம்மதம். நீ என்ன சொன்னாலும் பெண் பார்க்க வருகிறேன்.''

அவள் உடலெங்கும் வியர்வை பொடித்தெழுந்தது. அச்சிறு இருட்டறையில் மின்னலும் புயலும் தோன்றி உலகை அழித்து விடுமென்று அஞ்சியவள் போல் நடுங்கி விட்டாள்.

''சரி சோமு! ரொம்ப சந்தோஷம். நீ தூங்கு.'' எப்படியோ தடுமாறிக் கொண்டு அவள் வெளி வந்து தன் படுக்கையில் சரிந்து உட்கார்ந்தாள்.

இதயம் தெறித்துக் கொண்டிருந்தது. இது என்ன ஏமாற்றம் அவளுள்?

ஏமாற்றமா? பின் என்ன எதிர்பார்த்தாள்? ''என்னிடம் மறுமணத்தைப் பற்றிப் பேச என்ன துணிச்சல் உனக்கு?'' என்ற கோபாவேசத்தையா?

அவன் துயரை மறந்து இன்பமாய் வாழ வேண்டும் என்பதுதானே அவள் ஆசை? ஆம், வேறென்ன! நல்ல வேளை, அவன் சம்மதித்து விட்டான். அவள் கண்ணீரைத் துடைத்துக் கொள்ள வேண்டும். நாளைக்கே சென்று ஒரு பெண்ணைப் பார்த்து வரலாம். அவள் மகன் நல்லபடியாய்....

எட்டு மாதத்துக்குள்ளாகவா?

''சரியம்மா, எனக்குச் சம்மதம்.''

சாதாரணமாகவா வாழ்ந்தார்கள்?

''ராதாவைத் தவிர வேறு யாரையும் மணக்க மாட்டேன்....''

எட்டே மாதங்கள்!

கண்ணீர் பொழிந்தவாறு இருந்தது.

இம்முறை அது உண்மையாகவே போனவருக்காகப் பெருகியது. இருப்பவனுக்காக அல்ல.

''சரியம்மா, எனக்குச் சம்மதம்.''

ராதா.... பாவம் ராதா....!

பிடிக்காத நாத்தியின் மகள்தான். வேண்டாத மருமகள்தான். ஆனால் இவர்களுக்காக அவள் அழவில்லை. அங்கே ஒரு பெண்தான் இன்னொரு பெண்ணுக்காக அழுது கொண்டிருந்தாள்.

துயில் கொள்ளுமுன்னே எழில்கொள்ளத்தானே பூசுவீர் லக்மே கோல்ட் க்ரீம்

நீங்கள் துயிலில் ஆழ்ந்துள்ளபோதும் உங்களுக்குச் சேவை புரிகிறது லக்மே கோல்ட் க்ரீம். ஒவ்வொரு இரவும் அதைப் பூசிக்கொண்ட பிறகே தூங்குங்கள். அதிலுள்ள வளமான எண்ணெயைக் கிரகித்துக்கொண்டவுடன் உங்கள் சருமம் சுத்தமாகவும், மிருதுவாகவும், மினுமினுப்போடும் மிளிருகிறது. சரும துவாரங்களை அடைத்துக்கொள்ளும் பழைய அலங்காரப் பொருள்களையும், அழுக்கையும் அகற்றி, உங்கள் மேனி எழில் பளிச்சிடும் மழமழப்பையும், வியப்பூட்டும் இளமையையும் பெறச் செய்கிறது லக்மே கோல்ட் க்ரீம்.

லக்மே

கோல்ட் க்ரீம்



LKY-22C-TAM

காட்டுக்குள்ளே

கஸ்தூரி மான்

அரிய வாசனைப் பொருளும் விலையுயர்ந்ததுமான கஸ்தூரி என்னும் மருந்துச் சரக்கு ஒருவகை மானின் உடலிலிருந்து கிடைக்கிறது. இந்த வகை மானையே இமே காண்கிறீர்கள். மத்திய ஆசியா, வடகிழக்கு ஆசியா, காஷ்மீரம், நேப்பாளம், சிக்கிம் ஆகிய பகுதிகளில் உள்ள மலைகளில் இது வாழ்கிறது. சிறிய மான்தான். இமய மலையின் 8000த்திலிருந்து 12000 அடிகள் வரையிலும் உள்ள பிரதேசத்தில் இது வசிக்கிறது. இவை கூட்டமாக வாழுவதில்லை. தனித்து அல்லது ஜோடி ஜோடியாக வாழுகின்றன. இரண்டடிக்கும் குறைவான உயரமும் மூன்றடி நீளமும் இருபது ராத்தல் எடையும் உடைய பிராணி இது. இதன் காதுகள் பெரி



தாகவும், பின் கால்கள் முன் கால்களை விட நீண்டும் இருக்கும். ரோமம் ஆட்டினுடையதைப் போல் முரடாகச் சாம்பல் முதல் கரும் பழுப்பு வரை நிறம் வேறுபட்டு இருக்கும். அங்கங்கே சற்று வெளுப்பான புள்ளிகள் விழுந்திருக்கும். இலை, பூ, பாசிக் காளான் முதலியவையே இதன் ஆகாரம். இதற்குக் கொம்புகள் கிடையாது. ஆனால் ஆண் கஸ்தூரி மானுக்கு மேல் தாடையில் மூன்றங்குல நீளமுள்ள இரண்டு கோரைப் பற்கள் கீழ் நோக்கி நீண்டு வளர்ந்திருக்கும். இதன் உதவியால் இது விரோதிகளுடன் போரிடும். உருவில் சிறியதானாலும் திடமான பிராணி இது. ஆபத்து நிறைந்த செங்குத்தான பாறைகளிலும் பனியிலும் கால் நழுவாமல் நடந்து செல்லக் கூடியது. இதற்கு ஏற்றபடி இதன் கால்களின் பின்புறமுள்ள எச்சக் குளம்புகள் பெரியனவாக வளர்ந்து நடக்கும்போது உறுதியாக அடியிட்டுச் செல்ல உதவுகின்றன. இவைகளுக்கு வால் மிகச் சிறியது. வாலில் ஒரு வகைச் சுரப்பியும் அடிவயிற்றில் கஸ்தூரிச் சுரப்பியும் இவைகளுக்கு உண்டு. கஸ்தூரிச் சுரப்பிகள் ஆண் மானுக்குத்தான் உண்டு. கொப்பூழுக்கு அருகில் இருக்கும் இந்தச் சுரப்பிகளில் நன்றாக வளர்ந்த மானில் அரை முதல் 2 அவுன்ஸ் வரை கஸ்தூரி கிடைக்கும். ஆண் மானைப் பிடித்துக் கொன்று இந்தச் சுரப்பியைத் தோலோடு அறுத்தெடுத்துக் கத்திரித்து உலர்த்தி வைத்துக் கொள்வார்கள். இப்படி எடுத்த பை ஒவ்வொன்றும் ஒன்றரை அங்குல விட்டமிருக்கும். பை உருண்டை அல்லது நீண்ட வடிவாக மேலே மயிர் மூடியிருக்கும். பச்சையாக இருக்கும் போது கஸ்தூரிக்கு மணம் கிடையாது. நெடியோடும் சிறுநீரின் நாற்றத்தோடும்தான் இது அப்போது இருக்கும். நன்றாக உலர்ந்த பிறகே கஸ்தூரிக்கான மணம் இதில் உண்டாகிறது. கஸ்தூரி சிறு கசப்பாக இருக்கும். இதன் மணம் நெடுங் காலம் நிலைத்திருக்கக் கூடியது. இதன் நிறம் கருமை கலந்த சிவப்பு. நைப்புடன் சிறு சிறு மணிகளாக இருக்கும். ஆயுர்வேத மருத்துவத்தில் கஸ்தூரி மிகச் சிறந்த மருந்துச் சரக்காகச் சொல்லப்பட்டுள்ளது.

கஸ்தூரி மான்கள், அடர்ந்த காடுகளில் பகலில் நிலத்தைச் சற்றுப் பள்ளம் பறித்துக் கொண்டு அதில் பதுங்கிக் கிடக்கும். முன் னிரவிலும் காலையிலும் இரை தேடி அலையும். ஜனவரியில் அது கருத்தரிக்கும்.



உங்கள் ஆல்பத்துக்கு


நியூஸிலாந்து நாட்டுக்குச் சென்றால் விறகில்லாமல், அடுப்பு மூட்டாமல் சமையல் செய்யலாம். அங்கு இயற்கையன்னை கொதிக்கும் வெந்நீர் ஊற்றுக்களை உண்டாக்கிக் கொடுத்திருக்கிறாள். அங்கு வாழும் மோரி என்ற இனத்தவர்கள் உணவுப் பொருள்களைக் கூடையில் வைத்து மூடி அதைக் கயிற்றில் கட்டி இத்தகைய வெந்நீர் ஊற்றுக்களில் மூழ்கும்படி பிடித்துக் கொள்வார்கள். உணவு கொஞ்ச நேரத்தில் வெந்து பக்குவமாகி விடும்.



அதிசயம், ஆனால் உண்மை

✽ நரகாசுரன் தான் இறக்கும்போது 'கேட்டுக் கொண்டதற்கிணங்கத்தான் தீபாவளிப் பண்டிகையை நாம் கொண்டாடுகிறோம் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். இதோ இங்கு இன்னொரு ரசமான விஷயத்தைப் பாருங்கள். கொரியாவில் இருக்கும் ஒவ்வொரு மைல் கல்லும் ஒரு மனிதத் தலையைப் போலச் செய்து வைக்கப்பட்டிருக்குமாம். ஏன் தெரியுமா? அங்கு சாங் என்னும் ஒரு தேசத் துரோகி இருந்தானாம். அவனைச் சிரச் சேதம் செய்யக் கட்டளையிட்டபோது அவன் தனது கடைசி விருப்பமாக "இந் நாட்டில் உள்ள மைல் கற்களையெல்லாம் என் முகபாவத்தோடு கூடிய தலைகளாகச் செய்து வையுங்கள். நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகளுக்கு இனி அது ஓர் எச்சரிக்கையாக இருக்கட்டும்" என்று கேட்டுக் கொண்டானாம். அவனது விருப்பப்படியே அந்த நாட்டின் மைல் கற்கள் துண்டிக்கப்பட்ட அவன் தலையைப் போலச் செய்து நிறுத்தப்படுகின்றனவாம்!


✽ 'தில்வாரா' கோயில்கள் இந்தியாவில் எங்கே இருக்கின்றன தெரியுமா? ராஜஸ்தானில் உள்ள ஆபு மலையின் மீது அற்புதமாக நிர்மாணிக்கப்பட்ட ஐந்து கோயில்கள் இவை. முழுவதும் வெள்ளைச் சலவைக் கல்லினால் கட்டப்பட்ட இந்தக் கோயில் பிரமிப்பூட்டும் படியான சிற்ப வேலைக்குப் பெயர் போனது. இதைக் கட்டி முடித்த சிற்பிகளுக்குக் கூலி எப்படிக் கொடுக்கப்பட்டது தெரியுமா? ஒவ்வொரு நாளும் அவர்கள் செதுக்கிய சிற்பங்களிலிருந்து விழும் சலவைக் கல் தூளின் நிறைக்குச் சமமான தங்கத்தை அவர்களுக்குக் கூலியாகக் கொடுத்தானும் அதைக் கட்டும்படி பணித்த மன்னன். அந்தக் கோயில் சிற்பங்களிலுள்ள பிரசித்திபெற்ற நகாசு வேலையின் காரணம் இப்போது புரிகிறதல்லவா?



✽ தலையைத் திருப்பாமலேயே தங்கள் பின்புறம் இருப்பதைக் காணக் கூடிய சக்தி முயல்களுக்கு உண்டு.

உலகத் தீவுகள் - 1

பவழத் தீவு




பவழங்களின் வகைகள்

தலைப்பைப் பார்த்ததும் ஏதோ புதிய கதையாக்கும் என்றுதானே நினைக்கிறீர்கள்? பவழம் என்பது விலையுயர்ந்த பொருள். அணிகலன்களுக்கும் மருத்துவத்துக்கும் பயன்படக்கூடியது. முத்தைப் போலவே பவழமும் கடலிலிருந்தேதான் கிடைக்கிறது. இதுவும் ஒருவகைப் பூச்சியின் படைப்புத்தான். கோடி கோடியான ஒருவகைக் கடல்வாழ் பூச்சிகள் ஒன்றன் மீது ஒன்று படிந்து படிந்து வாழ்ந்து மடிந்த பிறகு அவைகளின் எலும்புக் கூடு பவழமாகிறது. உஷ்ணப் பிரதேசங்களையடுத்த கடல்களில் இத்தகைய பூச்சிகள் ஒன்று சேர்ந்து பல தீவுகளை உண்டாக்கி விடுகின்றன. இந்தப் பூச்சிக் கூட்டத்தின் மேல் பகுதி உள் பகுதியை விடச் சீக்கிரத்தில் கெட்டிப்பட்டு வளர்ந்து விடும். ஆகவே, இத்தகைய பவழத் தீவுகள் திடுத் திட்டாக வட்டமாக உருவாகும். இந்த வட்டத் திட்டுக்களின் நடுவே கடல் நீர் தேங்கி நிற்கும். இவைகளுக்கு லகூன் (ஆழமில்லாத ஏரி) என்று பெயர். கெட்டிப்பட்ட பவழத் திட்டுக்களின் மீது பறவைகளாலும், அலைகளாலும் கொண்டு வந்து சேர்க்கப்பட்டுத் தென்னை, பனை ஆகிய மரங்கள் வளர்ந்து விடுகின்றன. பஸிபிக் கடல், இந்தியக் கடல், மத்தியதரைக் கடல் இங்கெல்லாம் பவழத் தீவுகள் உண்டு. பொதுவாகச் சிவப்பு, இளஞ்சிவப்பு, ஆரஞ்சு ஆகிய நிறங்களில்தான் பவழம் இருக்கும். ஆனால் இந்திய, பசிபிக் கடல்களில் உள்ள பவழத் தீவுகளில் பல வண்ணங்களில் பவழம் உற்பத்தியாகிறது. பவழத் தீவுகளில் தென்னை மரம் ஏராளம். இங்கு கொப்பரை வியாபாரம் முக்கியம்.




பவழத் தீவின் தோற்றம்



ரயில் விளையாட்டு

உங்களுக்கெல்லாம் இப்போது அரை வருஷப் பரீட்சை முடிந்து விடுமுறை ஆரம்பமாகி யிருக்குமே? வீட்டில் உட்கார்ந்தபடி விளையாடுவதற்கு இதை உங்களுக்குத் தயாரித்திருக்கிறேன். பென்ஸில் போன்று ஒரு மரக் குச்சியைக் கூராகச் சீவிக் கொள்ளுங்கள். 'ஆரம்பம்' என்று குறித்துள்ள இடத்தில் 'மேலே' என்று போட்டிருக்கிறதே அந்தக் கோட்டின் மேலாகக் கூர்மையான குச்சியை ஓட்டிக் கொண்டே போக வேண்டும். 'தவறான பாதை'யில் நீங்கள் பிரயாணம் செய்யும் ரயில்வே லயன் முடியுமானால் மறுபடியும் ஆரம்பித்த இடத்திலிருந்து தொடங்க வேண்டியதுதான். 'உடைந்த பாதை'யில் வந்து மாட்டிக் கொண்டீர்களானாலும் ஆரம்பித்த இடத்துக்கே வந்து தொடங்க வேண்டும். அல்லது வந்த வழியாகவே பின்நோக்கிச் சென்று கடைசியாகக் கடந்து வந்த ரயில்வே ஸ்டேஷனை அடைந்ததும் (ஸ்டே) எதிர் பிளாட்பாரத்துக்குக் தாவி ஏறி, 'முடிவு' என்ற இடத்தின் மேல் லயனுக்குக் கொண்டு விடும் சரியான தண்டவாளத்தைக் கண்டு பிடிக்கும் வரை அந்த லயனிலேயே பிரயாணம் செய்யலாம். ஒரு தினுசாக 'முடிவு' என்ற இடத்தை வந்தடைந்ததும் 'கீழே' செல்லும் எதிர் பிளாட்பாரத்துக்கு மாறி இதே போன்ற விதிகளுக்குக் கட்டுப்பட்டுப் பிரயாணம் செய்து ஆரம்பித்த இடத்தின் 'கீழ்'ப் பிளாட்பாரத்தை வந்தடைந்தால்தான் உங்கள் ரயில் பிரயாணம் பூர்த்தியடையும். விளையாடிப் பாருங்கள், வேடிக்கையா யிருக்கும்.



ஜெட் விமானங்கள்

யுத்த அரங்கம்

ருஷ்யாவிலிருந்து இந்தியாவுக்கு ருஷ்ய எம். ஐ. ஜி. (மிக்) ஜெட் யுத்த விமானங்கள் வரப் போகின்றன என்றார்கள். கம்யூனிஸ்ட் சீனா நம் மீது போர் தொடுத்திருக்கும்போது மற்றொரு கம்யூனிஸ்ட் நாட்டினிடமிருந்து விமானங்களைப் பெறுவது ராஜதந்திரமாகுமா, யுத்த தந்திரம்தானாகுமா என்கிற பிரச்னை எழுந்தது. விமானங்களைக் கொடுத்தாலும் பின்னால் அவை பழுதானால் சீர்குலைந்த பாகங்களை அகற்றி விட்டுப் புதிய பாகங்களை வைத்துமுடுக்க 'ஸ்பேர் பார்ட்ஸ்' தரவே மாட்டார்கள் என்று ஒரு சாரார் சொன்னார்கள். அதைப் பற்றிய கவலையே வேண்டாம்! ருஷ்யர்கள் 'மிக்' விமானங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையையே இந்தியாவில் நிறுவ உதவப் போகிறார்கள் என்றது அரசாங்கம்.

'கிடையவே கிடையாது! விமானங்களும் இல்லை, தொழிற்சாலைகளும் இல்லை! நடக்காத காரியம்!' என்றது வேறொரு தகவல் நிலையம். கடைசியில் ஒரு வழியாக, கண்டிப்பாக விமானங்களையும் கொடுப்பார்கள்; அத்துடன் விமான உற்பத்திக்கான இரண்டு தொழிற்சாலைகளையும் நிச்சயமாக நிறுவ ருஷ்யர்கள் ஒத்துழைப்பார்கள்; ஒரு தொழிற்சாலை விமான உடல்களையும் மற்றொன்று விமான எஞ்சின்களையும் உற்பத்தி செய்யும் என்பதாகத் திட்டவட்டமான அறிக்கை வெளியாயிற்று. இந்த விஷயம் இத்துடன் முடிந்ததா இன்னும் நம்மைக் குழப்பத்தில் ஆழ்த்த ஏதேனும் பாக்கியிருக்கிறதா என்பது காத்திருந்து பார்த்தால்தான் தெரிய வரும். மிக் ஜெட் பற்றிய குளறுபடிகள், வாதப் பிரதிவாதங்கள் ஒருபுறமிருக்க ஜெட் விமானங்கள் எங்ஙனம் இயங்குகின்றன என்று பார்ப்போம்.

ஜெட் தத்துவத்தை வெகு எளிதாக விளக்கி விடலாம். சைக்கிள் பெடலில் இடது காலை வைத்து வலது காலால் தரையை உந்தினால் சைக்கிள் முன்னே போகிறது. பலூனில் நிறையக் காற்றை ஊதிய பிறகு அதனை விட்டு விட்டால் காற்று புகுத்த துவாரத்தின் வழியாகவே வேகமாக வெளியேறுகிறது. பலூன் முன்னுக்குப் பாய்கிறது. அந்தரத்தில் இப்படியும் அப்படியுமாகப் பறக்கிறது. அதனுள்ளிருக்கும் காற்றெல்லாம் வெளிப்படும் வரையில் பறந்து விட்டுக் கீழே விழுகிறது. ஆனால் ஜெட் விமானத்திலோ காற்று முன்புறத்தில் சதா சர்வ காலமும் உள்ளுக்கு இழுக்கப்படுகிறது. பின்புறத்தில் உஷ்ணமான வாயுக்களாக அது வேகமாக வெளியேற்றப்படுகிறது. அப்போது விமானம் முன்னுக்குப் பாய்ந்து பறக்கிறது. இப்படிப் பலூன் உபமானம் அடிப்படைத் தத்துவத்தைப் புரிந்துகொள்ள உதவுகிறது என்றாலும் ஜெட் எஞ்சின் தயாரிப்பது பலூனைத் தயாரிப்பது போல் அவ்வளவு சுலபமான காரியமல்ல என்பது சொல்லாமலே விளங்கும்!

ஏரோப்ளேனுக்கு உள்ளது போன்ற சுழல் விசிறி (புரொப்பெல்லர்) கிடையாது என்பதைத் தவிர பார்ப்பதற்கு ஜெட் விமானம் சாதாரண விமானத்தைப் போலத்தான் இருக்கிறது. உடலை ஒட்டினாற் போல் இரண்டு எஞ்சின்கள் இறக்கைகளில் அமைக்கப்பட்டிருக்கலாம், அல்லது ஓர் எஞ்சின் மட்டுமே இருக்கலாம். இந்த எஞ்சின்களில் முக்கியமான அம்சம் என்னவென்றால் காற்று உள்ளே இழுக்கப்படுவதற்கு முன்புறத்தில் ஓரிடமும் பின்புறத்தில் வாயுக்கள் வெளியே தள்ளப்படுவதற்கு ஓரிடமும் அமைந்திருக்க வேண்டும் என்பதுதான். உள்ளே இழுக்கப்படும் காற்றின் அழுத்தத்தை ஒரு கருவி அதிகரிக்கிறது. இவ்வாறு அழுத்தம் மிகுந்த காற்றுடன் எரிபொருள் சேர்க்கப்படுகிறது. எரிபொருளும் அழுத்தம் மிகுந்த காற்றும் ஒன்று கலந்த பின்னர் துரிதமாக எரிக்கப்படுகின்றன. இப்படி எரியும்போது வெளிப்படும் உஷ்ணம் மிகுந்த வாயுக்கள் ஒரு 'டர்பைனை' அதிவேகமாகச் சுழல வைக்கின்றன. இந்த டர்பைனே காற்றின் அழுத்தத்தை அதிகரிக்கும் கருவிக்குச் சக்தி அளிக்கிறது. இதே டர்பைன் விமானத்திலுள்ள மின்சார உபகரணங்களுக்கு — ரேடியோ போன்றவை — மின்சாரம் வழங்குகிறது. டர்பைனைச் சுழல வைத்த பிறகு வாயுக்கள் குழாய்களின் வழியாக விமானத்தின் பின்புறத்தை அடைகின்றன. பின்புற வாயில் மிகக் குறுகலாக அமைந்துள்ள படியால் வெளியேறிச் செல்லும் வாயுக்களின் வேகம் அதிகமாகிறது. காற்று வெளியே பீறிட்டுக் கொண்டு செல்கையில் விமானம் முன்னுக்குப் பாய்கிறது.

சாதாரணமாக, அதிவேகமாகப் பறக்கக் கூடிய சாதாரண புரொப்பெல்லர் விமானத்தைவிட ஜெட் விமானம் மணிக்கு நூறு மைல் அதிக வேகத்துடன் பறக்க முடியும். ஒலி காற்றிலே எவ்வளவு வேகமாய்ப் பரவுகிறதோ, அந்த வேகத்தையும் ஜெட் விமானத்தின் உதவியுடன் வென்றுவிட முயன்று வெற்றி கண்டிருக்கிறார்கள்.



பேச்சைக் குறையுங்கள் உழைப்பைப் பெருக்குங்கள்

ஜெட் விமானங்கள் பறக்கையில் அதிகமாகச் சத்தப்படுத்துவதில்லை. மிகத் துரிதமாக வானில் உயர ஏறிச் செல்லும் என்பதோடு கிட்டத்தட்ட செங்குத்தாகவே மேலே ஏறும். உயரம் அதிகமாக அதிகமாகச் சாதாரண விமானங்கள் சிறப்பாகச் செயல்படாது. இதற்கு நேர்மாறாகத் தரை மட்டத்துக்கு அருகில்தான் ஜெட் விமானத்தின் செயல் திறன் குறைகிறது. ஜெட் விமானத்துக்குப் பெட்ரோல் தேவையில்லை. உயர் ரக கெரோஸினே போதுமானது. கெரோஸின் விலை குறைவுதான் என்றாலும் ஜெட் விமானம் ஏராளமான கெரோஸினைக் கபளீகரம் செய்கிறது. இதனாலேயே ஜெட் விமானம் அடிக்கடி கீழே இறங்கி எரிபொருள் நிரப்பாமல் அதிக தூரம் பறக்க முடியாது.

ஜெட் விமானத் தத்துவம் நீண்ட காலமாகவே பலருக்கும் தெரிந்திருந்த போதிலும் பெருமளவுக்கு அதனை உற்பத்தி செய்வதில் இருந்த தடை, டர்பைனைச் சென்றடையும் வாயுக்களின் அபரிமிதமான உஷ்ணத்தைத் தாங்கி உருகாமலிருக்கக் கூடிய உலோகம் விஞ்ஞானிகளுக்கு அகப்படாதது தான். இத்தகைய உலோகம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் ஏராளமாக விமானங்கள் தயாராயின.


இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஜெட் விமானங்கள் அவ்வளவாகப் பிரபலமடையவில்லை. யுத்தம் முடிகிற தறுவாயில் தான் பிரிட்டன் ஜெர்மனி இரண்டுமே ஜெட் விமானங்களைப் பயன்படுத்தின. முழுக்க ஜெட் விமானங்களே உபயோகப்படுத்தப்பட்ட யுத்தம் கொரியா யுத்தம்தான்.

அதிவேகமாகப் பறக்கும் ஜெட் விமானங்களில் மனிதனுடைய திறமையை மட்டும் நம்பியிருப்பதற்கில்லை. பெருமளவுக்கு ஜெட் விமானங்களைப் பயன்படுத்துவதாயிருந்தால் அதற்கு அநுசரணையாக ராடார் எனப்படும் எலெக்ட்ரானிக் சாதனங்களைப் பரவலாக அமைக்க வேண்டும். இதன் மூலம் குறிப்பிட்ட எந்த விநாடியிலும் குறிப்பிட்ட எந்த விமானம் எந்த இடத்தில் எவ்வளவு உயரத்தில் பறக்கின்றது என்பதைக் கணக்காகச் சொல்லலாம். அறைக்குள்ளிருந்தவாறே வெகு தொலைவில் வருகின்ற எதிரி விமானங்களையும் அடையாளம் கண்டு கொள்ளலாம். கும்மிருட்டிலும்கூட விமானங்கள் விமானக் கூடங்களில் பத்திரமாக இறங்கவும் ஏறவும் வசதிசெய்யலாம். அந்தச்சமயங்களில் ராடார் கருவியின் முன்னால் உட்கார்ந்திருப்பவர் சொற்படி விமானி கேட்க வேண்டியது தான். விமானியின் அறிவுக்கும் திறமைக்கும் வேலை குறைவு.

இந்தியாவில் பெங்களூரிலுள்ள ஹிந்துஸ்தான் விமானத் தொழிற்சாலை 'வாம்பயர்' என்னும் ஜெட் விமானங்களைத் தயாரித்து வருகிறது. அவற்றில் ஒன்றினையே இப்பக்கத்திலுள்ள படத்தில் காண்கிறீர்கள்.

ஜீப்

வடக் கெல்லையிலுள்ள மலைப் பிரதேசங்களில் நமது துருப்பினருக்கு மிகவும் பயன்படக்கூடிய வாகனம் ஜீப். மோட்டாரினைப் போல வேகமாகப் போகக் கூடியதும் எளிதாக ஓட்டிச் செல்லக் கூடியதும், அதே சமயத்தில் கனமான லாரிகளைப்போல் பலம் பொருந்தியதாகவும், நீண்ட நாள் உழைக்கக் கூடியதாகவும் இதனை இரண்டாம் உலக யுத்தத்தின் போது அமெரிக்கர் தயாரித்தார்கள். 'அதிசய மோட்டார்' என்று பட்டப் பெயர் பெற்ற இது எதற்கும் பயன்படக் கூடியது. General Purpose என்னும் சொற்களில் உள்ள முதல் இரண்டு எழுத்துக்களே இணைந்து 'ஜீப்' என்றாயிற்று. மிகவும் சக்தி வாய்ந்த இது அரை டன் எடையுள்ள பீரங்கி போன்றவற்றை இழுத்துச் செல்லும். சாதாரண மோட்டார்களில் பின் இரண்டு சக்கரங்கள் மட்டுமே விசையினால் சுழலுகின்றன. ஜீப்பிலோ நான்கு சக்கரங்களையும் விசையுடன் சுழலச் செய்ய வசதி உள்ளது. இதனால் மலைப்பாங்கான இடங்களில் உயரச் செல்வதும் சேறு சகதிகளைக் கடப்பதும் எளிதாகிறது.



சிந்தால்
வருஷங்கள்





அன்ன நடை பயிலும் பைங்கொடி

மாயக்கன்னியோவென மயக்கும் வசீகரம்! அன்ன நடை பயிலும் இப்பைங் கொடியின் அழகில் ஒரு ரகசியமிருக்கிறது. ஜி-11 சேர்ந்த ஸிந்தால் சோப்பை அவள் வழக்க மாக உபயோகிக்கிறாள். அது அழகுக்கு அழகூட்டுவது: துர்நாற்றத்தை அகற்றி மென்மையான சருமத்திற்கு. நறுமண மூட்டுவது.

உலகெங்கும் அழகிய பெண்மணிகளும், அவர்கள் விரும்பும் ஆண்களும் ஜி-11 சேர்ந்த சோப்புகளையும் அழகு சாதனங்களையுமே விரும்புகிறார்கள். ஜி-11 உபயோகப்படுத்துவதற்கு இந்தியாவில் கோத்ரெஜ் பிரத்தியேக உரிமை பெற்றுள்ளார்கள்.



வியர்வை நாற்றத்தைப் போக்கி, எழிலுடன் விளங்கச்செய்யும் சோப்

மிகுந்த வனப்பிற்கும், பூரணப் பாதுகாப்பிற்கும் இனிய மணங்கமழும் வியர்வை நாற்றத்தைப் போக்கி ஆறுதல் அளிக்கும் ஜி-11 அடங்கியுள்ள கோத்ரெஜ் சிந்தால் டாய்லெட் பவுடர் உபயோகியுங்கள்.

கோத்ரெஜ் ஹேர்டானிக் கிலும் ஜி-11 அடங்கியுள்ளது.

Godrej கோத்ரெஜ்

சோப்புகளில் முதன்மையான பெயர்

CT-3A.8/62 (8" x 5") TAM



அத்தியாயம் 34

தலை தப்பியது

'மறக்க மாட்டேன்' என்று உறுதியாக மைக்கேலிடம் வடிவேலு கூறியிருந்தபோதிலும் உக்கிரமான யுத்த களத்தின் மத்தியில் அகப்பட்டுக் கொண்டிருந்த அவன் சக்குவை அப்போதைக்கு மறக்கத்தான் செய்தான். அவளை மட்டுமல்ல, வேறு எதைப் பற்றியுமே சிந்திக்க நேரமின்றிச் சம்பவங்கள் அடுத்தடுத்து மிக வேகமாக நிகழ்ந்து விட்டன.

மைக்கேலுடன் சண்டைக்குப் போய்ப் பிறகு சமாதானம் செய்து கொண்ட அன்றைய தினத்துக்குப் பிறகு இருபது நாட்கள் ஓடிச் சென்று விட்டன. மூச்சு விடக் கூட நேரமில்லாத மூன்று வாரங்கள் அவை. அசாதாரணமான துணிச்சலோடு எதிரிகளின் தாக்குதல்களைச் சமாளிக்கத் துணை புரிந்து வந்த வடிவேலுவுக்கு இப்போதுதான் சற்று இளைப்பாற அவகாசம் கிடைத்தது. பகல் நேரங்களில் எதிரி விமானங்களின் குண்டு வீச்சுக்கும், அவற்றிலுள்ள 'மிஷின் கன்' துப்பாக்கிகள் இயங்கும் போது பீறிட்டு அடிக்கும் நெருப்பு மழைக்கும் ஆளாகி அவஸ்தைப் பட்டு வாழ்வதும், இரவின் பெரும் பகுதியைத் தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு உழைப்பதில் செலவிடுவதும், உறங்கும் சில மணி நேரத்திலும் ராட்சத மலேரியாக் கொசுக்களின் உபத்திரவத்தைச் சகிப்பதும் ஓய்வு எனக் கூறப்படலாம் என்றால் வடிவேலுவும் அவன் தோழர்களும் அப்போது அனுபவித்து வந்தது ஓய்வு

தான். எனினும் கடந்த மூன்று நாட்களாக ஜப்பானியரை அவர்கள், நேருக்கு நேராகச் சந்திக்கவில்லை என்பதும் உண்மைதான்.

மழைக்கு முன்னும் காற்றே இல்லாமல், மரங்களிலுள்ள இலைகளின் சிறிய சலசலப்புக் கூட இல்லாமல் ஒருவித நிச்சலனமான இறுக்கம் ஏற்படுமே அதைப் போல் இருந்தது வடிவேலுவுக்கு. திடுமென்று இந்நிலை மாறிப் பெரிய சண்டமாருதமே வீசப் போகிறதென்று எதிர்பார்த்தான்.

'ஸ்லிம்' ஆற்றங் கரையில் ஒரு ரப்பர்த் தோட்டத்தில் நண்பர்களுடன் தண்டு இறங்கியிருந்த அவன், தான் துடைத்துக் கொண்டிருந்த துப்பாக்கியை ரப்பர் மரத்தின் அடிவாரத்தில் சாய்த்து வைத்து விட்டு உட்கார்ந்த வண்ணமே தனது வலது காலை நீட்டினான். கால்சராய்ப் பைக்குள் கையை விட்டு அதிலிருந்து எதையோ எடுத்து இடது கரத்தில் வைத்தான். பை காலியாகி விட்டதா என்பதைப் பரிசோதித்து விட்டு இடது கரத்திலிருந்த சட்டைப் பித்தான்களை எண்ண ஆரம்பித்தான். ஒரு தடவைக்கு இரண்டு தடவையாக எண்ணிச் சரி பார்த்தான். சரியாக நாற்பத்தி ஐந்து. நாற்பத்தைந்து ஜப்பானியச் சிப்பாய்களின் உயிர்கள் அவன் கரத்தில் குலுங்குவது போல் தோன்றியது அவனுக்கு. டையென் ஒன்று சேர நீட்டிய கரங்களில் அந்தப் பித்தான்களைச் சொரிய விடுவது போன்ற காட்சி அவன் மனக் கண்ணெதிரே தோன்றியது. ''ஒவ்வொரு ஜப்பானியனைக் கொன்றபோதும் அவன் சட்டையிலிருந்து ஒரு பித்தானை அறுத்து எடுத்துக் கொண்டேன்'' என்று கூறும்போது அவன் முகம் எப்படி சந்தோஷத்தால் மலரும்? அதை எண்ணிப் பார்க்கையிலேயே வடிவேலுவுக்கு ஆனந்தமாக இருந்தது.

இந்தச் சமயத்தில் பேரிரைச்சலுடன் ஒரு செஞ்சிலுவைச் சங்க லாரி அவனெதிரே வந்து நின்று அவன் சிந்தனையைக் கலைத்தது. நேற்றுவரை அவனுடன் தோளோடு தோள் நின்று போரிட்ட நால்வர் இப்போது உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களைப் பத்திரமான இடத்தில் அமைந்துள்ள ஆஸ்பத்திரியில் கொண்டு சேர்க்கத்தான் செஞ்சிலுவை முத்திரை பதித்த அந்த மோட்டார் வான் வந்திருக்கிறது. அதைப் பார்த்ததும் வடிவேலுவுடைய உற்சாக மெல்லாம் எங்கேயோ இருந்த இடம் தெரியாமல் பறந்து போயிற்று.

இதுவரையில் அவன் எத்தனையோ போர்க் களங்களைக் கண்டுவிட்டான். ஒவ்வொரு யுத்தத்தின் முடிவிலும், இறந்தவர்களை அப்படி அப்படியே விட்டு விட்டும், காயமடைந்தவர்களை ஸ்ட்ரெட்சர்களில் தூக்கிக் கொண்டும் ஜப்பானியரால் நாலாபுறமும் சூழப்பட்ட வேறு பலரைக் கைதிகளாகப் பறிகொடுத்து விட்டும் பின்வாங்கத்தான் நேர்ந்ததே யொழிய ஜெயித்தோம் என்பதில்லை. வெற்றி காண முடியாவிட்டால் போகட்டும்; அவர்களது முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தவாவது செய்தோமா என்றால் அதுவும் நடக்கிற காரியமாகத் தோன்றவில்லை.

மலேயாவுக்குள் புகுந்த கையோடு ஜப்பானியர் மிகுந்த முன்யோசனையுடன் பர்மாவின் தெற்கு முனையிலிருந்த விக்டோரியா பாயின்ட் என்னுமிடத்தில் அமைந்திருந்த விமானக் கூடத்தையும் தங்கள் வசப்படுத்திக் கொண்டு விட்டார்கள். இதனால் இந்தியாவிலிருந்தோ அல்லது மேற்கத்திய நாடுகளிலிருந்தோ இந்தியா – பர்மா மார்க்கமாக சிறிய யுத்த விமானங்கள் பிரிட்டிஷ் ராணுவத்தினருக்குப் பக்கபலமாக வந்து சேர முடியவில்லை. ஏனெனில் நடுவில் இறங்கிப் பெட்ரோல் நிரப்பிக் கொள்ள விமானக்கூட வசதி வேறு இருக்கவில்லை. விமானங்களின் பாகங்களைத் தனித் தனியே கழற்றி எடுத்துக் கள்ளிப் பெட்டிகளில் அடைத்துக் கப்பலேற்றி அனுப்ப அவை சுற்றி வளைத்துக் கொண்டு சிங்கப்பூர் வந்து சேர வேண்டியிருந்தது. இதனால் காலதாமதம் ஆனது மட்டுமல்ல, வரும் வழியில் அந்தக் கப்பல்கள் ஜப்பானிய விமானங்களின் குண்டு வீச்சிலே பலத்த சேதம் அடைந்தன. விமானங்களில் பாதிக்கு மேல் அப்போதே கூண்டோடு கைலாசத்தைச் சென்றடைந்தன. அதாவது கள்ளிப் பெட்டிகளுக்குள் இருந்தபடியே தவிடு பொடியாகின.

பினாங்கைப் பிடித்துக் கொண்ட பிறகு அந்தப் பொல்லாத ஜப்பானியக் குள்ளர்கள் மேற்குக் கடற்கரை ஓரமாகத் தரை மார்க்கமாக முன்னேறி வந்து பிரிட்டிஷாரைத் தெற்குப் புறமாய் விரட்டியதுடன் நில்லாமல்,



படகுகளிலும், சிறிய கப்பல்களிலும் ஏராளமான துருப்பினரை ஏற்றிக் கடல் மார்க்கமாயும் அனுப்பி வைத்தார்கள். இவர்கள் மேற்குக் கடற்கரையில் ஆங்காங்கே இறங்கி ஊட்புகுந்தனர். இவ்வாறு எதிர்ப்புறத்திலிருந்தும் பக்கவாட்டிலிருந்தும் இடுக்கித் தாக்குதலுக்கு உள்ளாகியபோது பிரிட்டிஷ் பட்டாளத்தினர் முன்னும் பின்னுமாய் ஜப்பானியரால் சூழப்படுவதையும், பெரும் பகுதிப் படையினரை விட்டுத் தனியே எதிரியால் பிரிக்கப்படுவதையும் விரும்பாமல் விரைவாகப் பின்வாங்க நேர்ந்தது.

இம்முறையில்தான் வடக்கே காம்பார் என்னும் இடத்தில் வீரச் சீக்கிய மரபினர் சீறிப் பாய்ந்து கொண்டிருந்த போது வடிவேலுவும் அவன் பட்டாளத்தைச் சேர்ந்த மற்றும் பலரும் மேற்குக் கடற்கரையில் டெலாக்—அன்ஸான் பகுதியில் ஏற்பட்ட அபாயத்தைச் சமாளிக்கச் சென்றுர்கள். எவ்வளவோ தீரத்துடன் போராடியும் பயனில்லை. மனிதனுக்கு மனிதன் என்று ஒப்பிட்டால் ஜப்பானியனுக்கு இந்தியன் அல்லது ஜப்பானியனுக்கு ஆங்கிலேயன் வீர தீரப் பராக்கிரமத்தில் சரி நிகரானவன்தான். ஆனுல் யுத்தத்தின் போக்கை நிர்ணயிப்பது தனி மனிதர்களின் அஞ்சா நெஞ்சம் மட்டுமல்லவே. வீரத்தைத் தவிர யுத்தத்துக்குத் தேவையான மற்ற எல்லாவற்றுக்கும் பஞ்சம்தான் என்னும் நிலையில் சிப்பாய்களால் எதைச் சாதிக்க முடியும்?

வீரத்தில் மட்டுமின்றி யுத்த தந்திரத்திலும் ஜப்பானியருக்குத் தான் சளைத்தவனல்ல என்று மைக்கேல் நிரூபித்ததை யெண்ணித் தனக்குள் சிரித்துக்கொண்டான் வடிவேலு. டெலாக்—அன்ஸான் பகுதியில் மூன்று நாட்கள் எதிரியுடன் மிகவும் நெருக்கமாகக் கைகலப்பு யுத்தமே நடத்திய பிறகு இனிப் பயனில்லை என்ற கருத்தில் தலைமைக் காரியாலயத்துக்குத் தகவல் தெரிவித்து விட்டுப் பின்வாங்க உத்தேசித்தனர். மற்றவர்களை யெல்லாம் அனுப்பி விட்டு வடிவேலுவும் மைக்கேலும் மட்டுமே ரேடியோக் கருவியில் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ள முயலுகையில் சற்றும் எதிர்பாராத விதமாக ஜப்பானியப் படையினர் பலர் அவர்களைச் சூழ்ந்துகொண்டனர். ரேடியோக் கருவியிலிருந்த தன் கரங்களை விலக்கித் துப்பாக்கியைத் தொட நீட்டுவதற்கு முன்னல் எதிரியின் தோட்டாக்கள் ஏராளமாய்த் தன் மீது பாய்ந்து விடும் என்பதை அறிந்த வடிவேலு அசையாதிருந்தான்.

ஜப்பானிய வீரர்களின் தலைவனுகத் தோன்றியவன் அரைகுறை ஆங்கிலத்தில் "நீங்கள் சரண் அடைந்து விடுங்கள்!" என்றுன்.

கணப்பொழுது கூடத் தயங்காமல் பெரிதாகச் சிரித்தான் மைக்கேல். ஜப்பானியனுக்குத் திகைப்பாகத்தான் இருந்திருக்க வேண்டும்.

"சரண் அடைவதா? நானு?" என்று ஏளனமாய்க் கேட்டான் மைக்கேல். "அதோ பார்த்தாயா?" என்று பாதிக்கும் மேல் பாழடைந்து கிடந்த ஒரு பழங் காலத்துக் கொட்டகையைச் சுட்டிக் காட்டினுன். அதோ அந்தக் கொட்டகைக்குள்ளே என்னுடைய வீரர்கள் நூறுபேர்கள் இங்கு நடப்பனவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கிறுர்கள். என்மீது உங்களில் யாரேனும் கைவைத்தால் போதும், உங்களில் ஒருவர் கூட மிஞ்சமாட்டீர்கள்" என்றுன்.

ஜப்பானியரின் தலைவன் தயங்கினுன். இப்போது என்னுடன் இருப்பவர்கள் இருபது பேர்தான் என்றுலும் என்னுடைய சேனு வீரர்கள் ஏராளமாய் ஆற்றைக் கடந்து வந்து கொண்டிருக்கிறுர்கள். ஆகவே, எப்படியானுலும் இறுதி வெற்றி எங்களுடையதுதான். அப்படியிருக்கும்போது ஏன் அனுவசியமாகச் சண்டைக்கு வருகிறீர்கள்? சரணடைந்து உயிர் பிழைப்பதே உங்களுக்கு நல்லது" என்றுன்.

மைக்கேல் யோசிப்பதுபோல் சில விநாடிகள் பாவனை செய்தான். பின்னர், "எதற்கும் என் நண்பர்களைக் கலந்தாலோசித்துக் கொண்டு வருகிறேன். அவர்கள் சம்மதித்தால் எனக்கு ஆட்சேபணையில்லை" என்றுன்.

"சரி, அப்படியானுல் நீ போய் வா. இவன் இங்கேயே இருக்கட்டும்" என்று ஜப்பானியத் தளபதி, வடிவேலுவைக் குறிப்பிட்டுக் கூறினுன்.

"இல்லை. அவனும் உடன் வருவதுதான் நல்லது. என் துருப்பினரில் பெரும்பாலோர் இந்தியர். ஆகவே இங்கு நடந்ததை இவன் அவர்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லமுடியும்."

வேண்டா வெறுப்பாக இதற்குச் சம்மதித்தான் ஜப்பானியன். மைக்கேலும் வடிவேலுவும் கிளம்பினுர்கள். "தைரியமாகவும் அமைதியாகவும் நட, வடிவேலு!" என்று எச்சரித்தான் மைக்கேல்.

வெற்றிடமாயிருந்த அந்தக் கொட்டகையினுள் நுழைந்து, ஜப்பானியரின் பார்வையிலிருந்து மறைந்ததுதான் தாமதம், இருவரும் பின்பக்கக் கதவு வழியே எடுத்தார்கள் ஓட்டம்! அவ்வப்


பீனிக்ஸ்
ஆடைகள்
நவ நாகரீகக்
குறிப்புகளில்
முதலிடம் பெறுகின்றன
வாயில்கள்
பாப்லின்கள்
ஸூட்டிங்குகள்
பீனிக்ஸ் மில்ஸ்
ஒரு ரூபா ஸ்தாபனம்

போது மரங்களுக்குப் பின்னால் ஒளிந்தும் புதர்களுக்கு இடையில் பதுங்கியும் ஜப்பானியரின் கழுகுக் கண்களில் தட்டுப்படாமல் தப்பினார்கள். பத்திரமான இடத்துக்கு வந்து சேர்ந்ததும் கோழை போல் ஓடி வர நேர்ந்தது பற்றித் தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டான் வடிவேலு.

''அப்படி அவர்களை ஏய்த்துவிட்டு வந்திருக்க வில்லையானால் இந்நேரம் என்னை மரத்திலே தலைகீழாகத் தொங்க விட்டுச் சவுக்கடி கொடுத்துக் கொண்டிருப்பார்கள். அதைத்தான் நீ விரும்புகிறாயா?'' என்று கேட்டான் மைக்கேல்.

வடிவேலு வாயடைத்துப் போனான்.

அத்தியாயம் 35

கைதிகள் முகாம்

காம்பார் என்கிற அந்த மலைப்பாங்கான பிரதேசத்தில் காப்டன் கிரஹாம் தமது பஞ்சாபி சீக்கிய பட்டாளத்துடன் நடத்திய யுத்தம் பற்றிக் கேள்விப்படுவதே மெய்சிலிர்க்க வைப்பதாக இருந்தது வடிவேலுவுக்கு. மேட்டுப்பாங்கான பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டால் அங்கிருந்தவாறே கீழ் நோக்கிப் பீரங்கிகளால் சுட்டுச் சேனை வீரர்களையும் அவர்களுடைய உபகரணங்களையும் அடியோடு அழிப்பது மிகச் சுலபமாயிருக்கும் எனக் கண்ட ஜப்பானியர் அத்தகைய உயரமான இடங்களில் இரண்டினைத் தாக்கும் முயற்சியில் இறங்கினார்கள்.

உயிரைத் திருணமாக மதிக்கும் வழக்கமான ஆவேசத்துடன் ஜப்பானியத் தாக்குதல் நடைபெற்றது. பிரிட்டிஷ் இந்திய வீரர்களும் விடாப்பிடியாக நின்றார்கள். கடைசியில் பல மணி நேரத் துவந்த யுத்தத்துக்குப் பின் ஜப்பானியர் இந்தப் பகுதியில் ஒரு முக்கியமான இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டு விட்டார்கள். சீறி எழுந்தது சீக்கியப் படை. தங்கள் அணிகளைச் சீர்ப்படுத்திக் கொண்டு நிமிர்ந்த தலையுடனும் விம்மிப் புடைத்த மார்புடனும் அந்தப் பஞ்சாபிகள் யுத்த முழக்கம் செய்து கொண்டு ஜப்பானியர் மீது விழுந்து பெரும் சேதத்தை விளைவித்தனர். காப்டன் கிரஹாம் படுகாயமடைந்து சாய்ந்தார். இனி என்ன செய்வது? யார் தங்களுக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்லப் போகிறார்கள் என்று வீரர்கள் யோசிக்கையில் அவர்களுடைய சுபேதார் சிங்கநாதம் எழுப்பித் தமது சகோதரர்களைக் கூவி அழைத்தார். ஆங்கிலேயன்



அல்லாது தங்களைச் சேர்ந்த ஒருவனே தங்களுக்குத் தலைமை தாங்கப் போவதை உணர்ந்ததும் அங்கு மகிழ்ச்சி ஆரவாரம் எழுந்தது. அவர்களுடைய வாழ்த்தொலிகளும் போர் முழக்கங்களும் கர்ஜனையாகக் கிளம்பியது, கொந்தளிக்கும் அலைகடலின் பேரிரைச்சலாயிற்று. பின்னர் குருதி வெறி கொண்ட இடி முழக்கமாகக் கேட்டது. ஜப்பானியர் அந்தப்பகுதியில் பூண்டோடு அழிக்கப்பட்டனர். எனினும் யுத்தத்தின் முடிவில் நூறு பேர் அடங்கிய அந்தச் சிக்கிய சைனியத்தில் எஞ்சியிருந்தவர்கள் முப்பது பேர்களே!

ஃ ஃ ஃ

நினைத்து நினைத்துப் புளகாங்கிதமுறக் கூடிய இத்தகைய நிகழ்ச்சிகளோடு எண்ணி எண்ணி எள்ளி நகையாடக் கூடிய அபத்தக் காரியங்களும் நடைபெற்றுக் கொண்டே தான் இருந்தன. ரயில்வேப் பாலம் ஒன்றைத் தகர்க்க ஏற்பாடு நடந்தது. பாலம் தொய்ந்தது; ஆனால் கீழே விழவில்லை. கரையிலிருந்த ஒரு ரயிலைக் கிளப்பி விட்டு விட்டு டிரைவர் வெளியே குதித்து விடுவதென்றும் பாலத்தின் மேலாக ரயில் செல்லும்போது அதன் கனத்தைத் தாங்காமல் பலவீனமடைந்திருந்த பாலம் உடைந்து ஆற்றில் சரிந்து விடும் என்றும் தீர்மானித்தார்கள். இம்முறையில் ரயிலைப் பறி கொடுக்கவும் தயாராயிருந்தார்கள். டிரைவர் கீழே குதிக்கு முன்னர் ஊதலை இழுத்து விட்டு விட்டார். அது இறுக்கமாகப் பிடித்துக் கொள்ளவே, 'கூ'வென்று ஊதிக் கொண்டே ரயில் சென்றது! பாலத்தின் மேலாகப் போயிற்று! போய்க்கொண்டேயிருந்தது! அக்கரைக்கு ஒருவித தடங்கலுமின்றிப் போய்ச் சேர்ந்து தனது பிரயாணத்தைக் குதூகலமாகக் கூவிக் கொண்டே தொடர்ந்தது! அவ்வளவு பலமான பாலத்தை அமைத்த பொறி இயல் நிபுணர்களைச் சபித்துக் கொண்டே பிரிட்டிஷ் ராணுவத்தினரும் போய்ச் சேர்ந்தார்கள்! பல சந்தர்ப்பங்களில் பிரிட்டிஷ் துருப்பினரும் யுத்த தளவாடங்களும் அக்கரையில் இருக்கும் போதே ஆறுகளின் மேல் இருந்த பாலங்கள் தகர்க்கப்பட்டன.

பிறுங்கில் எது எதற்கெல்லாமோ வெடிமருந்து வைத்துத் தகர்த்த பிரிட்டிஷார் பிறுங்கு ரேடியோ நிலையத்தை மறந்தே விட்டார்கள்! பிறுங்கை ஜப்பானியர் வந்தடைந்த ஒரு சில நாட்களுக்குள் அந்த ரேடியோ நிலையம் அவர்களுடைய பிரசாரப் போருக்குப் பெரிதும் பயன்பட்டது.

ஏராளமாகச் சேமித்து வைக்கப்பட்டிருந்த அரிசியைக் கொளுத்துவதென்பது சாத்தியமாக இல்லை. சுலபத்தில் பற்றி எரிவதில்லை அந்தத் தானியம். மழையில் நனையுமாறு திறந்து வைத்தாலும் மேற்பகுதி மட்டுமேதான் பாழாகும். ஆகக்கூடி ஜப்பானியருக்கு உணவுப் பற்றாக்குறைப் பிரச்னை ஏற்படவில்லை!






வருஷம் முழுவதும் பண்டிகையின் குதூகலம்...

நேஷனல் எக்கோ ரேடியோ


அளிக்கும் இன்ப அனுபவம்!

பண்டிகை நாட்கள் முடிந்த பிறகும், குடும்பத்தினர் அனைவரும் இணையிலா இசை இன்பத்தை அனுபவிப்பதற்கு ஒரு நேஷனல்-எக்கோ ரேடியோ இருந்தால்போதும். அது உங்கள் வீட்டை இனிமையான சங்கீதம் நிறைந்த இன்ப உலகமாக மாற்றும்!

உங்களுக்குத் திருப்தியளிக்கும் முறையில் தயாரிக்கப் பட்ட இந்த ரேடியோக்கள் உங்கள் சக்திக்கேற்ற விலைகளில் உள்ளன... நீங்கள் தேர்ந்தெடுக்க, ரூ. 125.00லிருந்து ரூ. 725.00 வரையிலுள்ள 9 வனப்பு மிகுந்த மாடல்கள்! உங்கள் அருகிலுள்ள நேஷனல்-எக்கோ வியாபாரியை இவற்றை இலவசமாக இயக்கிக் காட்டச் சொல்லுங்கள்.




மாடல் U-764:
5 வால்வுகள், 3 பாண்டுகள்
அழகிய பெட்டி. ரூ. 265.00




மாடல் U-755:
6 'நோவல்' வால்வுகள்,
3 பாண்டுகள் வனப்புள்ள
மரப்பெட்டி. ரூ. 355.00







மாடல் 768: 9 வால்வுகளின் வேலையைச் செய்யும் 6 'நோவல்' வால்வுகள்,
8 பாண்டுகள். அழகிய மரப்பெட்டி.
ரூ. 570.00




மாடல் B-764:
ட்ரை பாட்டரி ஸெட்.
4 வால்வுகள், 3 பாண்டுகள்
அழகிய பெட்டி. ரூ. 265.00




மாடல் U-756: 3 'நோவல்' வால்வுகள்,
2 பாண்டுகள். குறைந்த விலையில்
பெரிய ஸெட்களின் மதிப்பு. கண்கவர்
பெட்டி. ரூ. 125.00



மாடல் A-744:
8 வால்வுகளின் வேலையைச் செய்யும்
6 'நோவல்' வால்வுகள், 4 பாண்டுகள்.
கண்ணைக்கவரும் பெட்டி. ரூ. 405.00



மாடல் B-755:
ட்ரை பாட்டரி ஸெட். 5 'நோவல்'
வால்வுகள், 3 பாண்டுகள்.
வனப்புள்ள மரப்பெட்டி. ரூ. 355.00



மாடல் A-767:
7 வால்வுகள், 8 பாண்டுகள். வனப்பு
மிகுந்த பெரிய பெட்டி. ரூ. 725.00

விலைகள் எல்லாம் எக்ஸைஸ்
வரி உள்பட; இதர வரிகள் தனி

GRA

ஜெனரல் ரேடியோ &
அப்ளையன்ஸஸ்
லிமிடெட்

பம்பாய் . கல்கத்தா
மதராஸ் . டில்லி . பாட்னு
பெங்களூர் . ஸெகந்திராபாத்

JWT/GRA/4226a

நேஷனல் எக்கோ

மேஜர் ஜெனரல் லயான் தமது துருப்புக்கள் ஒரு பாலத்தைக் கடந்து பின்வாங்குவதை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தார். அச்சமயத்தில் மோட்டார் சைக்கிள்களில் அவசரத் தூதர்களைப் போல் தோன்றிய மூவர் அவர்களைத் தாண்டிச் சென்றனர். மூவரில் முதல்வன் போகிற போக்கில் ஜெனரலுக்கு மிக அருகில் வந்து சுாமசைத்தும் பெரிதாகச் சிரித்தும் விடைபெற்றுக் கொண்டு சென்றான். அப்போது தான் திடுக்கிட்டு விழிப்புற்ற மேஜர் ஜெனரல் லயான், ''ஜப்பானியன்! விடாதீர்கள்! சுடுங்கள்!'' என்று கூவிக் கொண்டே தாமும் துப்பாக்கியை உருவினார். பின்னால் சென்ற மோட்டார் சைக்கிள் வீரர்கள் இருவரும் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையானார்கள். ஆனால் முதலில் சென்ற ஜப்பானியன் தப்பிப் போயே விட்டான். அவன் என்னவெல்லாம் ஐந்தாம்படை வேலைகளில் ஈடுபட்டானென்பது யாருக்குத் தெரியும்? ஒரு மேஜர் ஜெனரல் கண்ணெதிரிலேயே பிரிட்டிஷாரின் ஆளுகைக்கு இன்னமும் உட்பட்டிருந்த பிரதேசத்துக்குள் சிரித்துக்கொண்டே நுழைந்து செல்லுகிற இது போன்ற சாகஸச் செயல்களினால் ஜப்பானியர் பிரிட்டிஷ் ராணுவத்தினரிடையே குழப்பம் விளைவித்தார்கள் என்பதோடு ஜப்பானியன் தங்களால் தாக்குப் பிடிக்க முடியாத அசகாயசூரனே என்கிற பிரமிப்பையும் பரவச் செய்தார்கள்.

ஃ ஃ ஃ

இரவு நேரம். பகல் பொழுதிலேயே நிழல் படர்ந்து இருளடைந்ததாகத் தோன்றக் கூடிய ரப்பர்த் தோட்டத்தில் பூரண சந்திரனின் ஒளிக் கிரணங்கள் மெல்லிய கீற்றுக்களாக உட்புகுந்து மிக மங்கலான ஒளி பரப்பின. காம்பார் என்னும் இடத்திலிருந்தும் டெலாக் — அன்ஸான் என்னுமிடத்திலிருந்தும் பின்வாங்கி ஸ்லிம் ஆற்றங் கரையில் பரவலாகத் தண்டு இறங்கியிருந்த பிரிட்டிஷ் வீரர்கள் சுகமான நித்திரையில் ஆழ்ந்திருந்தார்கள்.

ரப்பர்த் தோட்டக்கூலிகள் காலி செய்து விட்டுப் போன குடிசைகளுள் ஒன்றில் கயிற்றுக் கட்டிலில் படுத்து ஆனந்தமாகத் தூங்கிக் கொண்டிருந்தான் வடிவேலு. மூன்று நாட்களாய் ஜப்பானியரைச் சந்திக்கவேயில்லையாதலால் அவர்கள் அனைவரிடமும் ஒரு வித அலட்சியம் குடிகொண்டிருந்தது. வடிவேலுவும் இதற்கு விலக்கானவன் அல்ல. இந்த அமைதி பின்னால் நிகழப் போகிற ஒரு பயங்கர யுத்தத்தின் அறிகுறி என்பதை அவன் நன்றாக உணர்ந்திருந்தான். என்றாலும் ஒரு நப்பாசை. மூன்று நாட்களாய்க் கண்களில் தட்டுப்படாதவர்கள் இன்று மட்டும் வந்து விடவா போகிறார்கள் என்கிற அர்த்தமற்ற ஒரு வாதம் உருவாகி அவனையும் மற்றவர்களையும் ஆழ்ந்த ஆனந்தமான தூக்கத்தை அனுபவிக்க வைத்தது.

திடீரென்று அண்டசராசரங்கள் தவிடு பொடியாவது போன்ற பேரிடியோசை கேட்டது. தன் தலையிலே இடிவிழுந்து விட்டது போலத் துள்ளி எழுந்தான் வடிவேலு. துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டான்; தொப்பியைத் தலையில் கவிழ்த்துக் கொண்டான். சாலையைப் பார்க்க ஓடினான். அந்தப் பிரதேசத்தில் சாலையும் ரயில்வே தண்டவாளப் பாதையும் ஒன்றையொன்று ஒட்டினாற் போல் அமைந்திருந்தன. அடர்ந்த காட்டையும் பின்னர் ரப்பர்த் தோட்டங்களையும் அவை ஊடுருவிக் கொண்டு சென்றன.

இந்த இடத்தில் எதிரிகளின் தாக்குதல் எளிதாக நடக்க முடியாது என்று கருதி, தண்டு இறங்க அப்பிரதேசத்தைத் தேர்ந்தெடுத்தனர் ஆங்கிலேய அதிகாரிகள். எதிரி டாங்குகள் வருவதானால் சாலை வழியாக மட்டும்தான் வர வேண்டும். அவையும் ஒன்றன்பின் ஒன்றாகத்தான் வர வேண்டும். ஆகவே, அவர்களைச் சுலபமாய்த் தடுத்து நிறுத்தி விடலாம் என்று எண்ணியிருந்தார்கள். டாங்குகளின் முன்னேற்றத்துக்கு இடையூறாகக் காங்கிரீட் உருளைகளைச் சாலையின் குறுக்கே வைத்ததோடு திருப்தியடைந்தார்கள்.

அவர்கள் போட்ட கணக்கு எவ்வளவு பிசகு என்பதை வடிவேலு நிதர்சனமாய்க் கண்டான். ஜப்பானிய டாங்குகளுடன் வந்த காலாட்படையினர் உருளைகளை அகற்றி வழி ஏற்படுத்தினர். பிரிட்டிஷ் வீரர்கள் விழித்தெழும் முன்னரே காட்டுப் பகுதியில் வெகுதூரம் உட்புகுந்து விட்ட அவர்கள் ரப்பர்த் தோட்டப் பிரதேசத்தை அடைந்ததும் டாங்குகளைச் சாலையை விட்டுத் திருப்பினர். ரப்பர்த் தோட்டங்களில் மரங்களுக்கிடையே புகுந்து பரவலாகச் செல்வது அந்த டாங்குகளுக்குக் கொஞ்சம் கூடச் சிரமமாக இல்லை. முன் விளக்குகள் பிரகாசமான ஒளி வீச அவை வெகு சீக்கிரத்தில் பிரிட்டிஷாரின் முன்னணிப் படைகளைத் தாண்டி அப்பால் சென்று அவர்களுக்குப் பின்னாலிருந்த பட்டாளங்களையும் தாக்கத் தொடங்கின. இவர்களுக்கோ ஜப்பானிய டாங்குகளைக் கண்



உங்கள் கூந்தலின் உண்மை அழகை வெளிப்படுத்த

கால்கேட்

பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் உபயோகியுங்கள்



உங்களுக்குப் பிடித்தமான கூந்தல் அலங்கரிப்பு எதுவாயினும், கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலைத் தவறாமல் தேய்த்து வருவது கூந்தல் அடர்த்தியாக அழகுடன் வளர்வதற்கு இன்றியமையாதது!

தினந்தோறும் கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலை மயிர்க்காலிலும், கேசத்திலும் தேய்த்துக் கொள்வது லக்ஷக்கணக்கான குடும்பங்களில் இப்பொழுது குளிக்குமுன் செய்யும் அவசியமான பழக்கமாகிவிட்டது. இவ்வெளிய பழக்கத்தினால் உங்கள் கூந்தல் அடர்த்தியாக நீண்டு பளபளப்புடன் வளருவதுடன், இளமைத் துடிப்பின் சக்தியோடும் அற்புத ஜ்வலிப்போடும் விளங்குவதைக்கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள்.

எல்லோரும் அதிசயிக்கும் வண்ணம் உங்கள் கூந்தலின் உண்மையழகை வெளிப்படுத்த கால்கேட் உதவுகிறது.





மகிழ்ச்சிதரும் நறுமணம்
உங்கள் குடும்பம் முழுவதும் அதை விரும்பும்!

கால்கேட்

பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்

ECHO-G-A-TAM.

டதும் ஒன்றுமே புரியவில்லை. 'திடுதிப்பென்று எதிரி இங்கே எப்படி முளைத்தான்? முன்னணிப் படையினர் இவர்களை எதிர்க்க முயலவே யில்லையா? அதுதான் இல்லையென்றால் நமக்கு ஏன் செய்தி அனுப்பி எச்சரிக்கவில்லை?' என்று திகைத்துச் செயலிழந்தனர். ரேடியோ, டெலிபோன் கருவிகளை ஸ்லிம் ஆற்றங்கரைப் பகுதியில் பிரவேசித்ததும் முதல் காரியமாக ஜப்பானியர் தகர்த்து அழித்தது இவர்களுக்கு எவ்வாறு தெரியும்?

முதலில் ஏற்பட்ட இந்த ஆச்சரியம் நீங்கிய பிறகு பிரிட்டிஷ் துருப்பினர் தங்கள் சாமர்த்தியத்தையும் காட்டத் தொடங்கினார்கள். ஆனால் காலம் கடந்து அவர்கள் காட்டிய வீரம் பலன் அளிக்கவில்லை. இந்தப் போரில் பிரிட்டிஷ் சிப்பாய்களுள் நான்கில் ஒருவர் வீதமே தப்பிப் பிழைத்துத் தெற்கே வந்து சேர்ந்தார்கள். மலாய் நாட்டின் யுத்த சரித்திரத்திலேயே பிரிட்டிஷார் நினைத்து நினைத்து வெட்கித் தலை குனிய வேண்டிய இந்தப் படுதோல்விக்காக ஏராளமானவர்கள் உயிர் இழந்தார்கள், அல்லது சிறைப்பட்டார்கள். அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுள் வடிவேலுவும் ஒருவன்.

ஃ ஃ ஃ

ரப்பர்த் தோட்டத்தில் தாற்காலிகமாக அமைந்திருந்த கைதிகள் முகாமிலிருந்தபடி சற்றுத் தொலைவில் தென்பட்ட கட்டடத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த கோலாகல வைபவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான் வடிவேலு. சில நாட்களுக்கு முன்பு வரை அந்த ரப்பர்த் தோட்டத்தின் அதிபதியாக விளங்கிய ஆங்கிலேயன் வாழ்ந்த பங்களா அது. யுத்தத்தை முன்னிட்டு அதைக் காலி செய்துவிட்டுப் போனபோது அதன் சொந்தக்காரன் தாராள மனப்பான்மையுடனோ அல்லது மறதியினாலோ மதுப் புட்டிகள் பலவற்றை விட்டுச் சென்றிருக்க வேண்டும். மாலை முதலே அங்கே ஒரே ஆர்ப்பாட்டமாக இருந்தது. மோட்டார் கார்களோ அக்கம் பக்கத்துக் கிராமத்திலிருந்து பலவந்தமாகப் பிடித்துக் கொண்டுவரப்பட்ட மங்கையரை இறக்குமதி செய்த வண்ணம் இருந்தன. இப்போது ஜப்பானியரின் கொண்டாட்டம் ஓர் உச்சகட்டத்தை அடைந்திருப்பதாய்த் தோன்றியது. சிரிப்பும் கும்மாளமும், ஆட்டமும் பாட்டமும், இசைத் தட்டுச் சங்கீதமும் வாத்திய ஒலிகளும் ஒரே கலாட்டாவாக இருந்தன.

தங்களைக் காவல் காத்த வீரனிடம் அமர்க்களத்துக்குக் காரணம் ' கேட்டான் வடிவேலு. அவனுக்குப் பாஷை புரியவில்லை. இச்சமயத்தில் ஜப்பானிய சேனாபதி ஒருவன் கைதிகள் முகாமுக்கு வந்தான். பின்னோடு களியாட்டத்தில் பங்கு பற்றிய பரிவாரத்தினரும் வந்தனர். பிரகாசமான ஸர்ச் லைட்டுகள் தளபதியின் உத்தரவுப்படி எரிந்து முகாமை ஒளி வெள்ளத்தில் ஆழ்த்தின.

''இந்த முகாமில் எத்தனை ஆங்கிலேயர்கள் இருக்கிறார்கள்?'' என்று வினவினான் தளபதி. ஓரமாயிருந்த இரண்டு வெள்ளையரும் மெல்ல எழுந்து நின்றனர். சேனாபதி அவர்களை ஏற இறங்கப் பார்த்தான். ''இழுத்து வாருங்கள்!'' என்றான் கண்களில் கொடூரம் தாண்டவமாட. கைதியான பின்னரும் அவர்களுள் ஒருவன் தொப்பி அணிந்திருப்பதைப் பொறுக்காமல் அதனைத் தட்டிவிட்டான் ஒரு ஜப்பானிய வீரன். உடனே கேலிச் சிரிப்பும் கூச்சலும் காதுகளைச் செவிடாக்கும் விதமாய் எழுந்தன.

''நாங்கள் ஆங்கிலேயரல்ல; ஆஸ்திரேலியர்'' என்று சொன்னார்கள் கைதிகள் இருவரும்.

''வெள்ளைத் தோல் படைத்தவர்கள் எனக்குத் தேவை; அவ்வளவுதான்'' என்றான் ஜப்பானியத் தளபதி மதுக் கோப்பையைக் காலி செய்தவாறே. ஜப்பானியரிடம் அகப்பட்ட வெள்ளையனின் கதி என்ன என்பதுபற்றி மைக்கேல் கூறியது வடிவேலுவுக்கு நினைவு வந்தது.

'ஐரோப்பியனைச் சித்திரவதை செய்தால்தான் இவர்களுடைய கோலாகலம் நிறைவு பெறுமா?'

''இன்றைக்கு நடைபெறுகிற கொண்டாட்டத்தின் காரணம் என்ன தெரியுமா? உங்களுடைய ஜெனரல் வேவல் இன்றைக்குப் பிரிட்டிஷ் பட்டாளங்களையெல்லாம் நேரில் பார்வையிட்டார். நீங்கள் ஐந்து மைல் ஆறு மைல் என்று கொஞ்சம் கொஞ்சமாகப் பின்வாங்குவதெல்லாம் அவருக்குத் திருப்தியளிக்கவில்லையாம். அவமானமாயிருக்கிறதாம். பிரிட்டிஷாரின் பெருமைக்கு ஏற்ப ஒரே எட்டில் குறைந்தபட்சம் நூற்றி ஐம்பது மைல்களாவது பின்வாங்க வேண்டும் என்று உத்தரவு போட்டு விட்டுத் திரும்பி யிருக்கிறார்!'' இவ்வாறு கூறிவிட்டு அட்டகாசமாய்ச் சிரித்தான் அந்த ஜப்பானிய அதிகாரி. அவனுடன்கூட இருந்தவர்களும் அடக்க மாட்டாமல் சிரித்தார்கள்.

வடிவேலுவுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. (தொடரும்)

பொன் விலங்கு

(ஓர் அறிமுகம்)

இந்த நாவலின் கதாபாத்திரங்கள் மனித வாழ்க்கையின் எல்லா விதமான சுகங்களுக்கும் திருப்திகளுக்கும் மட்டுமே பிரதிநிதிகளாக வரவில்லை. இவர்கள் மனித வாழ்க்கையின் பலங்களையும், பலவீனங்களையும் சேர்த்தே சந்திக்கிறார்கள். சுகத்தைக் காணும்போது துக்கத்தைப் பற்றிய ஞாபகத்தையும் உணர்கிறார்கள். திருப்தியைக் காணும்போது அதிருப்தியை எதிர்பார்த்தும் ஏங்குகிறார்கள். குரூரங்களையும், வசீகரங்களையும், வாழ்க்கை விதியின் முடிவற்ற பாதையில் மாறி மாறிச் சந்திக்கிறார்கள்.


இவர்களுடைய கதை வாழ்க்கையில் அல்லது வாழ்க்கைக் கதையில் இவர்களை மையமாகக் கொண்ட பிரச்னைகளும், சம்பவங்களும் மட்டுமே இடம் பெறவில்லை. தமிழ் நாட்டின் இன்றைய சமுதாய வாழ்க்கையிலுள்ள எல்லாவிதமான பிரச்னைகளுக்கும் இந்த நாவல் ஒரு கண்ணாடி. இதில் வருகிறவர்களின் வாழ்க்கை ஒரு சோதனைக் களம்.

பாக்குவெட்டியின் இரண்டு முனைகளுக்கும் நடுவே வைத்து அழுத்தப் பெறும் பாக்கைப் போல் வறுமைக்கும் வாழ்க்கை ஆசைக்கும் நடுவே சிக்குண்டு தவிக்கும் பல்லாயிரக்கணக்கான சாதாரண மக்களின் நடுவேயிருந்துதான் இந்த நாவலின் கதாபாத்திரங்களுடைய குரலும் கேட்கிறது. இவர்கள் ஆகாயத்திலிருந்து குதித்து வருகிற அற்புதங்களாகக் கற்பனை செய்யப்படவில்லை. யதார்த்த உலகத்தின் சகல விதமான சுகதுக்கங்களும், இலாப நஷ்டங்களும் — இவர்களுக்கும் உண்டு. ஆனாலும் இவர்கள் தங்கள் கால்களைத்தான் மண்ணின்மேல் ஊன்றி நிற்க முயல்கிறார்கள். தங்கள் மனத்தில் மண்படாமல் காப்பதற்கு இவர்கள் படுகிற பாடு?...... சொல்லி முடியாது.

உண்மையையே ஒரு சமயமாக வழிபடுவதற்கு முயல்கிற சத்திய வேட்கையோடு கூடிய ஒரு கதாநாயகன். வாழ்க்கை விதியின் பல்வேறு திருப்பங்களிலும் நடந்து நடந்து அனுபவங்களால் வளரும் அவன் வாழ்க்கை. எந்த நிலையிலும் தன்னை உணர்ந்து கொள்ளத் தயங்காத பேராண்மையோடு நிகழ்காலத்தின் சமுதாயப் பிரச்னைகளைச் சமாளிக்கும் அவன் தைரியம் ஆகிய இவையெல்லாம் இந்த நாவலில் இடம் பெறுகின்றன.

''இந்தத் தேசத்தில் வயிற்றுக்குச் சோறில்லாத கடைசி ஏழை இருக்கிற வரை என் வீட்டில பாயசமும் பண்டிகைகளும் இல்லை. தெருவோரத்தில், மரத்தடியில், புழுதியில் படுத்துறங்கும் அனாதைகள் இருக்கும்வரை நான் கட்டிலும் மெத்தையும் விரித்துப் படுப்பது பாவம்'' என்று எண்ணும் சிந்தனைகள்தான் இந்தக் கதாநாயகனுடைய செல்வம்.

கடமைகளுக்காகப் போராடும் நியாயவாதியான அவன் வாழ்க்கையிலும் ஒரு காதல். அவனைத் தேடித் தன் இதயத்தை ஆளச் சொல்லிச் சமர்ப்பிக்கும் ஒரு பெண். தன் இலட்சியங்களையும், அவளையும் சேர்த்து ஆளமுடியாமல் அவன் தவிக்கிற தவிப்பு — எல்லாம் தனிமையான நடையில் வளர்கிற கதை.



கல்கி

பொங்கல் மலரில்

ஆரம்பமாகிறது

பங்கிம் சந்திரரின் 'ஆனந்த மடத்'தைப் போல் ஒரு தேசத்தின் வாழ்க்கையையே மாற்றி அமைத்துப் புத்துயிரூட்டும் நாவல்கள் பிறக்க வேண்டுமென்று விமர்சகர்கள் சொல்லுகிறார்கள். 'வந்தே மாதரம்' என்ற தேசிய வழிபாட்டுக் குரல் ஆனந்த மடத்திலிருந்துதான் முதன் முதலாக ஒலித்தது.

ஆனல் சுதந்திர பாரதத்தின் இந்த நூற்றாண்டில் வாழும் பேறு பெற்ற புதுயுகக்கதாநாயகனை நம் கதாநாயகனே இப்படிப் பல தார்மீக இலட்சியங்களைத் தன் குரலாக இந்த நாவலில் ஒலித்துப் பெருமைப்படுகிறான்.

''இந்த உலகத்தில் ஒரே நோய்தான் உண்டு. ஒரே மருந்துதான் உண்டு. அன்பு இன்மைதான் பெரிய நோய். அன்புதான் மருந்து. துன்பம், சோர்வு பயம் எல்லாம் அன்பில் அழிந்துவிடும்'' என்று இலட்சியக்குரல் எழுப்புகிறான் இக்கதையின் நாயகன்.

''இந்தியாவே! என் இதயம் அணி செய்யும் இந்தியாவே! கங்கையும், யமுனையும், காவிரியும், வைகையும் பொங்கிப் பொலியும் புனிதத் திருநாடே! புண்ணிய மண்மகளே! கதைகளில் எல்லாம் உன் கதையே மிகவும் துயரமானது'' என்று கவிஞர்கள் உரைத்த தேசிய வழிபாட்டை இந்தக் கதாநாயகனும் உணர்கிறான். உணர்ந்து வழிபடுகிறான். சத்திய வேட்கை நிறைந்த இந்தக் கதாநாயகனுடைய சமூக வாழ்க்கை இணையற்ற கதையாக உருவாகி வளர்வதைக் கல்கி நேயர்கள் ஆவலோடு எதிர்பார்த்திருப்பார்களாக.

மணிவண்ணன்

எழுதும்

பொன் விலங்கு





இவர்களுக்கெல்லாம்—

சந்திரனே சாட்சி



கதை :

கௌசிகன்


சித்திரம் :

விஜு


சேகர் எம்.ஏ.பி அட்வகேட்
பாங்கியில் குறிப்பிட்டார்களே அந்தப் பிரபல அட்வகேட் சேகர் இவராகத்தான் இருக்க வேண்டும்.
கம் இன் — வாங்கோ சார் என்ன வேணும் உங்களுக்கு?
கிருஷ்ணசாமி என்று என்னை இங்கு அழைப்பார்கள். கோவிந்தத் தெருவில் வசிக்கிறேன். உங்களைப் பற்றி பாங்கியில் சொன்னார்கள்
ரொம்ப சந்தோஷம். என்னால் உங்களுக்கு ஆக வேண்டியது என்னவோ?
இதில் ஆயிரம் ரூபாய் இருக்கிறது. நீங்கள் உடனே என்னுடன் வாழையூருக்குக் கிளம்பி வர வேண்டும். இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்... ஹ...ல்...
என்றவர் மயங்கி விழுகிறார்...
பேசிக் கொண்டிருக்கும் போதே இப்படித் திடீரென்று மயங்கி விழுந்து விட்டாரே மனிதர்...!
வந்ததிலிருந்தே அவர் இயற்கையாக இல்லை. உடனே ஆம்புலன்ஸுக்குப் போன் செய்...



என்ன அவசரமான செய்தியோடு வந்தாரோ!
இங்குள்ள தம்பதியும் புலிக்குச் சரியான வேலை கொடுக்க வேண்டுமென்றே இவர் இங்கு வந்து சேர்ந்தாரோ?
ஆம்புலன்ஸ் வரவே கிழவரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கிறான் சேகர்.
என்னப்பா, சேகர் என்ன புரட்டுகிறாய்!
பாளையூர் எங்கே இருக்கிறதென்று ரயில்வே கைடைப் புரட்டுகிறேன்
அவர் தம் பெயரைச் சொன்னாரே, அது கூட அவரது உண்மைப் பெயர் என்று தோன்றவில்லை. ம்... ஹலோ
விஜயநகர பாங்கா...?
'பல வருஷங்களாக பாங்கிடம் கணக்கு வைத்துக் கொண்டிருக்கிறார். யோக்கியமானவர். நான்கு வருஷங்களுக்கு முன் தம் சேமிப்பிலிருந்து ஐயாயிர ரூபாயை எடுத்துக் கொண்டார். இன்று காலை பத்து மணிக்குத் தம் பேரிலிருந்த முழுத் தொகையையும் எடுத்துக் கொண்ட பின், நல்ல திறமையுள்ள லாயர் ஒருவரைச் சிபார்சு செய்யுமாறு கேட்டுக் கொண்டதின் பேரில் உங்கள் பெயரைச் சொன்னோம்
இதுதான் விஜயநகர பாங்கி கொடுத்த தகவல்கள்
அவர் வேலை செய்த காரியாலயத்தில் நேற்றுத் தம் வேலைக்கு ராஜீநாமாக் கொடுத்து விட்டாராம். எல்லாம் ஒரே மர்மம்... மர்மம்!
சந்துரு, அதோ அது என்ன கீழே ஒரு கவர்...?
அந்தக் கிழவர் மயங்கி விழுந்த போது அவரிடமிருந்து நழுவி இருக்க வேண்டும்....
தினசரிப் பத்திரிகையிலிருந்து வெட்டி எடுத்த ஒரு குறிப்பு. மங்கிப் போனது. பத்திரிகை வெளியான தேதி 1937-ம் வருடம் ஜூலை மாதம் பத்தாம் தேதி.



இத்தனை வருடங்களுக்குப் பிறகு தன்னைக் காட்டிக் கொள்ள விரும்புவானேன்? வக்கீலின் உதவி எதற்கு?
உன் குழப்பங்கள் தெளிய வேண்டுமானால் அந்தப் பெரியவரின் மயக்கம் தெளிய வேண்டும். ஆஸ்பத்திரிக்குப் போவோம் வா.
ஏதோ ஒரு விஷயத்தைப் பற்றிப் பல நாளாகக் கவலைப்பட்டு அதனால் நேர்ந்த விபத்து இது. 'ஹைப்பர்டென்ஷன்'னால் வலப்பக்கம் முழுதும் உணர்வற்றுப் போயிருக்கிறது. இந்த மயக்க நிலையிலிருந்து விடுபட நாளாகலாம். எங்களால் முடிந்ததைச் செய்கிறோம்.
பெரியவருக்கு நினைவு திரும்பிய பிறகுதான் இந்தப் புதிர் விடுபடும் போலிருக்கிறது.
அவர் அறையை நாங்கள் பார்க்கலாமா?
அவருக்கா இப்படி...?

தொடரும்



நந்தவனம்

சோமு

51. மணை(ல்) வீடு!

"திருநெல்வேலிக்குச் சென்று திவான்பகதூர் செந்தில்நாயகம் அவர்களை நான் சந்திக்கும் போது, வேணுலிங்கத்தின் கதையை அவரிடமிருந்து விவரமாகத் தெரிந்து கொள்ளலாம் என்று எண்ணினேன். நல்ல வேளை! அதற்கு அவசியம் இல்லாதபடி நீயே அந்த வரலாற்றை ஆரம்பித்து விட்டாய்!'' என்றான் சிவகாமிநாதன்.

''அப்படியானால் நீங்கள் திவான்பகதூரைச் சந்திக்கப் போவ தில்லையா ?'' என்று கவலையோடு கேட்டாள் மாலதி.

''என்ன அப்படிக் கேட்டாய்? திவான்பகதூரைச் சந்திக்காமல் இருப்பேனா நான்! கட்டாயம் சந்திக்கப் போகிறேன்! அவரைச் சந்திக்காவிட்டால் நமது இலட்சியம் நிறைவேறுவது எப்படி? அவரைச் சந்தித்து என் மனசில் உள்ளதையெல்லாம் ஒன்று விடாமல் சொல்லப் போகிறேன். ஆனால் வேணுலிங்கம் யார் என்று தெரிந்து கொள்வதற்கு அதுவரை நான் காத்திருக்க வேண்டிய அவசியமில்லாமல், நீயே அந்தப் பேச்சை ஆரம்பித்து விட்டாய் என்று மகிழ்ச்சி அடைகிறேன்!''

''அன்பே! வேணுலிங்கத்தைப் பற்றிய வரலாறு உங்களுக்குத் தெரியாது என்றா நினைக்கிறீர்கள்? இல்லை. நன்றாகத் தெரியும். குமுதவல்லியின் கதையும் அவளுடைய தமையனான பால்வண்ணனின் கதையும் உங்களுக்குத் தெரியும் என்றால், வேணுலிங்கத்தின் கதையும் தெரியும் என்றுதான் அர்த்தம்!''

மாலதி இவ்வாறு சொன்னதும் சிவகாமிநாதனின் விழிகளில் மகிழ்ச்சி மிதந்தது.



''மாலதி! குமுதவல்லியைக் கரம் பிடித்த உத்தமசீலரான சிவசங்கரன், அவளுடைய பிற்கால மாறுதல்களைக் கண்டு மனங் கலங்கி, அவளையும் இந்த வாழ்வையுமே வெறுத்து, வடக்கே சென்று விட்டார் என்பது எனக்குத் தெரியும். ஒருவேளை அவர் தான் வேணுலிங்கமாக உருமாறி நீண்ட நாளைக்குப் பிறகு மறுபடியும் தெற்கு வட்டாரங்களுக்கு வந்து, தமது மகளான செண்பகசுந்தரிக்கும் அவளை மாலையிட்ட மணவாளனான வில்வநாதனுக்கும் உதவி செய்து, தமது உயிரையும் இழந்தார் என்று நான் ஊகித்தேன். நீ சொல்வதைப் பார்த்தால் அந்த ஊகம்—''

''அந்த ஊகம் சரிதான். ஆனால் வேணுலிங்கத்துக்கும் கடலையாண்டிக்கும் எப்படி ஒரு தொடர்பு உண்டாயிற்று என்பதும் அந்தக் கடலையாண்டி யார் என்பதும் எனக்குத் தெரியாது. அது என் அன்னைக்குமே தெரியாது. ஒரு வேளை திவான்பகதூருக்குத் தெரிந்திருக்கலாம். நீங்கள் அவரைச் சந்திக்கும்போது இந்தத் தகவலை மறவாமல் கேளுங்கள்!'' என்றாள் மாலதி. இப்படிச் சொல்லி விட்டுப் பெருமூச்சு விட்டாள். ஏதோ பழைய நினைவுகளை, உள்ளத்திலே விம்மிப் புறப்பட்ட துயரங்களை, அந்தப் பெருமூச்சிலே புகைத்து விடுவது போல இருந்தது அது!



''மாலதி! இத்தனைக்குப் பிறகும் ஏன் உன் உள்ளம் இவ்வளவு துயரம் அடைகிறது? நாம் இருவரும் ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்து கொண்டு விட்டோம். இரண்டு உள்ளங்களும் ஒன்று கலந்த பிறகு, துயரத்துக்கும் அவநம்பிக்கைக்கும் அவசியம் உண்டா? முழு நம்பிக்கையோடு நமது சித்திர இலட்சியங்களை நிறைவேற்றுவது ஒன்றுதானே இனி நமது நோக்கமாக இருக்க வேண்டும்? இதில் என்ன சந்தேகம்?''

''இல்லை. சந்தேகப் படவில்லை. ஒரு விநாடி செண்பகநாயகி கோவிலின் சித்திரங்களை நினைத்துப்

பார்த்தேன். ஒரு காலத்தில் என் பாட்டனார் அந்தச் சுவர் ஓவியங்களைப் புதுப்பிக்க வேண்டும் என்று எண்ணி, என்னென்ன மனக்கோட்டைகள் எல்லாம் கட்டினார்! கடைசியில் தாமாகக் கட்டிய கோட்டையைத் தாமே தமது கையாலேயே அழித்து விடும்படி நேர்ந்ததல்லவா? இதைப் பற்றி என் அன்னை என்னிடம் சொன்ன ஒரு நிகழ்ச்சி எனக்கு நினைவு வந்தது. அதனால் தான் பெருமூச்சு விட்டேன்!'' என்றாள் மாலதி.

''உன் அன்னையிடமே அனவரத புவனபதி அவர்கள் இதைப் பற்றிச் சொன்னார்களோ?'' என்று ஆவலோடு கேட்டான் சிவகாமிநாதன்.

மாலதி சொன்னாள்:

''அன்பே, நான் சிறு குழந்தையாக இருந்த போது ஒரு நாள் இந்தச் சென்னைக் கடற்கரையில் என்னையும் என்னுடைய அன்னையையும் அழைத்துக் கொண்டு, தனியான ஓர் இடத்திலே வந்து அமர்ந்து கொண்டார் எங்கள் பாட்டனார். நான் மணலில் விளையாடிக் கொண்டிருந்தேன். என்னுடைய பசலைக் கனவுகளில் மூழ்கி மூழ்கி எழுந்து கொண்டிருந்தேன். மணலில் ஒரு சிறிய வீடு கட்டினேன். 'பாரம்மா, வீடு!' என்று அம்மாவிடம் கூவினேன். 'வீடு நன்றாக இருக்கிறது' என்று அம்மா என்னைப் பாராட்டிக் கொண்டிருக்கும் போதே அந்த மணல் வீட்டைக் காலால் மிதித்துத் துகைத்து அழித்து விட்டேன். அதைப் பார்த்ததும் என்னுடைய பாட்டனார் ஒரு துயரச் சிரிப்புச் சிரித்தார். அப்போது அவர் சொன்ன வார்த்தைகள் இன்றைக்கும் அப்படியே என் செவியில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அவர் இந்த உலகிலிருந்து மறைந்து சில ஆண்டுகள் ஓடி விட்டன. ஆனாலும் அந்த வார்த்தைகள் மட்டும் என் செவியிலிருந்து மறையாமல் அப்படியே நின்று இப்பொழுதுங்கூட ஒலிக்கின்றன!''

''மாலதி! உன் பாட்டனார் அப்படி என்ன சொன்னார்?'' என்று மிகுந்த வியப்புடன் கேட்டான் சிவகாமிநாதன். மாலதியின் முகத்தில் துயரம் கவிந்தது. அவள் சொல்லத் தொடங்கினாள்:

''அன்பே, என் பாட்டனார் என் அம்மாவிடம் சிதைந்து போன எனது மணல் மாளிகையைச் சுட்டிக் காட்டிக் கொண்டே சொன்னார்: 'செல்வி! வாழ்வில் நாமும் இப்படித்தான் செய்கிறோம். உன்னுடைய மகள் இந்தப் பரந்த மணற்பரப்பிலே மிகவும் கஷ்டப்பட்டு, மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டு, ஆர்வம் நிறைந்த கற்பனையோடு மண் வீடு கட்டினாள். பிறகு அவளே காலால் மிதித்து அந்தவீட்டை அழித்து விட்டாள். மனித வாழ்க்கையில் நாம் அனைவரும் இதையேதான் செய்கிறோம். எத்தனையோ எண்ண மாளிகைகளைக் கட்டி எழுப்புகிறோம். நாமே அவற்றை அழித்தும் விடுகிறோம். குழந்தை மணலிலே கட்டினாள். நாம் மனத்திலே கட்டுகிறோம். இரண்டிலும் என்ன மிஞ்சுகிறது? மாளிகையைக் கட்டும் போது உண்டாகிற சந்தோஷம் உண்டே, அது தான், அது ஒன்றுதான் மிஞ்சுகிறது. ஒரு வேளை அந்த மகிழ்ச்சிதான் வாழ்க்கைக்கு ஆதாரமாக மனித வாழ்வின் புதிய புதிய முயற்சிகளுக்கு ஆற்றலை வழங்கும் ஊக்கவளர்ச்சியாக விளங்குகிறது போலும்!' என்றார் என் பாட்டனார். அந்த வார்த்தைகள் மீண்டும் என் செவியில் ஒலிக்கின்றன!''

சிவகாமிநாதன் மௌனமாக இருந்தான். அனவரத புவனபதியின் அந்த உருக்கமான வார்த்தைகளுக்குப் பின்னால் எத்தகைய துயரமும், பச்சாத்தாபமும், ஏக்கமும் இருந்தன என்பதை அவன் கண்டான்.

''மாலதி! ஜமீந்தார் அவர்களுடைய சொற்களுக்குக் காரணமாக அமைந்த துயரம் எனக்கு நன்றாகப் புரிகிறது. தாமே கட்டிய சித்திரக் கோட்டைகளைத் தாமே அழிக்கும்படி நேர்ந்து விட்டதே என்று அவர் ஆற்றொணாத வேதனை அடைந்திருக்கிறார். அந்த வேதனை உணர்ச்சி அவருடைய வாழ்வின் கடைசி நாட்களை மிகவும் வாட்டி யிருக்கிறது என்பதை நான் பரிபூரணமாக உணர்கிறேன். உண்மையில் நம்முடைய இலட்சியம் நிறைவேறுமானால், ஜமீந்தார் அனவரதபுவனபதி அவர்களின் வேதனை நீங்கும். மறைந்து சென்ற அந்த ஆத்மா சாந்தி அடையும். எந்தத் தவறுகள் இத்தனை விபரீதங்களுக்குக் காரணமாக அமைந்தனவோ, அந்தத் தவறுகள் வாழ்வில் இனியும் நேர்ந்து விடாத வண்ணம் நாம் கவனமாக இருக்க வேண்டும். இந்த உலகில் தவறுகளே செய்யாத மனிதர்கள் இல்லை. ஆனால் ஒரு முறை ஒருவர் செய்த தவறு பிற்காலத்தில் அவருக்கும் மற்றவர்களுக்கும் ஒரு படிப்பினையாக நின்று வாழ்வை இயக்க வேண்டும்! அப்படியில்லாமல், தவறுகள்

தாங்கள் சொத்து நிர்வாகப் பொறுப்புள்ளவரா?

தாங்கள் ஓர் நல்ல குடும்பத் தலைவியாகவும் தாயாராகவும் இருக்கலாம். ஆனால் பண முதலீடுகள், உயில்கள், நிலபுலன்கள் நிர்வாகம் இம்மாதிரி பொறுப்புகளையும் வகிக்க வேண்டிவரின் அவைகளை கனரா பாங்கின் சிறந்த மேற்பார்வைக்கு விட்டுவிடுவதே நலம்.



கனரா பாங்கை உங்கள் சொத்து நிர்வாகஸ்தராகவும், டிரஸ்டியாகவும் நியமித்துக் கொள்ளுங்கள்.

முழு விவரங்களுக்கு உங்கள் அருகாமையிலுள்ள எங்கள் கிளை மானேஜரைக் கேளுங்கள்.

கனரா பாங்க் லிமிடெட்

(ஸ்தாபிதம்: 1906)

பரிபூரண சேவை ● பரிபூரண பாதுகாப்பு



தலைமை காரியாலயக் கட்டடம்

பதிவு செய்யப்பட்ட காரியாலயம்: மங்களூர் ● நிர்வாகக் காரியாலயம்: பெங்களூர்

நமது இலட்சியங்களை அழித்து விடக் கூடாது. ஒவ்வொரு தவறும் ஒரு புதிய கல்வி நமக்கு! பள்ளிக்கூடத்தில் சில ஆசிரியர்கள் பிரம்பால் அடித்துப் பாடம் சொல்லிக் கொடுப்பது போல, வாழ்க்கை என்ற ஆசான் சில சமயங்களில் கடும் தண்டனைகளைக் கொடுத்து நமக்குக் கல்வி புகட்டுகிறான். இந்தத் தண்டனைகளைக் கண்டு மனம் இடிந்து விடலாமா?

கடவுள் என்ற தட்டான் மனித இதயம் என்ற தங்கத்தை நெருப்பிலே போட்டு உருக்குகிறான். உடனே கண்ணீர் என்ற தண்ணீரில் அந்தத் தங்கத்தை முக்குகிறான். பிறகு சுத்தியால் அடிக்கிறான்! இவ்வளவும் செய்வது எதற்காக? ஒரு நேர்த்தியான ஆபரணத்தை உருவாக்குவதற்காக!''

சென்னைக் கடற்கரையில் இரவின் இருள் இல்லை. வானத்தில் வேகமாக எழுந்து படர்ந்து கொண்டிருந்த நிலவின் கதிர்கள், கடல் அலைகளிலே தவழ்ந்து மணற்பரப்பிலே குதித்து விளையாடிக் கொண்டிருந்தன. மாலதி எழுந்தாள்.

''விடுதியிலே என்னைத் தேட ஆரம்பித்து விடுவார்கள். அதற்குள் நான் சென்றுவிட வேண்டும். ஏற்கனவே என்னுடைய அறையில் என்னைத் தனியாக உட்கார விடாமல் சிநேகிதிகள் வந்து பரிகாசம் செய்கிறார்கள். இப்படி அடிக்கடி நேரம் கழித்துப்போனால் பரிகாசம் வம்பளப்பாக மாறிச் சிங்கம்புத்தூரிலேயே போய்க் கேட்க ஆரம்பித்து விடும்! ரேடியோவிலே சிற்றலை, மத்திம அலை என்றெல்லாம் சொல்கிறார்களே அவற்றில் எந்த அலைக்கும் வதந்தி அலைக்கும் சமானம் ஆகாது! கம்பியில்லாத் தந்தியாகிய வதந்திக்கு நிகராக எந்த ரேடியோ அலையும் அத்தனை ஆற்றலோடு ஒலிபரப்ப முடியாது! யாரும் இந்த வம்பளப்பின் ஒலிபரப்பை 'ஜாம்' செய்யவும் முடியாது'' என்றாள் மாலதி.

சிரித்துக் கொண்டே சிவகாமிநாதன் எழுந்தான்.

''மாலதி! திவான்பகதூர் செந்தில்நாயகம் அவர்கள் என்னைத் தனியாகச் சந்தித்துக் கல்கத்தாவிலே இத்தனை கதைகளைச் சொன்னவர், உன்னைப் பற்றி மட்டும் ஒன்றுமே சொல்லாமல் மௌனமாக இருந்தாரே என்பதை நினைக்க நினைக்க —

''என்னைப் பற்றியும்தான் சொல்லியிருக்கிறாரே! வெறும் வசனமாகச் சொல்லாமல் கவிதையாக, ஒரு இறளாக அல்லவா சொல்லியிருக்கிறார்? இதற்கு மேல் அவர் வேறு என்ன சொல்ல வேண்டும்?''

ஒரு சொல்!

இலக்கியத்துக்கு நோபல் பரிசு பெற்ற ஆசிரியர்களுள் ஒருவர் ருட்யார்டு கிப்ளிங். அவர் எழுதும் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒரு ஷில்லிங் சன்மானம் பெறுகிறார் என்ற புரளி இங்கிலாந்து இலக்கிய வட்டாரங்களிலும், மாணவரிடையேயும் பரவி விட்டது. இதைப் பரீட்சை செய்து பார்க்க வேண்டும் என்று சில ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலை மாணவர்கள் தீர்மானித்துக் கிப்ளிங்குக்கு ஒரு ஷில்லிங் அனுப்பிப் பின்வரும் கடிதம் எழுதினார்கள். ''தயவுசெய்து ஒரு ஷில்லிங் பெறுமானமுள்ள தங்கள் அரிய வார்த்தைகளில் ஒன்றை அனுப்புங்கள்'' என்று எழுதினர்.



சற்றும் எதிர்பாராத விதமாகக் கிப்ளிங்கினிடமிருந்து அந்த ஒரு வார்த்தை பதில் வந்தது.

அது என்ன தெரியுமா? 'நன்றி!'

இவ்வாறு சொல்லி விட்டுச் சிரித்துக் கொண்டே சிவகாமிநாதனைப் பார்த்தாள் மாலதி. கடல் அலைகள் நிலவின் சுந்தரமான ஒளியை அணைத்து விளையாடிக் கொண்டே கரையிலே குதித்தன. நீண்ட தொலைவிலே நின்று கொண்டிருந்த கலங்கரை விளக்கம் பளிச்சுப் பளிச்சென்று ஒளிக் கற்றையை வீசித் தெளித்துக் கொண்டே சுற்றியது.

''மாலதி! உன்னுடைய விடுமுறை இன்னும் இரண்டு வாரங்களில் தொடங்குகிறது என்றாயல்லவா? அந்த விடுமுறையை அனுசரித்து நானும் திருநெல்வேலிக்கு வந்து சேருகிறேன்!'' என்றான் சிவகாமிநாதன்.

மணலில் நடந்து கொண்டே பேசினார்கள் மாலதியும் சிவகாமிநாதனும்.

''வாருங்கள். கட்டாயம் வாருங்கள். இரண்டு மாதம் சிங்கம்புத்தூரிலே இருக்கப் போகிறேன். நீங்கள் திருநெல்வேலிக்கு வந்து திவான்பகதூர் அவர்களைப் பார்த்துப் பேசிய பிறகு எனக்குச் சொல்லுங்கள், நாம் எங்கே எப்போது சந்திக்க வேண்டும் என்று! ஏனென்றால் அடையாற்றின் கரையிலே சந்திப்பது போல் இல்லை, தாமிரவருணியின் கரையிலே சந்திப்பது! இங்கே

இது போல நண்பர்கள் சந்திப்பதும் பேசிக் கொண்டிருப்பதும் சகஜம். ஆனால் அங்கே அப்படியில்லை. ஒரு வாலிபனும் ஒரு பெண்ணும் தனியாக இருந்து பேசிக் கொண்டிருந்தால், அந்த ஊர் மணல்கூட அதை விமரிசனம் செய்ய ஆரம்பித்து விடும்! நிஜத்தைத்தான் சொல்லும். பொய் பேசாது அந்த மணல்! ஆனாலும் நிஜத்தைச் சொல்வதிலும் பலவிதம் இருக்கிறது அல்லவா? எந்த நிஜத்தை யாரிடம் எப்போது சொல்ல வேண்டும் என்று ஒன்று இருக்கிறதல்லவா?''

இவ்வாறு சொன்னாள் மாலதி. சிவகாமிநாதன் பளிச்சென்று கேட்டான்:

''மாலதி! அப்படியானால் இங்கே உன்னுடைய விடுதியில் நம்மைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டார்கள் என்று சொல்லுகிறாய்?''

''பேசாமல் என்ன? பேசத்தான் செய்கிறார்கள். அன்றொரு நாள் நான் என் அறையில் தனியாக இருந்து ஜன்னல் வழியாக வெளியே பார்த்தவாறு ஏதோ யோசித்துக் கொண்டிருந்தேன். என்னோடு பனைமலைக்கு வந்தார்களே மாணவிகள், அவர்கள் அறையின் உள்ளே நுழைந்து என்னைப் பரிகாசம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். 'கவர் ஓவியங்களை ஆகாயத்திலே தீட்டுகிறாயா?' என்று ஒருத்தி கேட்டாள். இன்னொருத்தி 'ஓவியங்களை வரைகிறாயா அல்லது ஓவியரையே வரைகிறாயா?' என்றாள்! எல்லாப் பெண்களுமாகச் சேர்ந்து என்னைப் பாடாகப் படுத்திவிட்டார்கள்!'' என்றாள் மாலதி. இதைக் கேட்டதும் சிவகாமிநாதனின் முகத்தில் கவலை படர்வதைக் கண்ணுற்று மேலும் தொடர்ந்தாள் அவள்:

''என்னுடைய சிநேகிதிகள் என்னைக் கோட்டாப் பண்ணுவதைப் பற்றி நீங்கள் ஏன் இத்தனை கவலைப்பட வேண்டும்? வல்லாளவேலரைப் பற்றிய வரலாற்றையெல்லாம் உங்களிடம் சொல்லித் திவான்பகதூர் அளவுக்கு மீறி உங்களைப் பயப்படுத்தி விட்டார்கள் என்று தோன்றுகிறது!''

''இல்லை, மாலதி! வருந்தி என்றதும் ஏதேதோ பழைய நினைவுகள் வந்தன. அவ்வளவுதான்! திவான்பகதூர் என்னைக் கல்கத்தாவிலே சந்தித்த பிறகு பயம் ஏது? பயத்தைத் தெளிய வைக்கிற சந்திப்பு அல்லவா அது! அவரைக் கட்டாயம் திருநெல்வேலியில் சந்திக்கும்படி எத்தனை உறுதியோடு சொன்னார் அவர்! அந்த உறுதியை நினைத்துப் பார்க்கும் போது அவருடைய எண்ணம் இப்போது நன்றாகப் புரிகிறது எனக்கு. வல்லாளவேலரோ வேறு மனிதர்களோ நம்முடைய உறவுக்கு இடையூறு செய்த போதிலும், திவான்பகதூர் தமது திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏதோ ஒரு வழி வகுத்து வைத்திருக்கிறார் என்றுதான் நான் நினைக்கிறேன். அதில் சந்தேகமே இல்லை. போதும் போதாததற்கு, சித்திரானந்தருடைய ஒத்துழைப்பும் இருக்கிறது —''

''அது மட்டுமில்லை. சந்தர்ப்பம் வரும் போது இவர்கள் இருவரும் உங்களுடைய அன்னையைச் சந்திக்கப் போவதாகவும் சொல்லியிருக்கிறார் அல்லவா திவான்பகதூர்! அதை மறந்து விட்டீர்களே!'' என்று நினைவுபடுத்தினாள் மாலதி.

வெகுதூரம் நடந்து விட்டார்கள் இருவரும்.

''நீ சிங்கம்புத்தூருக்குச் சென்றதும் ஒரு வாரத்துக்கெல்லாம் நான் திருநெல்வேலிக்கு வந்து வக்கீலைச் சந்திக்கப் போகிறேன். இன்னும் இரண்டு வாரங்களில் அங்கே வரப் போவதாக வக்கீலுக்கு நானே ஒரு கடிதம் எழுதி விடுகிறேன்!'' என்றான் சிவகாமிநாதன்.

(தொடரும்)


Brooke Bond
Café
BRAND
French coffee
NETT WEIGHT WHEN PACKED 100 gms.
BROOKE BOND INDIA PRIVATE LIMITED
COIMBATORE
CODE NO. C.L
*சிகரியுடன் ப்ளெண்ட் செய்யப்பட்டது



ஒன்று இரண்டு
மூன்று இதோ தயார்!
ஆம், செய்ய அத்தனை
எளிதானது.
இலேசான, சுவைமிக்க

ரெக்ஸ்ஜெல்லி

ரெக்ஸ் ஜெல்லியிலுள்ள பழச் சுவையும், வாசனையும் உங்கள் குடும்பத்திலுள்ளோர் அனைவர்க்குமே பிரியமானது. அவர்களுக்காக ரெக்ஸ் ஜெல்லி செய்ய நீங்கள் விரும்புவது சகஜமே ... காரணம், அது சத்துச் செறிந்தது. வளரும் குழந்தைகளுக்குச் சிறந்தது. சின்னஞ்சிறு சிசுக்களும், வியாதியிலிருந்து தேறிவருபவர்களுங்கூட ஜீரணித்துக் கொள்ளக்கூடியது.

கீழ்க்காணும் 6 வித நேர்த்தியான சுவைகளில் ஒன்றைக்கொண்டு ரெக்ஸ் ஜெல்லி தயாரிக்கலாம்: ராஸ்ப்பெர்ரி, ஸ்ட்ரா பெர்ரி, பைனாப்பிள், ஆரஞ்சு, லெமன், செர்ரி.

நீங்கள் பின்பற்ற மூன்று வழி எளிய தயாரிப்பு முறை:

1 ரெக்ஸ் ஜெல்லி படிகமணிகளை வெந்நீரில் கரைக்கவும்.
2 பிறகு, போதுமான அளவு குளிர்ந்த நீரைத்தை அத்துடன் சேர்த்து, ஒரு பைண்ட் (20 அவுன்ஸ்) அளவு கலவையாகச் செய்யவும்.
3 அதை அச்சில் ஊற்றி பனிக்கட்டி மேல் ஜெல்லியை உறைய வையுங்கள்.

அடிக்கடி பரிமாறக்கூடிய அருமையான பொருள் ரெக்ஸ் ஜெல்லி.

கார்ன் பிராடக்ட்ஸ் கோ.(இந்தியா) பிரைவேட் லிட்.


CPY-12-TAM

பீஜப்பூர் கோல்தம்பஸ்

தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான்

சமீபத்தில் ஓர் ஊரில் உள்ள கோயில் வாயிலில் ஒரு பெரிய கோபுரம் கட்டியிருந்தனர். (ஆம்! பேரைச் சொன்னாலும் ஊரைச் சொல்லக் கூடாதல்லவா?) அந்தக் கோபுரத் திறப்பு விழாவுக்கு ஒரு மந்திரியையும் அழைத்திருந்தனர். என்னையும் அந்த விழாவுக்குத் தலைமை தாங்கும்படி கேட்டிருந்தனர். விழா ஆரம்பத்தில் உரை நிகழ்த்திய அமைச்சர் சொன்னார்: 'நமது கோயில்களில் எல்லாம் மேளமும் தாளமும், கும்பலும் கூச்சலும் நிறைந்திருக்கின்றன. ஆதலால் அங்கு சென்றால் மன அமைதி கிடைப்பதில்லை. ஆனால் முஸ்லிம்களின் மசூதிகளுக்கோ, கிறிஸ்தவர்களது சர்ச்சுக்கோ சென்றால் எல்லாம் அமைதியாக நடக்கின்றன. அதனால் மனத்துக்குமே ஒரு சாந்தி கிடைக்கிறது. ஏன் நமது கோயில்

இப்ராஹிம் ரூசா



களிலும் அந்த அமைதியை உருவாக்கக் கூடாது?' என்பது அமைச்சரது கேள்வி. இதைக் கேட்ட கூடியிருந்த ஆஸ்திகப் பெருமக்கள் மனம் வருந்தினர். அவர்களது வருத்தத்தைப் போக்க வேண்டியது தலைவனான எனது கடமையாக இருந்தது. நான் தலைமை உரையில் சொன்னேன்: 'நமது கோயில்களில் பூசனைக் கிரமங்கள், ஆசார நியமங்களெல்லாம் உண்டு. அவைகளையெல்லாம் நடத்த இன்னிசையும், தோத்திரங்களும் உதவுகின்றன. அதனால்தானே, நம் நாட்டுக் கோயில்களையும் அங்கு நடக்கும் ஆசார நியமங்களையும் நன்கறிந்த மணிவாசகப் பெருமான், இறைவனைத் துயிலெழுப்பும் பாணியில் திருப்பள்ளி எழுச்சி பாடுகிறார்? அதில் அவர்,

இன்னிசை வீணையர் யாழினர்
ஒருபால், இருக்கொடு தோத்திரம்
இயம்பினர் ஒருபால்,
துன்னிய பிணைமலர்க் கையினர்
ஒருபால், தொழுகையர் அழுகையர்
துவள்கையர் ஒருபால்,
சென்னியில் அஞ்சலி கூப்பினர்
ஒருபால், திருப்பெருந்துறை உறை
சிவ பெருமானே!
என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள்
புரியும் எம்பெருமான் பள்ளி
எழுந்தருளாயே.

என்கிறார். நமது கோயிலில் நாம் எப்படி வணங்க வேண்டும் என்பதையும் அவர் எளிதாகச் சொல்லி விடுகிறார். இதைக் குறை கூறுவதோ அல்லது ஏளனம் செய்வதோ சரியல்ல. அமைச்சரவர்கள் செய்த சிறு தவறு என்ன என்றால் நமது கோயில்களையும் மசூதிகளையும் சர்ச்சுகளையும் ஒரே நிலையில் வைத்து நோக்கியதுதான். மசூதிகளும் சர்ச்சுகளும் வெறும் பிரார்த்தனைக் கூடங்களாகத் தான் அமைகின்றன. அங்கு மூர்த்திகள் இல்லை, பூசனைக் கிரமங்கள் இல்லை. ஆதலால் வழிபாட்டுமுறை வேறுபட்டிருக்கிறது' இரண்டையும் இணைத்துப் பேசியிருத்தல் கூடாதுதான்'' என்று பணிவாகவே தெரிவித்துக் கொண்டேன். உண்மையில் முஸ்லிம்களின் மசூதிகள் எல்லாம் நல்ல பிரார்த்தனைக்

கோல்கும்பஸ்



கூடங்கள். நமது வடநாட்டு யாத்திரையில் நாம் எத்தனை எத்தனை கோயில்களைப் பார்க்கிறோமோ, அத்தனை அத்தனை மசூதிகளையுமே பார்க்கப் போகிறோம்.

பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்து பதினேழாம் நூற்றாண்டு வரை முஸ்லிம்களின் ஆட்சி இந்தியாவில் நிலைத்திருக்கிறது. அவர்களது கலாசாரத்தை சார்சானிக் என்று கலை விமர்சகர்கள் கூறுகிறார்கள். கட்டடக் கலையில், எகிப்தியக் கலை, கிரேக்கர் கலை, ரோமர் கலை, கோதிக் கலை என்பது போல் சார்சானிக் கலை என்றும் ஒரு தனித்துவம் இருந்திருக்கிறது. பின்னர் இந்த சார்சானிக் கட்டடக் கலை இந்தியக் கட்டடக் கலையோடு இணைந்து ஸ்தூபிகளாகவும், மினாரட்டுகளாகவும் உருப்

பெற்று இந்திய சார்சானிக் கலைஎன்றே பெயர் பெற்றிருக்கிறது. அதனால்தான் பிரபல கலை விமர்சகரான பெர்சி பிரௌன் என்பவரும் இந்தியக் கட்டிடக் கலையைப் பற்றி எவ்வளவு விரிவாக எழுதினாரோ, அப்படியே இஸ்லாமியக் கட்டிடக் கலையைப் பற்றியும் விரிவாகவே எழுதியிருக்கிறார். அத்தகைய இஸ்லாமியக் கட்டிடக் கலையின் விளக்கம் ஒன்றைக்காண நாம் நர்மதைக்கு வடக்கேதான் போக வேண்டும் என்றில்லை. நர்மதைக்குத் தெற்கேயும், இன்றைய மைசூர் ராஜ்யத்தில் உள்ள பீஜப்பூரிலுமே பார்க்கலாம். முன்னமேயே சீரங்கப்பட்டினத்தில் திப்பு சுல்தானின் வசந்த மாளிகையாகிய தரியாதௌலத்தைப் பார்த்திருக்கிறோம்; அதன் அழகைக் கண்டு வியந்திருக்கிறோம். இப்போது பீஜப்பூர் சென்று அங்குள்ள முஸ்லிம் கட்டிடக் கலையின் சிறப்பைக் கண்டு வியந்து நிற்கப் போகிறோம். ஆம்! இன்று அந்தப் பீஜப்பூர் என்னும் விஜயபுரிக்குச் செல்கிறோம்.

பாதாமியிலிருந்து பாகல்கோட் சென்று அங்கிருந்து ஷோலாப்பூர் செல்லும் வழியில் பீஜப்பூர் இருக்கிறது. சென்னையிலிருந்து பம்பாய் செல்லும் ரயிலில் ஏறி ஹோட்கி ஸ்டேஷனில் இறங்கி, அங்கிருந்து கடக் செல்லும் ரயிலில் ஏறிப் பீஜப்பூர் ஸ்டேஷனில் இறங்கலாம். இந்தப் பீஜப்பூர் ஹோட்கிக்கு 56 மைல் தெற்கிலும் கடக்குக்கு 134 மைல்களுக்கு வடக்கிலும் இருக்கிறது. ஆதிகாலத்தில் இந்த ஊரை விஜயபுரி என்றே அழைத்திருக்கின்றனர். இதிலிருந்தே இந்த ஊர் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஊர் என்பதை நாம் அறிதல் கூடும். விஜயபுரிதான் பின்னர் பீஜப்பூர் என்று திரிந்திருக்கிறது.

கி. பி. பதினோராம் நூற்றாண்டில் இந்தப் பிரதேசத்தைச் சாளுக்கிய மன்னர்கள் ஆண்டு வந்திருக்கிறார்கள். அப்போது இந்த விஜயபுரி பிரசித்தி பெற்றிருந்திருக்கிறது. அதன் பின்னர் பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், பதின்மூன்றும் நூற்றாண்டின் முற்பகுதியிலும் தேவகிரியை ஆண்டு வந்த யாதவர்கள் கைக்கு இந்த விஜயபுரி மாறி யிருக்கிறது. அலாவுத்தீன் கில்ஜி டில்லியிலிருந்து அரசாண்டபோது, அவனது படைத்தலைவன் மாலிக்காபூர் தென்னாடு நோக்கிப் படையெடுத்திருக்கிறான். 1310-ல் நடந்த அந்தப் படையெடுப்பில் வெற்றியும் கண்டிருக்கிறான். அவன் இங்கு ஒரு ராஜ்யத்தை நிறுவியிருக்கிறான். அதுவே பாமினி ராஜ்யம் என்று சரித்திர ஏடுகளில் பிரசித்தி பெற்றிருக்கிறது. மாலிக்காபூரின் மகனான கரிமுத்தீன் இந்தப் பிரதேசத்தில் கவர்னராக இருந்து ஆண்டிருக்கிறான். அவனே பீஜப்பூரைத் தன்னுடைய தலைநகரமாக ஆக்கிக் கொண்டிருக்கிறான். பின்னர் பாமினி ராஜ்யத்திலிருந்த ராணுவத் தலைவர்களுள் பிளவுகள் ஏற்பட்டு ஒவ்வொருவரும் தாங்கள் இருந்த பகுதியைத் தங்களுடைய ராஜ்யமெனப் பிரகடனப்படுத்திக் கொண்டு ஆண்டிருக்கிறார்கள். அப்போது பீஜப்பூரில் இருந்தவன் ஆதில்ஷா. ஆதில்ஷாவைப் போலவே நைஜாம்ஷா அகமத் நகரிலும், குதுப்ஷா என்பவன் கோல்கொண்டாவிலும் தனியரசு செலுத்தி வந்திருக்கின்றனர்.

இவர்களில் ஆதில்ஷா நைஜாம்ஷாவின் மகளாகிய சாந்த்பீபியை மணந்து, பரான்கோட் என்ற இடத்தையும் சீதனமாகப் பெற்றிருக்கிறான். இதன் பின் கிட்டத்தட்ட இருநூறு வருஷங்கள் ஆதில்ஷாவின் வம்சத்தினர் பீஜப்பூரிலிருந்து அரசாண்டிருக்கின்றனர். பின்னர் மொகலாய சக்கரவர்த்தியான ஔரங்கசீப் பீஜப்பூர் சுல்தானை சிக்கந்தரை வென்று பீஜப்பூரைத் தன் ராஜ்யத்துக்குள் கொண்டு வந்திருக்கிறான். இது நடந்தது 1680-ல். இப்படி மொகலாய சாம்ராஜ்யத்தின் கீழிருந்த பீஜப்பூரைத்தான் 1724-ல் ஹைதராபாத் நைஜாம் கைப்பற்றியிருக்கிறான். பிறகு அது மகாராஷ்டிரர் கைக்கு மாறியிருக்கிறது; 1818-ல் இந்தப் பீஜப்பூர் வெள்ளைக்காரர் ஆளுகைக்குள் வந்திருக்கிறது; பம்பாய் மாகாணத்தில் ஒரு ஜில்லாவிலிருந்த பீஜப்பூர், மொழிவாரி ராஜ்யங்கள் அமைத்த போது மைசூர் ராஜ்யத்தோடு இணைந்திருக்கிறது.

ஆதில்ஷா வம்சத்தினர் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஆட்சியின் ஞாபகார்த்தமாக ஒவ்வொரு பெரிய மசூதியைக் கட்டியிருக்கின்றனர்! முந்திய சுல்தான் கட்டியதை விடத் தான் கட்டுவது சிறப்பாக இருக்க வேண்டும் என்று போட்டி போட்டுக் கொண்டு ஒவ்வொருவரும் கட்டியிருப்பதால் ஒன்றைவிட ஒன்று சிறந்ததாக இருக்கிறது. ஆனால் ஒன்று. எல்லா மசூதிகளையுமே ஒரே இடத்தில் கட்டியிருக்கிறார்கள். இந்த மசூதிகளையெல்லாம் சுற்றி ஒரு பெரிய கோட்டையையும் கட்டியிருக்கிறார்கள். இந்தக் கோட்டைச் சுவரின் கிழமேல் நீளம் 19000 அடி. தென்வடல் அகலம் 1600 அடி. கோட்டைச் சுவரின் நான்கு பக்கங்களிலும் நான்கு வாயில்கள் அமைத்திருக்கிறார்கள்; தென்பக்கத்து வாயில்தான் பிரதான வாயில்; இதனையே பட்டேகேட் என்கின்றனர்; ஔரங்கசீப் இந்த வாயில் வழியாகத்தான் கோட்டைக்குள் புகுந்திருக்கிறான். நாமும் இன்று காரில் இந்த வாசல் வழியாக உள்ளே நுழையலாம்.

கோட்டைக்குள் இருக்கும் மசூதிகளில் முக்கியமானது கோல்கும்பஸ் என்பதுதான். இது கட்டிடக் கலையில் ஓர் அரிய சாதனை; பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பீஜப்பூரிலிருந்து ஆண்ட ஆதில்ஷா அதனைக் கட்டியிருக்கிறான். இது ஒரு சதுரமான கட்டிடம். 18000 சதுர அடியில் அது கட்டப்பட்டிருக்கிறது. நான்கு மூலைகளிலும் எட்டுப் பட்டையுடன் கூடிய ஒரு மாடத்தூபி இருக்கிறது. இதிலெல்லாம் மேலே ஏறிப் போகப் படிக்கட்டுகள் உண்டு. இக் கட்டிடத்தின் அழகு அதிசயமெல்லாம் அக் கட்டிடத்தின் மேல் 125 அடி குறுக்களவு உள்ள ஒரு வட்டமான 'டோம்'தான். இந்த 'டோம்' மாத்திரம் 30 அடி உயரம். கட்டிடத்தின் மொத்த உயரம் 200 அடி. இந்த 'டோமே' உலகத்திலுள்ள 'டோம்'களிலெல்லாம் பெரியது என்கிறார்கள். இதற்கு அடுத்ததாக

ஜலதோஷம் மற்றும் தொண்டைப்புண்ணிலிருந்து பூரண நிவாரணம் பெறுங்கள்

தொண்டைப்புண்ணோ அல்லது திடீரெனத் தலைக்கேறி தொந்திரவு தரும் ஜலதோஷமோ—'ஆஸ்ப்ரோ'விலும் துரித நிவாரணம் பெறுவதை ஊர்ஜிதம் செய்து கொள்ளுங்கள். உங்களுக்குத் தொண்டைப்புண் இருந்தால், இளஞ்சூடான நீரில் 'ஆஸ்ப்ரோ'வைக் கரைத்து அதனால் கொப்பளியுங்கள். உலகம் முழுவதிலும் லக்ஷக்கணக்கானவர்களுக்கு குடும்ப மருந்தான 'ஆஸ்ப்ரோ' உங்கள் உடலின் நோவுறும் இடங்களில் நேரிடையாக வேலை செய்து நிச்சயமான நிவாரணத்தை அளிக்கிறது. குடும்பம் முழுவதற்கும் உபயோகிக்க 'ஆஸ்ப்ரோ' கைவசம் வைத்திருங்கள்.


'ஆஸ்ப்ரோ'

குடும்பம் முழுவதற்கும் ஏற்றது



இளஞ்சிவப்பும் ஊதாக்கீறும் கொண்ட ஸீலிடப்பட்ட பட்டையைக் கேட்டு வாங்குங்கள்

'ஆஸ்ப்ரோ' வேலை செய்யும் விதம் :



பொடியாகப் பிரிகிறது

பரவுகிறது

நிவாரணமளிக்கிறது

'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்

மீண்டும் நிச்சயமாக சுகம் பெறுங்கள்

AG. 130.TAM.

ஒரு நிக்கோலஸ்  தயாரிப்பு

நிற்பதுதான் ரோமாபுரியில் உள்ள பாந்தியான் மண்டபத்து 'டோம்' என்றும் கணக்கிட்டிருக்கிறார்கள்.

இந்த 'டோமி'ல் இன்னும் ஓர் அதிசயம். 'டோமி'ன் அடிப்பாகத்தில் 'டோமை'ச் சுற்றி வரப் பாதை அமைத்திருக்கிறார்கள். அந்தப் பாதையில் ஒரு பக்கத்தில் நின்று கொண்டு மெதுவாய்ப் பேசினாலும் 125 அடிக்கு அப்பாலுள்ள எதிர்ப்பக்கத்தில் தெளிவாகக் கேட்கிறது. இன்னும் ஓர் இடத்திலிருந்து கத்தினால் எட்டு இடங்களில் அதன் எதிரொலி கேட்கிறது. இதனையே இரகசியம் பேசும் சுற்றுச்சாலை (Whispering Gallery) என்கின்றனர். இந்தக் கோல்கும்பஸ் கட்டிடத்தின் மத்தியில் ஒரு பீடம். அந்தப் பீடத்தின் கீழே பூமிக்குள்ளே பல நிலவறைகள். இந்தக் கோல்கும்பஸ் மண்டபத்துக்கு எதிரேயுள்ள கட்டிடத்தை ஒரு கலைக்காட்சியாக இன்று வைத்திருக்கிறார்கள். அங்கு பழைய காலத்திய நாணயங்கள், கத்திகள், கேடயங்கள் முதலிய போர்க்கருவிகளெல்லாம் வைத்திருக்கிறார்கள். இன்னும் எத்தனை எத்தனையோ பழங் காலத்துப் பொருள்களெல்லாம் இருக்கின்றன. அவகாசம் உடையவர்களெல்லாம் நிதானமாக இருந்து இவைகளைப் பார்த்து ஆராய்ச்சி செய்யலாம்.

கோல்கும்பஸ் மண்டபத்துக்கு அடுத்தபடியான பெரிய கட்டிடம் ஜும்மா மசூதி. இதைக் கட்டியவன் முதலாம் அலி என்பவன். விஜயநகர மன்னனான ராமராஜ் என்பவனை முறியடித்து வெற்றி கண்டதின் ஞாபகார்த்தமாகக் கட்டினான் என்பர். இதன் தரை நன்றாகப் பூசப்பட்டுப் பளபளப்பாக இருக்கும். குறுக்கும் நெடுக்கும் கோடுகள் போட்டு, பிரார்த்தனைக்கு வரும் ஒவ்வொருவருக்கும் இடம் வகுத்திருக்கிறது. ஒரே தடவையில் இரண்டாயிரம் பேர்கள் இருந்து பிரார்த்தனை செய்யக்கூடும் என்றால் எவ்வளவு விசாலமானதாக இருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

இன்னும் இங்கு காண வேண்டியவை கான் மஹால், சாத் மன்சில் முதலியன. ஆதில்ஷா வம்சத்தினர் இருந்து தர்பார் நடத்திய இடம் கான் மஹால். இந்தத் தர்பார் மண்டபத்தில்தான் சிக்கந்தர் மொகலாய சக்கரவர்த்தி ஔரங்கசீப்பினிடம் சரணாகதி அடைந்திருக்கிறான். சாத்மன்சில் என்பது ஏழு மாடிக் கட்டிடம். ஏழு நிலை மாடம் என்றெல்லாம் சரித்திரங்களில் கேட்கிறோமே அந்த ஏழுநிலை மாடம் இதுதான். இந்த ஏழு நிலை மாடத்தில் மட்டும் ஏறி நின்று பார்த்தால் பீஜப்பூர் முழுவதையுமே பார்த்து விடலாம். இன்னும் இங்கே இரண்டு பழைய பீரங்கிகள் உள்ளன. ஒன்று 22 அடி நீளம். மற்றொன்று 14 அடி நீளம்.

இந்த நகரை விட்டுக் கிளம்பு முன் நாம் பார்க்க வேண்டிய கட்டிடம் இப்ராஹிம் ரூசா என்பது. இது ஊருக்கு மேல் கோடியில் இருக்கிறது. அங்கு இரண்டு கட்டிடங்கள் உண்டு. ஒன்று மசூதி. மற்றொன்று சமாதி. இந்தச் சமாதிக் கட்டிடத்தில் தான் முதலாம் இப்ராஹிம், அவனது மனைவி, மக்கள் எல்லாம் சமாதியாயிருக்கின்றனர். இங்கு சுவர்களிலெல்லாம் குரானிலிருந்து பல வாக்கியங்கள் எழுதியிருக்கிறார்கள். இதனையே 'தக்ஷிணத்துத் தாஜ்மஹால்' என்று அழைக்கின்றனர்; அப்படியே தாஜ்மஹாலைப் போலவே கட்டப்பட்டிருப்பதாகத் தோன்றும். இந்தச் சமாதிக்கும் மசூதிக்கும் இடையே ஒரு குளம் வெட்டியிருக்கிறார்கள்.

பீஜப்பூர் ஜில்லாவிலே நான்கு நதிகள் பாய்கின்றன. கிருஷ்ணா, பீமா, கடப்பிரபா, மலப்பிரபா என்பவை அவை. இப்படி நீர்வளம் இருந்தாலும் நிலவளம் அதிகம் உடைய பூமி அல்ல இது. இங்குள்ள மண் நல்ல கறுத்த கரிசல் மண்தான். ஆதலால் பருத்தியே இங்கு விளையும் பொருள்களில் முக்கியமானது; பீஜப்பூர் பருத்தி மார்க்கெட்டுக்கு ஒரு சிறந்த இடம் என்கின்றனர்.

பீஜப்பூரிலிருந்து நான்கு மைல் தூரத்தில் 'தராவி' என்று ஒரு கிராமம் இருக்கிறது; இங்கேதான் குமார வால்மீகி அவதரித்திருக்கிறார். அவரே கன்னடத்தில் ராமாயணம் எழுதினவர். இக்கிராமத்தில் அழகிய நரசிம்மர் கோயிலும் இருக்கிறது.

இந்திய நாட்டின் ஏழு அதிசயங்கள் என்று கணக்கிடுபவர்கள் பீஜப்பூர் கோல்கும்பஸையும் ஒன்றாகக் கணக்கிட்டிருக்கிறார்கள் என்றால் அந்தக் கட்டிடத்தை நாம் காண வேண்டாமா? அதற்காகவே இவ்வூருக்கும் நாம் விஜயம் செய்கிறோம்.

வேண்டாத மாப்பிள்ளை...

டீ. எஸ். மணி



கும்பகோணம் டபீர் தெருவில் ஒரு பெரிய வீடு. அந்த வீட்டின் வாசலில் மோட்டார் சைக்கிள் நின்று கொண்டிருந்தது.

மூர்த்தி விடுவிடென்று குளித்து விட்டுச் சமையலறையுள் நுழைந்தான்.

"அம்மா! எனக்குச் சீக்கிரம் சாப்பாடு போடு. நான் வெளியில் போகணும்!" என்று அவசரப் படுத்தினான் மூர்த்தி.

"ஆமாம்! நீ பெரிய வேலை செய்து கிழிக்கிறாய்? அப்படி என்ன தலை போகிற அவசரம்?" என்று கேட்டாள் அவன் தாயார்.

"எனக்கு ஒன்றும் அவசரமில்லை. அப்பா மோட்டார் சைக்கிளில் பெட்ரோல் குறைவாக இருக்காம். போட்டுக் கொண்டு வந்து வைக்க வேணுமாம்!" என்று தன் அவசரத்துக்குரிய காரணத்தை அம்பலப் படுத்தினான் மூர்த்தி.

"சரி, போட்டுத் தொலைக்கிறேன் வா!" என்று கூறி அவனுக்கு உணவு பரிமாறி அனுப்பி வைத்தாள் தாயார்.

மூர்த்தி சட்டையை மாட்டிக் கொண்டு புறப்படும்போது அவன் தகப்பனார், "டேய், தறுதலை! வண்டிக்குப் பெட்ரோல் போடறேன் பேர்வழியென்று ஊர் முழுதும் சுற்றப் போய் விடாதே" என்று எச்சரித்து அனுப்பி வைத்தார்.

மோட்டார் சைக்கிளை 'ஸ்டார்ட்' செய்து புறப்பட்டு விட்டான் மூர்த்தி. அவன் வீட்டுக்கும், ஏன், ஊருக்குமே தறுதலை என்று பெயர் வாங்கியவன். எஸ். எஸ். எல். சி. மூன்று தடவை படையெடுத்து ஒரு மாதிரியாகக் கடைசித் தடவையில் ஒப்பேறினவன்; அவன் ஜோராகக் காலையில் குளித்துச் சாப்பிடுவது, ஊர் சுற்றுவது, நண்பர்களுடன் அரட்டையடிப்பது, இட்டடிவது இதுதான்; 'ரெண்டாம் பிள்ளையாகிய இப்படி ஓர் அசாத்தியப் பிள்ளையாய்ப் பிறக்க வேண்டாம்!' என்று கும்பகோணத்தில் அங்கலாய்க்காதவர்கள் இல்லை. அதெல்லாம் அவன் காதில் போட்டுக் கொள்வதில்லை. பிரமாதமாக டிரஸ் செய்து கொண்டு நவநாகரிக யுவனாக அவன் கும்பகோணத்தில் பவனி வருவதைப் பார்த்தால் பெரிய பணக்கார வீட்டுப் பிள்ளைதான் என்று எடை போடாதவர் கிடையாது.

பெட்ரோல் பங்கில் பெட்ரோல் போட்டுக் கொண்டு வண்டியைத் தள்ளிக் கொண்டு வந்து ஸ்டார்ட் செய்தான். திடீரென்று அவன் வண்டியில் ஒரு சைக்கிள் வந்து மோதியது. அது லேடீஸ் சைக்கிள். அந்தச் சைக்கிளுக்குரிய பெண்ணைப் பார்த்ததும் அவன் முகத்தில் தோன்றிய கோபமெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. சைக்கிள் மோட்டார் சைக்கிளில் இடித்ததும், சைக்கிளில் வந்த வனஜா அப்படியே இறங்கிச் சைக்கிளை விட்டுக் குதித்து விட்டாள். சைக்கிள் மோட்டார் சைக்கிளில் உரசிக் கொண்டு சாய்ந்தது.

"என்ன அம்மா! ஜாக்கிரதையாகச் சைக்கிளில் வரக் கூடாதா? நல்ல காலம்! நான் வண்டியை ஸ்டார்ட் செய்து விட்டு ஓட்டும் தறுவாயில் வந்து இடித்தது. மோட்டார் சைக்கிள் வேகமாகப் போய்க் கொண்டிருக்கும்போது இடித்தால் உங்கள் கதி என்ன ஆவது?" என்று கேட்டான் மூர்த்தி.

"மன்னிக்கணும்! பின்னால் கார் சத்தம் கேட்டுத் திரும்பியவள் மோட்டார் சைக்கிள் முன்னால் இருப்பது அறியாமல் சைக்கிளைத் திருப்பி விட்டேன்" என்றாள் வனஜா நாணம் பொங்க.

மூர்த்தி மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு, சைக்கிளின் முன் சக்கரம் வளைந்திருப்பதைச் சரிப்படுத்திக் கொடுத்தான்; வனஜாவின் முகம் நன்றிப் பெருக்கினால் விகசித்தது.

"நீங்கள் டபீர் தெருவில்தானே இருக்கிறீர்கள்? நான் அடிக்கடி உங்களைப் பார்த்திருக்கிறேனே!" என்று கூறி இலேசாகப் புன்னகை புரிந்தாள் வனஜா.


"நீங்களும் அதே தெருவில்தான் இருக்கிறீர்கள்! தெரியும். நீங்கள் வக்கீல் வெங்கடராமனின் புதல்விதானே....?"

"ஆமாம் எனக்குக் கல்லூரிக்கு நேரமாகிறது. வரட்டுமா?" என்று கூறி விடை பெற்றாள் வனஜா.

இருவரும் அந்த இடத்தை விட்டு நகர்ந்தனர், ஒருவருக்கொருவர் தங்கள் இதயத்தைப் பறி கொடுத்து விட்டு. அதற்குப் பிறகு மூர்த்தி காலையிலும், மாலையிலும் கும்பகோணம் கல்லூரிக்கு வரத் தொடங்கினான். வனஜாவுடன் சிறிது நேரம் அளவளாவி விட்டு வீடு திரும்பினால்தான் அவனுக்கு நிம்மதி ஏற்பட்டது. அவர்கள் இருவரும் இப்படிச் சந்திப்பது அவன் நண்பர்கள், அவள் தோழிகளுக்குள் பரவிப் பிறகு ஊரறிந்த விஷயமாயிற்று. பலர் அவர்களைப் பற்றி வெளிப்படையாகவே பேசத் தொடங்கினார்கள்.

இந்தச் செய்தி வக்கீல் வேங்கடராமனின் காதில் விழுந்தபோது அவர் வனஜாவைக் கண்டித்தார். அவளது பி. ஏ. படிப்பைப் பாதியில் நிறுத்திவிடப் போவதாகவும் அவர் பயமுறுத்தினார்.

அதன் பலனாக மூர்த்தி — வனஜாவின் சந்திப்புக்கு முட்டுக்கட்டை விழுந்தது. சந்திப்புக்கு வேண்டுமானால் முட்டுக்கட்டை போடலாம். பெருக்கெடுத்தோடும் அன்புக்கு யாரால் முட்டுக்கட்டை போட்டு நிறுத்த முடியும்? ஒருவரையொருவர் பார்க்காவிட்டாலும், அவர்கள் அன்பு மட்டும் வளர்ந்து கொண்டே வந்தது.



மூன்று மாதங்கள் ஓடின. வனஜா பி. ஏ. பரீட்சை பாஸ் செய்து விட்டாள். வக்கீல் வேங்கடராமனும் எத்தனையோ இடங்களில் ஜாதகம் வாங்கித் தம் பெண்ணின் கல்யாணத்தை முடித்துவிட முயன்றார். ஆனால் பெண்ணின் தோஷ ஜாதகத்துக்குத் தகுந்தாற் போல் சேரக்கூடிய ஜாதகம்தான் கிடைக்கவில்லை.

ஒரு நாள் வனஜா தந்தையிடம் தயங்கிய படி வந்து, "அப்பா! வீட்டிலேயே அடைந்து கிடப்பது கஷ்டமாயிருக்கிறது. ஆகவே...."

"ஆகவே என்ன அம்மா?" என்று இழுத்தார் வக்கீல் வேங்கடராமன்.

"வேலைக்குப் போகலாம் என்று பார்க்கிறேன்!" என்றாள் வனஜா.

"வேலை வேண்டாம் அம்மா! வேண்டுமானால் ஒரு மாதம் உன் பெரியப்பா வீட்டில் போய் இருந்துவிட்டு வாம்மா!" என்றார் வக்கீல் வேங்கடராமன்.

"சரி!" என்று சம்மதித்தாள் வனஜா.

திருவனந்தபுரம் பாஸ்ட் பாசஞ்சர் வண்டி அன்று மூர்த்தியையும் சென்னைக்கு ஏற்றிச் செல்லும் பாக்கியம் பெற்றிருந்தது. வெறும் ஊர் சுற்றியாகத் திரிந்து கொண்டிருந்தவனுக்குச் சென்னையில் ஒரு கம்பெனியில் வேலை கிடைப்பதற்கான சிபாரிசைச் செய்திருந்தார் அவன் தந்தை. இண்டர்வியூவுக்காகத்தான் அவன் அன்று சென்னைக்குப் போய்க் கொண்டிருந்தான்.

அவனுடைய மனம் கற்பனையில் லயித்தது. வேலை கிடைத்ததும் முதற் காரியமாக வனஜாவின் கரம் பற்ற எப்படியாவது வழி செய்ய வேண்டும் என்று திட்டம் போட்டான்.

அப்புறம் சென்னையிலே நாளை. அந்த நாளையிலே அவனும் அவளும்; தினம் மாலையில் சினிமா, நாடகம், கடற்கரை; இப்படியாகக் கடல் அலைபோல அவன் கனவுகள் விரிந்து கொண்டிருந்தன. வண்டியின் ஆட்டமும், கனவுகளின் தாலாட்டும், அவனைச் சிதம்பரம் போவதற்குள்ளாக நல்ல உறக்கத்தில் ஆழ்த்தி விட்டன. மூர்த்தி கண்ணை விழித்தபோது மதுராந்தகம் ஸ்டேஷனை ரயில் தாண்டிக் கொண்டிருந்தது. டிக்கெட் பரிசோதகர் ஒவ்வொருவராகப் பரிசோதித்துப் பார்த்த வண்ணம் வந்து கொண்டிருந்தார். மூர்த்தி டிக்கட்டை எடுக்கப் பைக்குள் கையைவிட்டான். அப்பொழுதுதான் பர்ஸும் டிக்கட்டும் பறி போயிருந்த விஷயம் தெரிய வந்தது.

"ஸார்! என் பர்ஸ் பறிபோய்விட்டது!" என்று கூக்குரலிட்டான் மூர்த்தி.

"சார்! நம்மகிட்டே உங்க வேலையை வைச்சுக்கிடாதீங்க.... எத்தனை பேர்கள் இப்படி 'வித்தவுட்' டிக்கெட்டிலேயேபிரயாணம் செய்துட்டு இப்படிப் புதுசு ஆரம்பிச்சிருக்கீங்க?" என்று கேட்டார் டிக்கெட் பரிசோதகர்.

"நிஜமாகச் சொல்லுறேன்!" என்றான் மூர்த்தி பரிதாபமாக.

"என்ன செய்வீரோ, தெரியாது. இரட்டிப்பு சார்ஜ் நீங்கள் கட்டியாகணும். இல்லாட்டா உங்களை ஸ்டேஷன் மாஸ்டரிடம் ஒப்படைச்சுப் பணத்தை வாங்க வழி செய்வேன்!" என்றார் பரிசோதகர்.

"சார்! என்னை ஒத்திவாக்கம் ஸ்டேஷன் மாஸ்டரிடம் ஒப்படைச்சுடுங்க. அவர் எனக்குத் தெரிஞ்சவருதான். அவரிடம் பணம் வாங்கிக் கட்டி விடுவேன்!" என்றான் மூர்த்தி.

வனஜாவும் அவனும் நீண்ட நாட்களாகச் சந்தித்திராவிட்டாலும், அவளைப் பற்றிய சமாசாரம் அவ்வளவும் அவனுக்குத் தெரியும். அவள் தனது பெரியப்பா சுந்தரம் வீட்டில் தங்கியிருக்கிறாள் என்பதும், அவர் ஒத்திவாக்கம் ஸ்டேஷன்மாஸ்டர் என்பதும் அவனுக்குத் தெரிந்த விஷயமே. எனவேதான், அவன் அப்படிச் சொன்னான்.

டிக்கெட் பரிசோதகரும் அவன் வேண்டுகோளின்படி ஒத்திவாக்கம் ஸ்டேஷன்மாஸ்டரிடம் ஒப்படைக்கச் சம்மதித்தார். அதன்படியே அந்தக் காரியத்தை நிறைவேற்றினார். ஒத்திவாக்கம் ஸ்டேஷன்மாஸ்டரிடம் மூர்த்தியை அழைத்துச் சென்று, ஒப்படைத்தபடியே, "சார்! இவர் வித்தவுட் டிக்கெட்! இவரு டிக்கெட்டும் பணமும் தொலைச்சுட்டேன் என்கிறாரு. உங்களையும் தெரியுமாம்! பணத்தை வாங்கிக்குங்க. நான் வரேன். வண்டி புறப்பட்டுடுச்சு!" என்று கூறினார்.

"என்னைத் தெரியுமாவா? இவரைப் பார்த்ததே கிடையாதே!" என்று வியந்தார் ஒத்திவாக்கம் ஸ்டேஷன்மாஸ்டர்.

"சார்! இப்படி நிறையப் பேர் கிளம்பியிருக்காங்க. இவங்களைக் கவனிச்சுக்குங்க. வரேங்க" என்று கூறியபடியே ஓடும் வண்டியில் பாய்ந்து ஏறினார் டிக்கெட் பரிசோதகர்.

ஒத்திவாக்கம் ஸ்டேஷன்மாஸ்டரும் மூர்த்தியும் மட்டுமே விடப்பட்டனர். இருவரைத்த புறம் பாஸ்ட்பாசஞ்சர் ஸ்டேஷனை விட்டுப் போய் விட்டது.

"சார்! நிஜமா என் டிக்கெட்டும் பணமும் வண்டியில் பறி போயிடுச்சு! நீங்கதானே ஸ்டேஷன்மாஸ்டர் சுந்தரம்....?"

"சுந்தரமா? யாரிடம் கப்ஸா விடுறீங்க? உண்மை எனக்குத் தெரியாது! ஏன் இப்படி டிக்கெட் வாங்காமல் கப்ஸா அடிக்கிறீங்க? இரட்டிப்புப் பணத்தைக் கட்டிப்புட்டுப் போய்ச் சேருங்க. இல்லாட்டா நான் உங்களோடு மாரடிக்க வேணும்!" என்றார் ஸ்டேஷன்மாஸ்டர் சிம்மம்.

இதற்குள் ஸ்டேஷன் மாஸ்டர் சிம்மத்தின் 'டியூட்டி' முடிந்து அடுத்த ஸ்டேஷன்மாஸ்டர் சுந்தரம் வந்து சேர்ந்தார்.

"என்ன ஸார்! தினம் முன்னாலேயே பாயின்ட்ஸ்மேன் பரமசிவத்திடம் சொல்லிவிட்டு நகருகிறவர் இன்று என்னடா வென்றால் ரொம்ப பிஸியாய் இருக்கீங்களே! நம்ம ஸ்டேஷனிலே இம்மாதிரிக் காரியமெல்லாம் அபூர்வமாச்சே!" என்று கேலியாகக் கேட்டுக் கொண்டே நுழைந்தார்.

"என்ன பண்ணுவது சுந்தரம்! இன்னிக்கு நான் யார் முகத்தில் விழித்தேனோ? ஒத்திவாக்கம் ஸ்டேஷனில் இதுவரை வராத அக்கப்போர் இன்னைக்கு வந்திருக்கு! 'வித்தவுட்' டிக்கெட் ஆசாமி ஒருவன் வந்து நம் கழுத்தையறுக்கிறான்!" என்றார் ஸ்டேஷன்மாஸ்டர் சிம்மம்.

"இவர்தான் சுந்தரமா? ஸார் உங்களைத் தான்...." என்று இழுத்தான் மூர்த்தி.

"நீதான் கும்பகோணம் டபீர் தெரு ரெஸ்தார் சின்னசாமி பிள்ளையா?" என்று கேட்டார் சுந்தரம்.

"ஆமாம், ஸார்! நான்...."

"வனஜாவைப் பார்க்க வந்தாயாக்கும். ஊரிலிருந்துதான் கடுதாசி எழுதிப் போட்டுக் குவித்திருந்தாயே.... நேரிலும் வந்து...." என்று இழுத்தார் சுந்தரம்.

"சார்! கடுதாசா? நான் ஒன்றும் அவளுக்கு எழுதவில்லையே....?" என்று திகைத்தான் மூர்த்தி.

"கடுதாசு எழுதலையா? என்னப்பா, இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா என்கிற கணக்கிலே பேசறே.... 'வனஜாவை மணக்கா விட்டால் உயிரையே விட்டு விடுவேன்' என்றெல்லாம் எழுதியிருந்தாயே....?"

"ஸார்! இவன் செய்வான் சார்! பார்த்தால் பசுப் போல இருக்கான். இப்பவும் வித்தவுட் டிக்கெட்டிலே வந்து விட்டுப் போகலேமா, அது மாதிரித்தான்!" என்று கூறினார் சிம்மம்.

"நான் இவர் கடிதங்களை என்ன செய்தேன், தெரியுமோ? வனஜாவின் அப்பாவுக்கே அனுப்பி, இந்தப் பையனின் அப்பாவைப் பார்த்துக் கடிதங்களையும் காண்பித்துப் பையனைக் கண்டித்து வைக்கும்படி சொல்லியிருக்கிறேன்!" என்றார் ஸ்டேஷன் மாஸ்டர் சுந்தரம்.



"ஒரு பத்து ரூபாய் கடன் கொடுங்களேன்!"

"அட! கொடுத்தால் நீ திருப்பியே கொடுக்க மாட்டாயே!"

"அப்படிச் சொல்லாதீங்க! நான் முன் இருந்தவன் இல்லே. முற்றிலும் இப்ப புது ஆசாமி. தாராளமாகக் கொடுங்க!"

"அப்படியா .....புது ஆசாமிகளுக்கு நான் கடன் கொடுப்பதில்லையே!"

"நான் நிரபராதி ஸார்! என்னை மன்னிச்சுடுங்க. எனக்கொன்றும் தெரியாது ஸார்! இந்தக் கஷ்டத்திலிருந்து விடுவித்து விடுங்கள். பத்துரூபாய்ப் பணமும் கொடுங்கள். நான் ஊர் போய்ச் சேர்ந்து விடுகிறேன்........" என்றான் மூர்த்தி.

"சரியான ஆள் ஐயா! தப்பையும் செஞ்சுப்புட்டு சும்மா அடிமடியிலேயே கையை வைக்கிறானே இந்தப் பிள்ளையாண்டான்!" என்றார் ஸ்டேஷன்மாஸ்டர் சிதம்பரம்.

"ஸார்! நேத்தே பிடிச்சு உங்களுக்கு ஒரு கடிதாசு வந்து மேஜை மேலே வைச்சிருந்தது. நீங்க எடுத்துக்கிடலே. அதனாலே நானே நேரில் இங்கேயே கொண்டாந்துட்டேன்!" என்றான் பாயின்ட்ஸ்மேன் பரமசிவம்.

சுந்தரம் கடிதத்தைப் பிரித்துப் படித்தார். அவர் சகோதரர் வக்கீல் வேங்கடராமனிடமிருந்து வந்திருந்தது:

அருமை அண்ணனுக்கு,


நீ அனுப்பிய கடிதங்களும் உன் கடிதமும் வந்து சேர்ந்தன. கடிதங்களைப் பார்த்தேன். நீ கூறியபடி அதற்காகச் சிரஸ்தார் சின்னசாமியைப் போய்ப் பார்க்கவில்லை. ஏன் தெரியுமா? கடிதத்தின் நல்ல கையெழுத்தைப் பார்த்தேன். அவ்வளவும் நம் வனஜாவின் கையெழுத்துத்தான்! நீ அவனுக்குப் பரிந்து பேசவும் என்பதற்காக வனஜா அந்தக் கடிதாசுகளை எழுதி வைத்து உன் மனதை மாற்ற முயன்றிருக்கிறாள். உன் மனசு இளகவில்லை. ஆனால் அந்தக் கடிதாசுகள் என் மனத்தை இப்போது இளக்கிவிட்டன. நான் அவளுக்காக உன்னிடம் பரிந்து பேசும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. உன்னிடம் அனுப்பினால் அவள் மூர்த்தியை மறந்து விடுவாள், வேறு இடத்தில் வரன் பார்க்கலாம் என்ற என் எண்ணத்தில் மண் விழுந்து விட்டது. இப்படிக் கடிதம் எழுதியவள் பிறகு எப்படியெல்லாம் நடந்து கொள்வாளோ? அதற்கு நாம் இடம் கொடுத்து விடக் கூடாதல்லவா? கடைசியில் சிரஸ்தார் சின்னசாமியைப் பார்த்துப் 'பையனின் ஜாதகப் பொருத்தத்தைப் பற்றிச் சொன்னேன். அவரும் சம்மதித்து விட்டார். வனஜா – மூர்த்தியின் கலியாணத்தைக் கூடிய விரைவிலேயே நடத்தத் தீர்மானித்துவிட்டேன். நீயும் உன் மனைவியும் வனஜாவை அழைத்துக் கொண்டு வந்து சேருங்கள்.

—வக்கீல் வேங்கடராமன்

கடிதத்தைப் படித்து முடித்ததும் ஸ்டேஷன்மாஸ்டர் சுந்தரத்தின் முகம் மலர்ந்தது.

"மாப்பிள்ளே! நீர் மாப்பிள்ளையா வர்றதுக்கு முன்னாடியே நாக்கு இரட்டிப்புச் செலவு வைச்சுட்டீரே! பொல்லாத ஆள் ஐயா நீர்!" என்று கூறிச் சிரித்தார்.

ஸ்டேஷன்மாஸ்டர் சிதம்பரமும், மூர்த்தியும் நகைத்தார்கள். சுந்தரம் விஷயத்தை விளக்கியபோது ஸ்டேஷன்மாஸ்டர் சிதம்பரம், "மாப்பிள்ளே மூர்த்திக்கு இன்னிக்கு நம்ம வீட்டிலே விருந்து வைக்கப்போறேன்! கலியாணத்துக்கு முந்தி மாப்பிள்ளே உங்க வீட்டிலே சாப்பிடக் கூடாதல்லவா?" என்று கூறிச் சமாளித்துக் கொண்டார்.



நாட்டைக் காப்போம்

நிரம் கொண்டு வீறு கொண்டு
சீறி எங்கும் முழங்கடா
வீரம் பொங்கும் நமது நாட்டில்
போர் முரசம் முழங்கடா

பாரதத்தின் பகைவனெனப்
படை எடுத்த சீனனைப்
போரில் கண்ட துண்ட மாக்கிப்
பொடி படுத்த முழங்கடா

வஞ்சப் பேய்கள் சீன நாய்கள்
வாழ்வு நிலை இல்லையே
அஞ்சி நாமும் அறிவிழந்து
அடிமையாவ தில்லையே

நெஞ்சம் கொண்ட உறுதி விட்டு
நிலை குலைவ தில்லையே
பஞ்ச சீலம் கொன்ற சீனப்
பகைவன் வாழ்வதில்லையே

எட்டி வந்த சீனன் வீழக்
கட்டுப் பலி யாக்குவோம்
கெட்ட உள்ளம் கொண்ட சீனன்
கொட்டம் வீழ ஊக்குவோம்

அட்ட திக்கும் சீனனுக்கே
அழிவு மேவும் காலமே
கிட்டி வந்து முட்டி நின்று
ஒட்டிக் கொண்ட தாருமே

பொங்கும் வங்கக் கடலிலே
போக்கிரியைத் தள்ளுவோம்
எங்கள் நாடும் தங்க நாடு
இதனைக் காத்துக் கொள்ளுவோம்.


அங்க மெல்லாம் வீர மென்னும்
ஆண்மை பூண்டு சொல்லுவோம்.
சிங்க நாதம் செய் தெழுந்து
சீனர் படை வெல்லுவோம்.

சீனர் என்ற கொடும் அரக்கர்
செத்தொழிந்து போகவே
சனம் இந்த உலகை விட்டு
எரிந்து சாம்பலாகவே

வானம் சாட்சி, பூமி சாட்சி
சீன ராட்சி தொலையவே
மானம் காக்கப் போர் முனைக்கு
மகிழ்ச்சியோடு செல்லுவோம்.

— சக்தி பாலையா





ஒத்துப் பார்க்காதீர்கள்!

அடுத்த வீட்டுக்காரருடன் தன்னை ஒத்துப் பார்ப்பதை பலர் விரும்புவதில்லை. அதேபோல நீங்கள் மெட்ரிக் எடைகளையும் ஒத்துப் பார்க்கக்கூடாது.

மெட்ரிக் முறையின் பூரண பயனை அடைய, அதன் உண்மையான மதிப்பை தெரிந்துகொண்டு, அளவைகளுக்கு பங்கமேற்படாமல் அப்படியே உபயோகியுங்கள்.

ஒரு சேர் அல்லது ஒரு வீசைக்கு சமமான மெட்ரிக் எடையை கண்டுபிடிக்க பல மெட்ரிக் அளவுகளைப் போட்டு குழப்பிக் கொள்ளாதீர்கள்.

இதனால் நேரமும் வீணாகும். பரிவர்த்தனையும் பாதிக்கும்.

துரிதமான சேவைக்கும், நேர்மையான வர்த்தகத்திற்கும்

முழு மெட்ரிக் யூனிட்டுகளில்

பொருள்களை வாங்குங்கள்

DA 62/544

சித்திரைச் செல்வன்

எஸ்ஸார்சி

பார்வதி வாசல் வராந்தாவில் நின்றிருந்தாள். மாலைக் கதிரவன் தெருவெங்கும் தங்க ஒளியைப் பரவ விட்டிருந்தான். நடக்கத் தெரிந்த குழந்தைகள் முதல் முதிர்ந்த வயதுடையவர்கள் வரையில் பல பெண்கள் தனித்தனியேயும் மூவர் நால்வர் சேர்ந்தும், தெருவிலே போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருந்தார்கள். அவரவர் வயதுக்கேற்ப ஆடை அணிகளை அணிந்து விதம் விதமாக அலங்கரித்துக் கொண்டிருந்தனர். கையில் குங்குமச் சிமிழ், வெற்றிலை பாக்கு, நாகரிகப் பை அல்லது பிளாஸ்டிக் கூடை இப்படி ஏதாவது இருந்தன. பார்வதி வராந்தாவின் கம்பிகளைப் பற்றிய வண்ணம் தன்னை மறந்து நவராத்திரிப் பெண்களைப் பார்ப்பதில் லயித்திருந்தாள்.

காம்பவுண்டின் முன்புறத்தில் மூன்று சக்கர சைக்கிளில் அமர்ந்து தன் கைவரிசையைக் காட்டிக் கொண்டிருந்த பாலன் ஒரு முறை கேட்டின் பக்கமாகத் தன் வண்டியைச் செலுத்திக் கொண்டு போனான். வேகமாக ஓடிய சைக்கிள் நல்ல தடையின்றித் தெருவுக்கே போய் விட்டது; நிதானமாக வந்து கொண்டிருந்த பத்மாவதியின் கால் மீதும் ஏறி விட்டது. ''ஹோல்டான்!...'' என்று பத்மாவதி கலுக்கென்று சிரித்து விட்டு, ''போக்கிரிப் பயலே! வண்டியைப் பார்த்து ஓட்டடா! வேறு யார் பேரிலாவது ஏற்றி விடப் போகிறாய்!'' என்று அவன் கன்னத்தில் செல்லமாக ஒரு தட்டுத் தட்டினாள்.

பாலன் சைக்கிளை விட்டு இறங்கினான். பத்மாவதியின் சேலைத் தலைப்பைப் பற்றிக் கொண்டான். ''எங்கள் வீட்டுக்கு வா'' என்று இழுத்தான். நிஷ்களங்கமாகப் பிரகாசித்த பத்மாவதியின் முகம் நொடியில் மாறிவிட்டது. மெல்ல அவன் பிடியிலிருந்து தன் சேலைத்தலைப்பை விடுவித்துக்கொண்டு, ''போய் விட்டு அப்புறம் வருகிறேனடா, கண்ணு!'' என்றாள். அவள் குரல் கம்மலாக ஒலித்தது. நிமிர்ந்த அவள் பார்வையில் காம்பவுண்டுக்கு அப்பால் வராந்தாவில் நின்றிருந்த பார்வதி தென்பட்டாள். சட்டென்று தலையைக் குனிந்து கொண்டு நடந்தாள். நடையில் சிறு தடுமாற்றம்.

கைகளைப் பின்புறமாகக் கோத்துக் கொண்டு பத்மாவதி செல்வதையே இமைக்காமல் நோக்கினான் பாலன். அவள் சில வீடுகளுக்கப்பால் ஒரு வீட்டினுள் நுழைந்தாள். அவன் பார்வையிலும் சலனம் ஏற்பட்டது. எத்தனையோ பெண்கள் போனார்கள், வந்தார்கள். சிலர் தெருவோடு நேராகப் போனார்கள்; சிலர் சில வீடுகளில் நுழைந்தனர். 'நம் வீட்டுக்கு மட்டும் ஏன் யாருமே வரவில்லை?' — விடை கிடைக்கவில்லை.

திரும்பினான். வெடுக்கென்று சைக்கிளை ஒரு கையினால் பற்றினான். தரதரவென்று அதை இழுத்துக் காம்பவுண்டுக்குள் நுழைந்தான். வராந்தாவை அடைந்தான்.

''அம்மா!...''

பார்வதி சிந்தனையிலிருந்து விடுபட்டுத் திரும்பினாள். ''என்னடா?''

''எல்லோரும் போய்க் கொண்டே இருக்கிறார்களே!''

''போகட்டுமே!''

''நம் வீட்டுக்கு யாருமே வரவில்லையே?''

''நீயும் நானும் இருக்கிற இடத்திலே யார் வருவார்கள்?''

''எல்லாருக்கும் நம்மகிட்டே சண்டையா?''

''ஆமாம்: [illegible] போ!''

தாயின் க[illegible] முகத்தையோ, கடு சொல்லையோ பாலன் லட்சியம் செய்யவில்லை. பரபரப்புடன் உள்ளே ஓடினான். பூஜை அலமாரியில் இருந்த குங்குமச் சிமிழை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான். நிலையில் கால் இடறிக் கீழே விழுந்தான். குங்குமச் சிமிழின் மூடி அந்தரடித்து—எங்கோ ஓடியது.

''சாமி குங்குமத்தை ஏன்டா எடுத்தாய்? கீழே சிந்தும். காலில் மிதிபட்டால் பாவம் உண்டு. கொண்டு போய் வை!'' என்று பல்லைக் கடித்தபடி அதட்டினாள் பார்வதி.

''எல்லார் வீட்டுக்கும் போய்க் கூப்பிடப் போகிறேன்!''

''கொண்டு போய் வையடா உள்ளே!'' என்று இரைந்த பார்வதி அவன் கையில் இருந்த சிமிழைப் பிடுங்க அவனை அணுகினாள். அவன் வராந்தாவில் ஓடினான். அவள் பாய்ந்து அவனைப் பற்றினாள். அவன் சிமிழைப் பின்புறமாக ஒளித்துக் கொண்டான். அவள் அதைப் பிடுங்க முயலுகையில் அவன் இடக் கைப் பெருவிரலில் இருந்த குங்குமத்தை அவள் நெற்றியில் தீட்டிவிட்டான்!

'பளார்!.... பளார்!!.... பளார்!!!...'

மூன்று அறைகளும் மூன்று வராகன் பெறும். குழந்தையின் கையிலிருந்த சிமிழ் கீழே விழுந்து உருண்டது. வலி பொறுக்க முடியாமல் பெருங் குரலில் வீரிட்ட பாலன் அடித்த தாயின் கால்களையே அணைத்துக் கொண்டு அழுதான். அவளுக்கும் அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது.

''அதுதான் நெற்றியைப் பாழ் செய்ய வென்றே பிறந்து அதைச் செய்து முடித்து விட்டாயே துடைகாலி! போ போ!''

காலைக் கட்டிக் கொண்டிருந்த மகனைத் தூர விலக்கின பார்வதி சிந்தின குங்குமத்தைத் திரட்டிச் சிமிழிலே வைப்பதில் ஈடுபட்டாள். அதைச் செய்து முடித்து எழுந்து நிமிர்ந்தபோது பாலன் ஒரு கையால் முதுகைத் தடவிக்கொண்டும் மற்றொரு கையால் கண்ணைத் துடைத்துக் கொண்டும் அழுத வண்ணம் வாசலை நோக்கிப் போவதைக் கண்டாள். ''அழு அழு! நன்றாக அழு! அழப் பிறந்தாய்; அழவைக்கப் பிறந்தாய்! நீளமாக ஓலமிடு!'' என்று முணுமுணுத்தபடி குங்குமச் சிமிழைக் கொண்டு வைக்க உள்ளே சென்றாள். அதை அலமாரியில் வைத்துத் திரும்புகிறபோது, நிலைக் கண்ணாடியில் அவள் முகம் தெரிந்தது. ''ஐயோ!...'' என்று துணுக்குற்றவள் சட்டென்று சேலைத் தலைப்பால் நெற்றியைத் துடைத்துக் கொண்

டாள். கண்ணாடியின் பக்கத்தி லிருந்த கல்யாணத்தின் படத்தில் பார்வை ஓடிற்று. அடிவயிற்றிலிருந்து அழுகை குமுறி வந்தது. கண்களில் நீர் நிறைந்தது. அவள் அழுது கொண்டே படத்தைப் பார்த்தாள். படத்திலிருந்த கல்யாணத்தின் பால் வடியும் முகம் சிரித்துக் கொண்டே அவளைப் பார்த்தது.

இருள் படர்ந்தது. பார்வதி விளக்கை ஏற்றினாள். கண்ணைத் துடைத்துக் கொண்டு மீண்டும் வராந்தாப் பக்கம் வந்தாள். அங்கே தனியாகக் கிடந்த விளையாட்டுச் சைக்கிளை எடுத்து ஒரு புறமாக வைத்தாள். பாலன் எதிர் வீட்டு வராந்தாவில் நின்று அந்த வீட்டுச் சிறுவனிடம் இந்தப் பக்கம் கையைக் காட்டி விம்மலுடன் ஏதோ சொல்லிக் கொண்டிருப்பது தெரிந்தது. 'பாவம்' என்றது அவள் உள்ளம். உடனேயே ஒரு முறை சூள் கொட்டவும் செய்தாள்.



வராந்தாவின் தென்புறத்தில் தட்டி மறைப்பு. பக்கத்தில் சிறு பாதை. ரயில் நிலையத்தி லிருந்து வரும் அந்தப் பாதையில் ஓயாத ஜன நடமாட்டம். அதற்காகவே அந்த மறைப்பு. பார்வதி அங்கே கிடந்த முக்காலியில் அலுப்புடன் உட்கார்ந்தாள். கண்களை மூடியபடி சுவரில் சாய்ந்தாள்.

பார்வதி கல்யாணத்துக்கு மாலை சூட்டியபோது அவள் வயது பதினெட்டு. அவன் வயது இருபத்தாறு. பார்வதியின் தகப்பனாரான பசுபதி மனிதருள் மாணிக்கம் என்றால் அவருக்கே பொருந்தும். அவருடைய படிப்பும், அறிவும் ஆற்றலும் உத்தியோகத் துறையில் அவரை மள மளவென்று உயர்த்தி வைத்தன. மேலதிகாரிகளுக்கெல்லாம் அவரிடம் அளவற்ற அன்பும் மதிப்பும் உண்டு. கபடமின்றிப் பணிசெய்து பேசி நேர்மையுடன் நடந்து கொள்ளும் முறையால் நண்பர்களின் எண்ணிக்கை மிகுதி. கனிந்த உள்ளம். யாருக்காவது ஏதாவது கஷ்டம் என்றால் அவரால் தாள முடியாது. தம்மால் இயன்ற உதவிகளை வலுவிலே செய்ய முந்துவார். நான்கு சகோதரிகளும் ஒரு தம்பியும். சகோதரிகளுக்கெல்லாம் சீரும் சிறப்புமாக நிரம்பச் செய்தார். அவர்கள் புதல்வர்களில் பலருக்குத் தம் பொறுப்பில் படிப்பும் அளித்து உத்தியோகமும் செய்து வைத்தார். புதல்வியரின் திருமணங்களைத் தாமே முன் நின்று நிகழ்த்தி வைத்தார். இத்தகையவர் தம் புதல்வி விஷயத்தில் எப்படி நடந்து கொண்டிருப்பார் என்று சொல்லவும் வேண்டுமா?

குலத்திலும் மற்ற அம்சங்களிலும் சிறப்புடைய குடும்பத்தி லிருந்து வரனைத் தேர்ந்தெடுத்தார். நிரம்பச் செலவு செய்து திருமணத்தை நடத்தி முடித்தார். கல்யாணம் அழகில் சிறந்தவன். பி. ஏ. தேறியவன். தட்டெழுத்து, சுருக்கெழுத்து முதலிய அம்சங்களிலும் தேர்ந்தவன். அரசினர் அலுவலகத்தில் இருநூறு ரூபாய் சம்பளத்தில் உத்தியோகம். குணத்திலும் தங்கக் கம்பி என்றால் தகும். சிரித்த முகம். இரைந்த குரலில் பேச மாட்டான். பார்வதி பாக்கியசாலியென்றே எல்லோரும் மகிழ்ந்தார்கள்.


பார்வதி கருவுற்றாள். உரிய காலத்தில் பாலன் பிறந்தான். கண்ணனின் அவதாரம் போலிருந்தது குழந்தையின் தோற்றம். எல்லோருக்குமே அளவற்ற மகிழ்ச்சிதான். ஆயினும் அந்த மகிழ்ச்சியின் ஊடேயும் பெரியோர்களிடையே இங்கொன்றும் அங்கொன்றுமாக முணுமுணுப்பும் இருந்து கொண்டிருந்தது. குழந்தைக்குச் சித்திரை நட்சத்திரம். அது அவ்வளவு நல்லதன்று என்று சில பெரியவர்கள் நினைத்தார்கள். பார்வதியோ, கல்யாணமோ அதைப் பற்றிச் சிறிது கூடக் கவலை கொள்ளவில்லை; குழந்தையின் அழகும் லீலைகளும் கவலை கொள்ள விடவில்லை. ஆனால்....



குழந்தை வளர வளரக் கல்யாணத்தின் உடல் நிலையிலே சிறுகச்சிறுக மாறுதல் தோன்றிக் கொண்டே வந்தது. ஊண், உறக்கம், உத்தியோகம் முதலிய அம்சங்களில் குறைவில்லை. பேர்ப் பார்வைக்கு அவன் நன்றாகவேதான் இருந்தான். ஆயினும் நோயாளிக்குரிய குறிகளும் தொடர்ந்துகொண்டே வந்தன. மருத்துவப் பரிசோதனையில் சுவாசகோசத்தில் கோளாறு இருப்பதாகத் தெரிந்தது. உரிய சிகிச்சைகள் நடைபெறலாயின. வியாதி முற்றவே, பெரிய மருத்துவ விடுதியில் சேர்க்கப்பட்டான். உறவினர்களும் நண்பர்களும் கண் கலங்கினர்.

''கேட்டதில்லையா, 'சித்திரை அப்பன் தெருவிலே' என்று? 'தலைவன் பிறக்கத் தலை

இருமல் மற்றும் ஜலதோஷத்திலிருந்து பூர்ண நிவாரணம் பெற





ஸிரோலின் 'ரோஷ்' அருந்துங்கள்

இருமலுக்கும் ஜலதோஷத் திற்கும் ஏற்ற இந்தியாவின் குடும்ப மருந்து

இருமல் அல்லது ஜலதோஷமிருந்தால் அசட்டை செய்யாதீர்கள்—ஸிரோலின் அருந்தி அபாயமின்றி துரிதமாக பூர்ண நிவாரணம் பெறுங்கள். ஸிரோலின் இருமலை நிறுத்துவதோடு மட்டுமல்லாமல் இருமலை உண்டுபண்ணும் கிருமிகளைக் கொல்லவும் செய்கிறது. ஸிரோலின் தொண்டைப் புண்களுக்கு சமனமூட்டுகிறது, கபம் மற்றும் சளியை போக்குகிறது. அது எவ்வளவு கடுமையான இருமலிலிருந்தும் அபாயமின்றி துரிதமாக நிவாரணமளிக்கிறது. அபாயமற்ற, நிவாரணமளிக்கும் தன்மையையும் மற்றும் இனிய ருசியையும் ஸிரோலின் பெற்றிருப்பதால் குடும்பத்திலுள்ள அனைவரும் அதைப்பெரிதும் விரும்புகிறார்கள். ஸிரோலின் என்றால் குழந்தைகளுக்கு ஒரே குஷி!



உங்கள் வீட்டில் எப்பொழுதும் ஸிரோலின் வைத்திருங்கள்

ஸோல் டிஸ்டிரிப்யூட்டர்கள்:

'ரோஷ்' தயாரிப்பு — வால்டாஸ் லிமிடெட்.



"எனக்கு இவ்வளவுண்டு அல்வா தானா?"

"அது உனக்கு இல்லேடா, உன் தங்கைக்கு!"

"அத்தனையுமா அவளுக்கு?"

பட்டமாயிற்று' என்பது போல் விதி இருக்கிறதே!" என்றனர் சிலர். நாளுக்கு நாள் குழந்தையைக் கரிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வந்து, தகப்பன் ஆஸ்பத்திரியை அடைந்ததும் தனயனை அன்போடு நோக்கும் கண்ணே இல்லையாயிற்று. பெற்றவனே மகனை வெறுக்கலானான். தன் வாழ்வைப் பாழ் செய்ய வந்த மிருகம் அது என்றே எண்ணலானான்.

ஆஸ்பத்திரியில் கல்யாணத்தை ஓய்வில் வைத்தார்கள். அவன் உடல் நிலை ஆபரேஷனுக்கு ஏற்றதாக ஆவதற்குரிய மருந்துகளும் உணவும் அளித்து வந்தார்கள். நாட்கள் வாரமாகி, வாரங்கள் மாதமாகி, மாதங்களின் எண்ணிக்கையும் ஒன்று, இரண்டு என ஓடியது.

எக்கச்சக்கமான ஆபரேஷனானதால் பெரிய பெரிய நிபுணர்கள் நால்வர் கூடி மிகுந்த ஜாக்கிரதையோடு அதில் ஈடுபட்டனர். ஆபரேஷன் வெற்றிகரமாக நிறைவேறியது. யாவரும் நிம்மதிப் பெருமூச்செறிந்தனர். ஆனால் மிகப் பெரிய சர்ஜன் மட்டும் மூன்று நாட்கள் கடக்க வேண்டும் என்றார்.

சர்ஜனின் கருத்து சுத்தி மூலை போன்றது. அவர் வைத்த கெடு விளுவவில்லை. மூன்றும் நாள் கல்யாணம் கண்ணை மூடி விட்டான். முப்பது வயதுக் காளை வெறும் கட்டை ஆனான்.

"சித்திரை வீண் போகவில்லை!" என்றனர் சில முதியோர்.

அதற்கு மேல் என்ன? எல்லாம் நடந்தேறின. பசுபதி தனிமையிலே என்று மகனையும் பேரனையும் தம்மிடம் அழைத்து வந்தார். பார்வதியின் துயருக்கு மாற்று எது? பெற்றோரும் மற்றோரும் எவ்வளவு ஆறுதல் அளித்தும் அவள் தேறவில்லை. யாவரையும் வெறுவெறுத்தாள். பாலனைச் சீறினாள்.

ரயில் ஒன்று வந்தது போலும். நாலைந்து பேர்கள் பேசிக் கொண்டே பக்கத்துப் பாதையிலே வந்தார்கள். பழக்கப்பட்ட ஒரு குரலைக் கேட்டுப் பார்வதி சிந்தனை கலைந்தாள். அந்தக் குரல் தன் தகப்பனாரின் நண்பர் சிவராமனுடையது என்று உணர்ந்தாள். அந்தப் பாதை தெருவில் முடிகிறது. பேசிக் கொண்டே வந்தவர்கள் அங்கே பிரிய வேண்டிய கட்டம். நின்று பேசினார்கள்.

"பசுபதி ஊரில் இல்லையாமே சிவராமன்?"

"ஆமாம். குடும்பத்தோடு வெளியூர் போயிருக்கிறார். ஆறுத் தேடி வருகிறார்."

"அவரைப் பார்க்க வேண்டும். செய்தி கேட்ட போது நானும் என் மனைவியும் துடித்தே போய் விட்டோம். ஊராருக்கெல்லாம் உபகாரியா யிருந்த அவருக்கு இந்த நிலை வர வேண்டாம். ஆனால் என்ன செய்வது? பாவி நான் கலியாணம் நடந்தபோது பம்பாயில் இருந்தேன். இங்கே இருந்திருந்தால் குறுக்கே விழுந்து தடுத் திருப்பேன்."

"அப்படியா?...."

"ஆமாம், சிவராமன்! திருமண அழைப்பு எனக்குக் கிடைக்கவில்லை. கல்யாணம் நடந்ததென்று மட்டும் கேள்விப்பட்டேன். இங்கே வந்த பிறகல்லவா இந்தக் கண்ணராவிச் செய்திகளும் மற்ற விவரங்களும் தெரிந்தன? அடிநாள் முதலே எனக்கு அந்தக் குடும்பத்தோடு தொடர்பு உண்டே! கல்யாணம் என்கிற பையனுக்குச் சிறு வயதிலிருந்தே பலவீனமான இருதயம். தங்கித் தங்கி ஈரக்கலிடுவான். அவனுக்குக் கலியாணம் செய்ததே மிகவும் தவறாயிற்றே!...."

"ஆமா, ஆமா, ஆமா. என்ன பரிதாபம் ஸார்! கலியாணம் நடந்து நாலு வருஷங்கள். ஏறக் குறைய மூன்று வருஷங்கள் அந்தப் பிள்ளையாண்டான் நோயோடு போராடி யிருக்கிறான். அப்போது? அந்த இளந் தம்பதிகளின் வாழ்வெல்லாம் ஒரே வருஷந்தான்!"

"அந்த ஒரு வருஷத்திலும் அவர்கள் முழு மகிழ்ச்சியோடு இருந்திருக்க முடியாது என்கிறேன் நான்! அவள்தான் பிறவி நோயாளியாயிற்றே!"

"என்னவோ போங்கள்."

அவர்கள் பிரிந்து சென்றார்கள். பார்வதியின் உள்ளம் தன் தாம்பத்திய வாழ்வை நினைத்தது; சிந்தித்தது. தலையை மேலும் கீழும் ஆட்டிக் கொண்டாள் அவள்.

பாலன் கண்ணைக் கசக்கியபடி அழுது கொண்டே வந்தான். "அம்மா.... அம்மா! அப்பாவை நானு அம்மா கொன்னேன்? எதிர் வீட்டுக்கு வந்த பாட்டி சொன்னு அம்மா! சித்திரையில் வந்த எமனும் நான்!"

பார்வதி அவனை அள்ளி எடுத்துக்கொண்டாள். "அந்தப் பாட்டி கிடக்கிறாடா கண்ணு. அது தவறு. நீ சித்திரை எமன் அல்ல; சித்திரைச் செல்வம்! பண்டம் ஓரிடம், பழி ஓரிடம். நீ அழாதே!" என்று அவன் முகத்தைத் தன் முகத்தோடு அணைத்துக் கொண்டாள்.

சிறிதுநேரம் அந்த நிலையிலேயே இருந்தாள். அப்படி அவள் இருந்தது எப்போது? அவன் பிறந்த புதிதில். அது அவனுக்குத் தெரியாது. இது அவனுக்குப் புதிய அநுபவம். குஞ்சுக் கரத்தால் அம்மாவின் கன்னத்தைத் தடவினான். கை ஈரமாயிற்று. "நீ ஏனம்மா, அழறே?" என்றான். "இல்லேடா கண்ணு!" என்று அவள் சிரித்தாள். அவள் நெஞ்சு இப்போது பஞ்சு போல் இலேசாக இருந்தது.



பத்தினிக் கோட்டம்

அத்தியாயம் முப்பத்துமூன்று


நெஞ்சில் ஒரு நெஞ்சம்

திக்குத் திசை தெரியாத காட்டிலே தன்னந் தனியாக விடப்பட்ட சின்னஞ் சிறு ஊமைப் பிள்ளைபோல் அரண்டு மிரண்டு செயலற்றுக் கிடந்தாள் ஆந்திர இளவரசி உத்தமசீலி.

நேற்றுப் போலவே இன்றும் அந்த இலவந்திகைப் பள்ளி பரபரப்பும் கறுகறுப்புமாக விளங்கியது. இன்னும் சொன்னால்நேற்று எதிர்பார்த்த ஏதோ ஒரு சம்பவம் நிகழாமற் போய் இன்று நிச்சயமாக அது நிகழப் போவது போன்ற ஒரு முன் குறிப்புத் தீவிரமும் அதன் சூழ்நிலையில் தெறித்துக் காணப்பட்டது.

இந்த விசித்திர சூழ்நிலையை நேற்றெல்லாம் வெகு உன்னிப்பாகக் கவனித்து அதற்கான காரணங்களைக் கண்டறிவதில் சிரத்தை காட்டிக் கொண்டிருந்த உத்தமசீலி, இன்று அது பற்றிய கவன ஈர்ப்பே இல்லாமல் மனம் மருண்டு மேன்மாடத்து அறையிலேயே அடைந்து கிடந்தாள்.

நேற்றிரவு ஆலம்பாக்கத்திலிருந்து திரும்பி வந்து சேர்ந்ததுமுதல் இன்றையப் பொழுது விடிந்து இவ்வளவு நேரமாகியும் அவளது மிரட்சியுற்ற மன நிலையில் சிறிதளவு மாறுதலும் ஏற்படவே இல்லை. எதைப் பார்த்தாலும் ஒரு பயம்; எதைச் செய்தாலும் ஒரு நடுக்கம்; எதை நினைத்தாலும் ஒரு குழப்பம். தனது சித்த சுவாதீனத்தில் நிரந்தரமாகவே ஏதேனும் கோளாறு ஏற்பட்டு விட்டதோ என்ற



ஜெகசிற்பியன்

சந்தேகம்கூட அவனுக்குத் தோன்றியது. ஆனால் இந்தகைய சந்தேகம், கோளாறுற்ற சித்தத்திலிருந்து தோன்ற முடியாதே என்று எண்ணித் தன் மீதே சற்று நம்பிக்கை கொண்டான். அப்படியொரு நம்பிக்கை பிறந்த பிறகுதான் அவனது குழம்பிக் கிடந்த மனம் மெல்ல மெல்லத் தெளிவடைய ஆரம்பித்தது.

பற்றுக் கோலற்ற பசலைக் கொடியெனக் குரிசிலில் சாய்ந்திருந்த அவன் நெட்டுயிர்த்து நிமிர்ந்தான். இனி எதைப் பற்றியும் தன்னால் நிதானித்து அறிய முடியும் என்ற தெம்பு அவனுக்கு ஏற்படவே, இவ்வளவு நேரம் எந்த விஷயத்தினால் நெஞ்சம் அதிர்ந்து நினைவு கலங்கிக் கிடந்தானோ அதே விஷயத்தைத் தொடர்ந்து தன் மனத்தை ஓட்டினான். ஆமாம்; நேற்றிரவு அந்த ஆலம்பாக்கம் இளங்காரிக் குடையானின் இல்லத்துக்கு எதிரேயுள்ள பவழ மல்லி மரத்தடியில் மறைந்து நின்று பார்த்த காட்சிகளும், கேட்ட செதிகளும்தான் இப்போது அவன் மனத்தகத்தே மளமளவெனப் படையெடுத்து வந்தன.

'இத்தனை நாட்களாக நான் யாரை ஓர் எளிய ஓவியக் கலைஞன் என்று எண்ணிக் கொண்டிருந்தேனோ அவனே பல்லவ மன்னன் பரமேசுவர வர்மனும்! எவ்வளவு பெரிய உண்மை இது! இதைத் தெரிந்து கொள்ளாமல் எத்தனை அசட்டுத்தனமாக ஏமாந்து விட்டிருக்கிறேன்! உண்மைகளை உணருவும் சக்தி மனித அறிவுக்கு இவ்வளவு குறைவாகவா அமைய வேண்டும்? இந்த அற்ப சக்தியைக் கொண்டு உலகிலுள்ள உண்மைகளையெல்லாம் அறிந்து விட்டோம் என்றும் அறிந்து விடுவோம் என்றும் மமதையுடன் மார் தட்டிக் கொள்ளுகிற மனித மனத்தின் பொய்ம்மைத் துணிவை என்னென்பது!'


யாரோ தன்னை நேருக்கு நேர் நின்று பரிகசிப்பது போன்ற தாழ்மை உணர்ச்சியால் தன் பூவுடலைக் கூனிக் குறுக்கினான் அவன்.

'அன்றொரு நாள் இடையப் பெண் கோலத்தில் எனக்கு இளநீர் அளித்தவள் பழையாறைச் சோழ இளவரசியாம்; சேதியக் கலைஞரின் இல்லத்திலே சமையற்காரியாக இருந்து எனக்கு உணவு பரிமாறிய மூதாட்டி ஓர் உயர்தர ஆபத்துதவி வீரனின் அன்னையாம்; பல்லவபுரம் அரண்மனைக் கோட்டையில் சிறைப் பட்டிருந்த கோவிந்தவர்மன் அங்கிருந்து தப்பிச் செல்லத் திட்டமிட்டு உதவியவள் சோழ இளவரசியாம்; என்ன பயங்கரமான உண்மைகள்!'

தன்னை மீறிய நடுக்கத்துடன் தலை நிமிர்ந்த அவன் மனத்திலே பிரமயமான கேள்வியொன்று எழுந்தது: 'பல்லவ மன்னன் அந்தச் சோழ இளவரசியிடம் கடைசியாக ஏதோ எச்சரிப்பதுபோல் சொன்னானே, அது என்ன? அவனுடைய பேச்சிலிருந்து அவள், இளவரசன் கோவிந்த வர்மனின் காதலி என்றல்லவா தோன்றுகிறது? அதனால்தான் பழையாறை அரண்மனையிலிருந்து வெளியேறி இந்த ஆலம்பாக்கம் சிறு குடிலில் வந்து ஓர் இடையப் பெண்ணைப்போல் தங்கியிருந்து தனக்கு ஏற்படக் கூடிய உயிராபத்தையும் பொருட்படுத்தாமல் அவனைச் சிறையினின்று தப்புவிக்க உதவினாளோ? அவ்வாறானால், என் சிவிகையிலிருந்து காணாமற் போன பட்டோலை அவள் வசம் இருக்கத்தகும் ஏதாவதொரு காரணம் இருக்க வேண்டுமே! அவளுடைய காதலனை கோவிந்த வர்மனே அவ்வோலையைக் கவர்ந்து வந்து அவளிடம் கொடுத்திருப்பானோ? அப்படிக் கொடுத்திருந்தால் அதை ஏன் அவள் என் கண்ணில் படும்படி வைத்திருந்தாள்? அதிலும் ஏதேனுமொரு சதித் திட்டம் இருக்குமோ?'

உத்தமசீலியின் மென்னுடல் நடுக்கமுற்றது. திகிலுடன் சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தான். அங்கே அவன் கண்ணில் பட்ட ஒவ்வொரு பொருளும் ஏதோ ஒரு மர்மத்தை, அல்லது ஒரு பயங்கர இரகசியத்தைத் தன்னுள் மறைத்து வைத்துக் கொண்டிருப்பது போலவும், அந்த மர்ம இரகசியங்களைப் பகுத்தறிய முடியாமல் அவற்றிடம் தான் ஏமாந்து நிற்பது போலவுமான ஓர் அசத்த உணர்ச்சி ஏற்பட்டது அவனுக்கு.

'நேற்றிரவு அந்த ஓவியக் கலைஞனை — ஓவியக் கலைஞனா அவன்? — பின் தொடர்ந்து போயிருக்கா விட்டால் இத்தனை இரகசியங்களையும் நான் தெரிந்து கொண்டிருக்க முடியுமா? மனித மனம் எப்போதோ சில சமயங்களில் மட்டும் ஏதோ ஒரு வித மந்திர சக்தியுடன் இயங்கும் போலும்! அந்தச் சமயம் அது நினைப்பதெல்லாம் சரியாகவும், செய்வதெல்லாம் நன்மையாகவுமே அமைந்து விடும் போலும்! இல்லையானால், அவனுடைய பாதுகாப்புக்காக அவனைப் பின்தொடர்ந்து போய், அங்கே என்னுடைய பாதுகாப்புக்குத் தேவையான உண்மைகளைத் தெரிந்து கொண்டு திரும்பியிருப்பேனா?'



நெஞ்சகங்கள் உயர்ந்து தாழப் பெருமூச்சு விட்ட அவள், தன் உள்ளங் கையை விரித்து அதில் தீட்டியிருந்த செஞ்சாயச் சித்திரத்தை வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தாள். சற்றைக் கெல்லாம் அந்தச் சித்திரம் அவளது பார்வையி லிருந்து மறைந்து வேறோர் அழகிய ஓவியம் அங்கே மிதவையிடுவதாகத் தோன்றியது. பரபரப்புடன் கண்ணிமைகளைத் தட்டி அவ்வோவியத்தை உற்றுப் பார்த்த அவள் அதை அப்படியே சேர்த்துப் பிடிப்பதுபோல் சட்டென்று தன் உள்ளங் கையை இறுக மூடி நெஞ்சில் வைத்துப் புதைத்துக் கொண்டாள். இவ்வளவு நேரம் ஹேமந்த ருதுவின் மூளைத்த தேய்பருவச் சந்திரிகையாக வெளிறிச் சாம்பியிருந்த அவளது முகம் இப்போது வசந்த காலத் தண்ணிறை மதிபோல் விகசித்து ஒளிர்ந்தது. நாணம் செறிந்த நளினப் புன்னகை பூத்தவாறு தன் கைத்தலத்தில் 'பற்றிக் கொண்டிருந்த' அந்த மாய ஓவியத்தை மீண்டும் ஒருமுறை திறந்து பார்க்க வேண்டுமென்ற ஆவலுடன், மூடிக் கிடந்த தன் செங்காந்தள் விரல்களை மெல்லப் பிரித்தவள், அப்படிப் பிரித்துத் திறந்ததுமே அவ்வோவியம் எங்கேயாவது மறைந்து விடுமோ என்று அஞ்சியவள் போல், திறந்த கையைச் சட்டென்று இறுக மூடிக் கொண்டாள்.

அவளது உள்ளங் கையிலே சிக்கிக் கொண்டு விட்டிருக்கும் அந்த 'ஓவியம்' தான் என்ன? நேற்றிரவு, ஆலம்பாக்கம் இளங்காரிக்குடையானின் இல்லத்து வாசலிலே கைவிளக்கின் சிறு ஒளியில் புன்முறுவல் பூத்தவாறு நின்று கொண்டிருந்த பரமேசுவர வர்மனின் முகத்தைக் கடைசியாகப் பார்த்து விட்டு வந்தாளே, அந்தக் களை சொட்டும் திருமுகத்தின் பிம்பம் தான் இப்போது அவள் கைத்தலத்தில் 'பிடிபட்டு' விட்டிருந்தது!

கூச்சமும் குதூகலமுமாகத் தன் மூடிய கைத்தலத்தை நெஞ்சகங்களுக்கிடையே புதைத்துப் பிரித்து மற்றொரு கையால் அதை அப்படியே அணைத்துப் போர்த்துக் கொண்ட உத்தமசீலி, ஏதோ ஓர் இன்பப் புல்லரிப்புடன் கன்னங் குழியக் 'களுக்'கெனச் சிரித்தாள். இவ்வளவு நேரம் அவளிடத்தே குடிகொண்டிருந்த மிரட்சி, மயக்கம், குழப்பம், மயக்கம், கவலை, களைப்பு, திகைப்பு எல்லாமே இப்போது போன இடம் தெரியாமல் புகைந்து மறைந்து விட்டன. புத்துணர்ச்சியும், புது மலர்ச்சியும் பெற்றவளாய் அழகாக நிமிர்ந்து சுரிசில் ஒருக்களித்துச் சாய்ந்த அவள் இனிய கவிதை யொன்றைப் படிப்பதுபோல் இந்தச் சொற்களை மெல்ல முணுமுணுத்தாள்: ''வரிப் புலிகள் வாழும் காட்டில் மாசற்ற மான்களும் இருப்பதுண்டு என்ற உண்மையை என் மனத்திலே பதிய வைப்பதற்காக இறைவன் ஓர் அதிசயத்தை நிகழ்த்திக் காட்டியிருக்கிறான்.'' — எதிரிகளின் முகாமுக்குப் போய்த் தன்னுடைய உருவத்தையே ஓவியமாகத் தீட்டிக் கொடுத்து விட்டு அங்கிருந்து எப்படித் தப்பி வர முடிந்தது என்று அருந்தமலி கேட்டபோது, பரமேசுவரவர்மன் தன் கழுத்தில் கிடந்த சவுக்கைக் காய் மாலையை வருடிக் கொண்டே இவ்வாறு சொன்னான் அல்லவா? அந்தச் சொற்களை அப்படியே தன் இருதயத்தில் எழுதிக் கொண்டு வந்திருந்த உத்தமசீலி இப்போது அவற்

றைத்தாள் வாய்க்குள்ளாகவே மெல் லப் 'படித்துப்' பார்த்தாள். அவ லேறிக் கருகி யிருந்த அவள் நெஞ்சம் அந்த ஒரே நொடியில் சிதளச் சுகந் தம் படர்ந்து சிலிர்த்தது.

'என்னைப் பற்றி அவர் தம் மனத் திலே கொண்டிருக்கும் எண்ணத்தின் பிரதிபலிப்பு அல்லவா இந்தப் பதில்? மாசற்ற மானுடன் என்னை ஒப்பிட்டுக் கூறியதன் மூலம் அந்தஎண்ணத்தின் புனித உயர்வை எத்தனை உயர்வாக எடுத்துக் காட்டி விட்டார்!'—

இவ்வாறு எண்ணி உள்ளம் மகிழ்ந்து பூரித்த உத்தமசீலி, அன்றொரு நாள் ஆற்றங் கரை யோரம் தான் விளையாட்டாக வளைந்து வீசிய அந்தச் சவுக்கக் காய் மாலையை இன்னமும் அவன் தன் கழுத்திலிருந்து கழற்றாமல் இருப்பதையும் நினைவுக்குக் கொண்டு வந்து அதற்கு ஆயிரமாயிரம் இனிய காரணங்களையும் கற்பித்துக் கொண்டு மேலும் களிப்பில்



ஆழ்ந்தாள். அது மட்டுமல்ல; அவளை யறியாமலே அவனை இப்போது 'அவர்' என்ற மரியாதையுடன் அவள் தன் மனத்துக்குள்ளே விளித்துக் கொண்டது அவளுக்கே ஆச்சரியமாகி விட்டது. அப்படி விளிப்பதிலே ஒரு மேலான இன்பம் காப்பது போலவும் அவளுக் குத் தோன்றிய—

உற்சாகத்துடன் துள்ளி யெழுந்த அவள், தன் ஆபரணப் பேழைக்குள் பூட்டி வைத்திருந்த ஓவியத்தை — நேற்று பரமேசுவர வர்மனால் வரை யப்பெற்ற பரமேசுவர வர்மனின் ஓவி யத்தை — எடுத்துக் கொண்டு திரும்பி வந்து அமர்ந்தாள். அவசர ஆவ லுடன் அவ்வோவியச் சுருளைப் பிரித்துத் தன் மடிமீது போட்டுக்கொண்டு, அதில் ஜீவானந்தப் பொலிவோடு விளங்கிய பல்லவ மன்னவனின் வதன விலாசத்தை வேட்கை பொங்கக் குனிந்து பார்த் தாள். பரமேசுவர வர்மனே இப் போது தன் மடியின் மீது தலை சாய்த்துப் படுத்திருப்பது போன்ற ஓர் இன்பக் கிளுகிளுப்பு ஏற்படவே, வெட்கத்துடன் முகத்

எல்.ஐ.சி. மூன்றாவது மதிப்பீட்டின் முடிவுகள்

மேலே குறிப்பிட்டுள்ள போனஸ் விகிதங்களை வெளியிடுவதில் அகமகிழ்வு கொள்ளுகிறது ஆயுள் இன்ஷூரன்சுக் கார்ப்பொரேஷன். இந்த போனஸ் விகிதங்கள், 31-டிசம்பர் 1961 அன்றுவரை கார்ப்பொரேஷனின் இருப்புகள், பொறுப்புகள் மீது செய்யப்பட்ட மூன்றாவது மதிப்பீட்டின் விளைவாகக் கிடைத்தவை. கார்ப்பொரேஷனால் வழங்கப்பட்டு, மதிப்பீட்டுத் தேதியில் நடைமுறையிலிருந்த இலாபத்துடன் கூடிய பாலிசிகளின் முழுக் காப்புத் தொகைக்கு (Full Sum Assured) இந்தப் போனஸ் விகிதங்கள் பொருந்தும்.

மதிப்பீட்டுத் தேதியில் நடைமுறையிலிருந்த 85,81,367 பாலிசிகளின் மீது இருந்த மொத்தக் காப்புத் தொகை போனஸ்கள் உட்பட ரூ. 2738 கோடி ஆகும். மேலும், 10,297 ஆயுள் ஆன்னியுட்டிகளின் கீழ் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை ஆண்டுக்கு ரூ. 1,09,50,470-ம் இருந்தது. பங்கீட்டிற்காகக் கிடைத்த மொத்த இலாபமான ரூ. 34.45 கோடியுள், அரசாங்கத்தின் பங்கிற்காக ரூ. 1.72 கோடி வகை செய்தது போக பாலிசிதாரர்களுக்கு மேலே குறிப்பிட்டுள்ள போனஸ் விகிதங்கள் வழங்க ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 32.73 கோடி ஆகும்.

பழைய இன்ஷூரன்சுக் கம்பெனிகள் வழங்கிய இலாபத்துடன் கூடிய பாலிசிகளுக்கு, முதலாவது, இரண்டாவது மதிப்பீட்டினபோது தராதர போனஸ் திட்டத்தின் கீழ் வெளிப்படுத்திய அதே போனஸ் விகிதங்கள் பொருந்தும்.

மூன்றாவது மதிப்பீட்டின் அறிவிப்புகள் பாலிசிதாரர்களுக்குக் கூடிய விரைவில் அனுப்பப்படும்.

போனஸ்

முழு ஆயுள் அஷ்யூரன்சுகள்
(Whole Life Assurances)

ரூ. 16.00

1000-க்கு ஆண்டிற்கு

என்டௌமென்ட் அஷ்யூரன்சுகள்
(Endowment Assurances)

ரூ. 12.80

1000-க்கு ஆண்டிற்கு

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

ASP/LIC-SP-31A TAM

தைப் பொத்திக்கொண்ட அவள், விர லிடுக்கு வழியே மீண்டும் அவ்வோவியத் தைக் கூர்ந்து நோக்கினாள்.

'நானும் வில்வேலியும் எவ்வளவு பேதை மையாக நடந்துகொண்டு விட்டோம்! பரமேசுவர வர்மரின் உருவத்தை வரைந்து கொடுக்கப் பரமேசுவர வர் மரையே அழைத்திருக்கிறோமே! இந்தத் திட்டத்தை அவரிடம் நாங்கள் தெரி வித்தபோது எங்களைப் பற்றி அவர் என்ன நினைத்திருப்பார்? உலகத்தில் இப்படிப்பட்ட அப்பாவிப் பிரகிருதி களும் இருக்கின்றனவே என்று எண்ணி உள்ளூற நகைத்திருப்பாரோ? சேதியக் கலைஞரின் இல்லத்திலே தலை மறை வாகத் தங்கியிருந்த அவர், சளுக் கியத் தளபதி எதற்காகத் தம்மை அழைக்கிறார் என்ற விவரத்தைக் கூடத் தெரிந்து கொள்ளாமல் அங்கிருந்து தனியே புறப்பட்டு வந்திருக்கிறாரே, அவரது நெஞ்சுத் துணிவை என்னென் பது! இதிலிருந்து ஒரு விஷயம் நன் றாகப் புலனாகிறது — அவர் தம் எதிரி களுக்காக எள்ளளவும் அஞ்சவில்லை; அவரது நண்பர்களே அவரை வலுக் கட்டாயமாக மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்! அவ்வாறில்லை யென்றால், வில்வேலியின் வேண்டு கோளுக்கிணங்கி — அதன் பயங்கரப் பின்விளைவையும் பொருட்படுத்தாமல்— தம் உருவத்தை வரைந்து கொடுக்கச் சம்மதித்திருப்பாரா? இல்லை, இல்லை; அவர் அந்த வேண்டுகோளுக்கு இணங் கச் சிறிது தயக்கம் காட்டவே செய் தார்! இறுதியாக நான் விடுத்த மௌனக் கோரிக்கைக்குப் பின்னரே அவர் அதற்கு ஒப்புக் கொண்டார்! அப்பப்ப, என் பொருட்டு எவ்வளவு பெரிய தியா கம் செய்யத் துணிந்திருக்கிறார்! இல்லை, இல்லை; இப்படி நான் நினைப்பது அவரது வீரத் துணிவையே குறைத்து மதிப்பிடுவது ஆகும்! வீர பரம்பரை யில் உதித்த மாமன்னரான அவர் தமது வாழ்வை வீரத்துடன் முடித்துக் கொள்ள விரும்பியே வில்வேலியின் அந்தக் கோழைத்தனமான வேண்டு கோளை ஏற்றிருக்கிறார்! அவரே கோழை உள்ளம் படைத்த ஒரு பொய்யராக இருந்திருந்தால் வேறு யாருடைய உருவத்தையேனும் வரைந்து கொடுத்துவிட்டுத் தப்பிச் சென்றிருக் கலாம்; ஆனால் அவர் அவ்வாறு செய் யாமல் தாம் வாக்களித்தபடியே வரைந்து முடித்துவிட்டு அதனால் ஏற் படக் கூடிய விளைவுக்கும் தம்மைத் தயாராக வைத்துக் கொண்டிருந்திருக் கிறார்! சொல்லிலும் செயலிலும் நினைப் பிலும் சத்தியத்தையே கடைப்பிடித்து ஒழுகும் ஓர் உத்தம உள்ளத்திலிருந்து தானே இத்தகைய வீறார்ந்த வீரம் வெளிப்பட முடியும்?... ஆனால், அவர் தம் பெயரை அத்தியந்தகாமன் என்று மாற்றிச் சொன்னாரே அதன் காரண மென்ன? ஒருகால் அது அவருடைய பட்டப் பெயர்களில் ஒன்றாக இருக் குமோ? ஆமாம்; அப்படித்தான் இருக்க வேண்டும்.'

அன்பாவேசமுற்ற உத்தமசீலி, தன் மடியில் கிடந்த ஓவியச் சீலையை இத மாக ஏந்தி எடுத்து மார்புற அணைத்துக் கொண்டு பரவச நிலையிலே மெல்லக் கண் மூடினாள்.

'டடாக், டக்!....டடாக், டக்!'

திடுக்குற்றுக் கண் விழித்த அவள் சாளரத்துப் பக்கம் திரும்பித் தன் பார்வையை வெளியே வீசினாள். இல வந்திகைப் பள்ளியை நோக்கிச் சளுக் கியத் தளபதி வில்வேலி, குதிரைமேல் வருவது தெரிந்தது.

அத்தியாயம் முப்பத்துநான்கு

கண்ணீரில் கரைந்த கண்

தேளைக் கண்டாற்போல் நடுங்கிப் பதறிய உத்தமசீலியின் அணைப்பி லிருந்து அந்த ஓவியச் சீலை தானாகவே நழுவிக் கீழே விழுந்தது. அதைக் கூடக் கவனியாமல் பரபரப்புடன் எழுந்து அவ்வறைக்குள்ளேயே அங்குமிங்குமாக ஓடி அலைமோதிய அவள், சட்டென்று திரும்பி வந்து இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.

'நேற்று மாலையே வருவதாகச் சொல்லிப் போன வில்வேலி, ஏனோ அப்படி வராமல், இன்று இதோ வந்து கொண்டிருக்கிறார். அத்தியந்த காமன் வரைந்து முடித்த ஓவியத்தை வாங்கிப் போவதற்கே அவர் வருகிறார்! இப்போது என்ன செய்வது? இந்த ஓவியத்தை அவரிடம் கொடுத்துவிட வேண்டியதுதானா? அப்படிக் கொடுத் தால் என்ன ஆகும்? தலைமறைவா யுள்ள பரமேசுவரவர்மரைக் கண்டு பிடிப்பதிலே வில்வேலிக்குக் கடுகளவு சிரமமும் இருக்காது. நேரே பெருவள நல்லூர் சேதியக் கலைஞரின் இல்லத் துக்குப் போய், அங்கு அத்தியந்த

காமன் என்ற பெயரில் தஞ்சமடைந்திருக்கும் அவரைக் கையும் மெய்யுமாகப் பிடித்துக் கொண்டு வந்து விக்கிரமாதித்தரின் எதிரே நிறுத்தி அதற்கான வீரப் பதக்கத்தையும் பெற்றுக் கொள்வார். அதன் பின் என்ன நடக்கும்?... ஐயோ, அதை நினைத்துப் பார்க்கவும் முடியவில்லையே! இந்த ஓவியத்தை வில்லவலியிடம் கொடுப்பதும், என் உயிரைப் பறித்துக் கொடுப்பதும் ஒன்றுதான்! இந்த இரண்டில் இப்போது நான் எதைச் செய்வது?... ஆமாம்; அதுதான் சரியான வழி! வில்லவலியின் கண்ணில் இவ்வோவியத்தைக் காட்டாமல் இப்போதே கிழித்துப் போட்டு விடுகிறேன்! அதனால் ஏற்படக் கூடிய பயங்கர விளைவு?....அதைப் பற்றிப் பிறகு சிந்தித்துக் கொள்ளலாம்!'

கீழே கிடந்த ஓவியச் சீலையைச் சடாரென்று எடுத்துக் கொண்டு நிமிர்ந்த உத்தமசீலி, அதைச் சுக்கல் நூறாகக் கிழித்தெறியத் தன் பலத்தை ஒன்று திரட்டிய அதே கணம்—

'உத்தமசீலி! அந்த ஓவியத்தைக் கிழிக்காதே! நில்!'

வானக் கூரையே சரிந்து வந்து தலையில் வீழ்ந்தாற்போல் பேரதிர்ச்சியுற்றுத் திரும்பிய உத்தமசீலி பரபரப்புடன் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

என்ன ஆச்சரியம்! அங்கு யாருமே இல்லை. வில்லவலிகூட இன்னும் வந்து சேரவில்லை. அப்படியானால் அவளை அதட்டி அழைத்து அவ்வோவியச் சீலையைக் கிழிக்காமல் தடுத்து நிறுத்தியது யார்? ஓ.... அவளது நெஞ்சிலிருந்து எழுந்த குரல்தான் அவள் செவியில் அத்தனை நாராசமாய் இறங்கி ஒலித்ததோ!


கைகளிலிருந்த ஓவியச்சுருள் கீழே நழுவி விழ, தன் நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டு இருக்கையில் அப்படியே ஒடிந்து சாய்ந்தாள் உத்தமசீலி.


'பைத்தியக்காரப் பெண்ணே! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? ஏன் இந்த ஓவியத்தைக் கிழித்தெறியப் போகிறாய்!? பெற்ற தாயை மறந்து, பேணி வளர்த்த தந்தையைப் பிரிந்து, பிறந்த பொன்னாட்டையும் வளர்ந்த அரண்மனையையும் துறந்து, இந்த அந்நிய நாட்டிற்கு ஏன் வந்திருக்கிறாய்? உன் அருமைப் பெரிய தந்தையாரான மாமன்னர் விக்கிரமாதித்தர் உன்னை ஏன் இங்கு வரவழைத்திருக்கிறார்? உன் அன்புத் தந்தை விஜயவர்த்தனர் உன்னை ஏன் இந்த நாட்டிற்கு அனுப்பியிருக்கிறார்? உன்னுடைய வாழ்க்கையின் இலட்சியம் என்ன? இந்த நாட்டிலே நீ சாதிக்க வந்திருக்கும்

குளிர்காலத்திலே...

'கெப்ளர்'

'ஏ'·டி இணையற்றது





குளிர்காலத்தில் பரவும் தொத்துநோய்களுக்குக்
குடும்பத்திலுள்ளோர் — குறிப்பாகக் குழந்தைகள் —
ஆளாவது இயற்கை. நோயை எதிர்க்கும் திடமான
சக்தியை அவர்களிடம் வளர்க்க
அவர்களுக்கு அளியுங்கள் 'கெப்ளர்'-ஷார்க்
லிவர் ஆயிலோடு கூடிய மால்ட்
''கெப்ளர்'' — ஷார்க் லிவர் ஆயில் மற்றும் விடமின்கள்
'ஏ'யும் 'டி'யும் கலந்த ருசியான, சத்துச் செறிந்த டானிக்.
குடும்பத்தினர் அனைவருடைய ஜீவன் அது! உடலைப்
பலப்படுத்தி, நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெருக்குகிறது.
பிணியாறும் நிலையிலுள்ளோருக்கு மிக உகந்தது.

ஒரு பர்ரோஸ் வெல்கம் தயாரிப்பு

காரியம் என்ன? இவ்வளவையும் ஒரே தொகுதியில் மறந்து விட்டாயே! எல்லாருக்கும் பொல்லாதவர்க்குமாகச் சேர்த்து பெரும் துரோகம் செய்யத் துணிந்து விட்டாயே! சரி; உன்னுடைய மகத்தான காதலின் முன்னே இவையெல்லாம் மிக அற்பமாகவே தோன்றலாம்! ஆகவும், அந்தக் காதலையே நீ இன்னும் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை போலிருக்கிறதே? ஆமாம், பெண்ணே! நீ முதலில் யாரைக் காதலித்தாய்? ஓர் எளிய ஓவியக் கலைஞனைத்தானே? பல்லவ மன்னன் பரமேசுவர வர்மனை அல்லவே? அப்படியிருக்க, உன் குலத்தின் வைரியான அவனைக் காட்டிக்கொடுக்க ஏன் தயங்குகிறாய்? நீ காதலித்த ஓவியனே இப்போது பரமேசுவர வர்மனாக இருக்கிறானே என்று தடுமாற்றம் அடைகிறாயா? அப்படியானால் உன் காதல் பொய்யானது என்றுதான் சொல்ல வேண்டும்! முதல் காதலைக் கொன்று விட்டு அதன் கல்லறைமேல் இரண்டாம் காதலை முளைக்கச் செய்யப் பார்க்கிறாய்! அதாவது, பல்லவ மன்னனைக் காதலிப்பதற்காக முதலில் காதலித்த ஏழை ஓவியனைக் கொன்றுவிட்டாய்! இப்படிச் செய்ய நீ வெட்கப் படவில்லையா? இதைவிட உன் இலட்சியம் பெரியதென உனக்குத் தோன்றவில்லையா? அந்த இலட்சியம் நிறைவேற வேண்டுமானால் பல்லவ பரமேசுவரவர்மன் ஒழிந்தாக வேண்டும் என்பதை நீ உணரவில்லையா? மனிதப் பிறவியின் தத்துவங்களை நன்கு அறிந்தவளான நீயே இப்படிச் செய்யலாமா? அழிந்துபடும் இந்த உடலின் சேவைக் கவர்ச்சியில் சிக்கிச் சீரழியலாமா? இந்தப் பிறவியோடு உன் கணக்கைத் தீர்த்து முடிக்க முயலாமல் இன்னும் ஏழேழு பிறவிகளுக்குத் தொடர்ந்து துன்பம் அனுபவிக்க உன்னை உட்படுத்திக் கொள்கிறாயே! ஊழினை வெல்லப் பயின்றவளான நீ அந்த அழுக்கே அகப்படப் போகிறாயே!... வேண்டாம்! காதல் என்னும் மாயையை நம்பி, உன் மகத்தான இலட்சியத்தைச் சிதைத்துவிட வேண்டாம்!'

உள்ளம் வெடித்து விடுவதுபோல் விம்மி விம்மி அழுதாள் உத்தமசீலி. அவளது கருங்குவளைக் கண்களிலிருந்து காட்டாற்று வெள்ளம்போல் கண்ணீர் பெருக்கெடுத்து வழிந்தது. அப்படி வழிந்த கண்ணீர், கீழே விரிந்து கிடந்த ஓவியச் சீலையின்மேல் சொட்டுச் சொட்டாக விழுந்து தெறித்தது.

நாணைத் தளர்த்தி விட்ட வில்லைப் போல் சடாரெனத் தலைதூக்கி நிமிர்ந்த உத்தமசீலி ஏதோ ஓர் உறுதியான முடிவுக்கு வந்தவளாய், பல்லவ மன்னனின் உருவம் தாங்கிய அந்த ஓவியச் சீலையை வெடுக்கென்று எடுத்து ஒரு சுவடியாகச் சுருட்டிக் கையில் பற்றியவாறு மென்மாடத்து அறையை விட்டுக் கீழே இறங்கிச் சென்றாள்.

''வேங்கி இளவரசியாருக்கு வில்வேலியின் வணக்கம் உரித்தாகும்!'' என்று கூறிக் கொண்டே சித்திர கூடத்தினுள் பிரவேசித்த சளுக்கியத் தளபதி ஓர் ஆசனத்தில் சென்று அமர்ந்தார்.

அமைதியும் தெளிவுமாக வீற்றிருந்த ஆந்திர இளவரசி அவரைப் பார்த்து இனிய புன்முறுவல் பூத்தாள்.

''நேற்று மாலையே நான் வருவதாகச் சொன்னேன் அல்லவா? ஏராளமான அலுவல்கள். என்ன முயன்றும் வர இயலாமற் போய் விட்டது. இளவரசியார் மன்னிக்க வேண்டும்'' என்று பணிவுடன் சொன்னவாறு சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தார் தளபதி வில்வேலி.

''தளபதியார் இப்போது ஏதோ ஒரு புதிய முயற்சியில் முனைந்திருப்பதாக நேற்று சொல்லிப் போனார். அதன் காரணமாகத்தான் வர முடியாமலாகியிருக்கும் என்று நான் எண்ணிக் கொண்டேன்.''

''சரியாக அனுமானித்திருக்கிறீர்கள், அம்மணி! அது ஒரு முக்கியமான காரியந்தான். அதில் முழு வெற்றியும் கிடைத்து விட்டது. அந்த விவரங்களைப் பிறகு சொல்கிறேன். அல்லது தங்கள் பெரிய தந்தையாரின் வாயிலாகவும் நீங்கள் அதைத் தெரிந்து கொள்ளலாம். ஏனென்றால், நம் சளுக்கிய மாமன்னர் இன்றோ, நாளையோ இங்கு விஜயம் செய்யப் போவதாக எனக்குச் சேதி அனுப்பியிருக்கிறார்.''

''உண்மைதானா ஐயா? என் பெரிய தந்தையார் இங்கு வருவது நிச்சயமாகி விட்டதா?'' என்று உற்சாகத்துடன் வினவினாள் உத்தமசீலி.

''ஆம், அம்மணி! நேற்று நான் இங்கு வர முடியாமற் போனதற்கு அதுவும் ஒரு காரணந்தான்'' என்று கூறிக்கொண்டே மீண்டும் தம் பார்வையை அங்குமிங்குமாக ஓடவிட்ட வில்வேலி சட்டென்று திரும்பி, ''இளவரசி! எங்கே அந்த....?'' என்று உள்ளடங்கிய குரலில் அரைகுறையாக இழுத்தவாறு அவளை வியப்புடன் உற்றுப் பார்த்தார்.

"யாரைக் கேட்கிறீர்கள், ஐயா? அத்தியந்தகாமன் என்ற அந்த ஓவியனைத்தானே?"

"ஆம், இளவரசி! எங்கே இருக்கிறான் அவன்?"

"இங்கே இல்லை; அவனை நான் போகச் சொல்லி விட்டேன்."

வியப்புடன் நிமிர்ந்த வில்வேலி, "என்ன! போகச் சொல்லி விட்டீர்களா?" என்று கடுகடுப்புடன் கேட்டார்.

"அவனுக்கு நாம் இட்ட பணியை முடித்து விட்டான். உடனே அனுப்பி விட்டேன்."

"முடித்துவிட்டானா இளவரசி? பல்லவ மன்னனின் உருவத்தை வரைந்து முடித்து விட்டானா?" என்று மகிழ்ச்சி மேலிட்டால் உரக்கக் கூவிய வில்வேலி, "ஆனாலும் அவனை அனுப்புவதற்கு முன் என்னிடம் ஒரு வார்த்தை கேட்டிருக்கலாமே!" என்றார் குரலைத் தாழ்த்தி முகத்தைச் சுளித்தபடி.

"கேட்டிருக்கலாம். நீங்கள்தாம் நேற்று மாலை இங்கு வரவில்லையே? இரவு வேளையில் இந்த இலவந்திகைப் பள்ளியிலே அவனைத் தங்கியிருக்கச் செய்ய எனக்கு விருப்பமில்லை. அதனால்தான் அனுப்பி விட்டேன்."

"அதுவும் நியாயமே!" என்று பலமாகத் தலையசைத்த வில்வேலி, "அந்தப் பாவிக் கலைஞன் எங்கே ஓடி விடப் போகிறான்? பரவாதி மல்லரின் இல்லம்தானே அவன் இருப்பிடம்? தேவைப்பட்டால் அவனை இழுத்து வர எவ்வளவு நேரமாகி விடப் போகிறது!" என்றார் அலட்சியமாக. மீண்டும் அவர் தொடர்ந்து, "அது சரி, அம்மணி! அவன் வரைந்து தந்த ஓவியம் எங்கே? அதை முதலில் காட்டுங்கள்!" என்று தம்மை மீறிய ஓர் ஆத்திர அவசரத்துடன் கேட்டுக்கொண்டே ஆசனத்தின் முன் விளிம்புக்கு நகர்ந்தார்.

உத்தமசீலியின் முகம் அந்த ஒரே விநாடியில் சவமாக வெளிறிப் போயிருந்தது. குன்றிக் குறுகிய அவள் உடலோ நிலை கொள்ளாமல் பதறித் துடித்தது. தலை குனிந்து கொண்டே தன் கையிலிருந்த ஓவியச் சுருளை நடுக்கத்துடன் அவரிடம் நீட்டினாள்.

இரையைக் கண்டு பாயும் பசி கொண்ட வேங்கை போல் தாவி வந்து அவ்வோவியச் சுருளை வாங்கிப் பரபரப்புடன் பிரித்து, அப்படியும் இப்படியுமாகத் தம் தலையைச் சாய்த்துப் பார்த்த வில்வேலியின் முகம், ஏதோ ஓர் அருவருப்பான காட்சியைக் கண்டு விட்டாற்போல் விகாரமடைந்து கறுத்தது. "சே! என்ன கோரமான உருவம்! பல்லவர் என்றால், நீளமான பற்களை உடையவர் என்றுதான் நாங்கள் இத்தனை காலமாக ஏளனம் பேசி வந்தோம்! ஆனால் இந்தப் பல்லவ பரமேசுவரவர்மனோ ஒரு கண் குருடான கோர சொரூபியாய் இருக்கிறானே!" என்று வெறுப்பும் அருவருப்புமாகக் கூறிக்கொண்டே அந்த ஓவியச் சீலையை வீசியெறிந்தார்.

சண்டமாருதத்தில் சிக்கிய பூங்கொடியென நடுநடுங்கி நின்ற உத்தமசீலி இதைக் கேட்டு ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

"நீங்கள் இந்த ஓவியத்தைப் பார்த்தீர்களா அம்மணி? இராஜ குலத்தில் பிறந்த தாங்கள் இம்மாதிரியான குரூப முகத்தைப் பார்க்கவே கூடாது!" —இப்படிச் சொன்ன வில்வேலியின் முகத்தைப் பார்க்க மிகவும் கோரமாக இருந்தது.

வியப்பால் வெலவெலத்துப் போன உத்தமசீலி, சட்டென்று குனிந்து அந்த ஓவியச் சீலையை எடுத்துப் பிரித்துப் பார்த்தாள்.


வில்வேலி சொன்னது உண்மைதான்! சற்றுமுன் உத்தமசீலி விம்மிப் பொருமி அழுது கொண்டிருந்தாளே அப்போது அவள் கண்ணிலிருந்து வடிந்த கண்ணீரில் ஒரு துளி, பல்லவ மன்னன் பரமேசுவர வர்மனின் அந்த ஓவிய முகத்துக் கண்ணுக்கு நேரே விழுந்து அதிலிருந்த நீல வண்ணத்தைக் கலக்கிக் கரைத்து விட்டிருக்கவே, இப்போது அவன் ஒரு கண்ணை இழந்த குருடனாகத்தான் காட்சியளித்துக் கொண்டிருந்தான்!

ஆண்மையின் சகல லட்சணங்களும் பொருந்திய சுந்தரச் சொரூபனான பரமேசுவரவர்மனின் உருவ ஓவியமா இது? இல்லை; அவனுடைய முகச் சாயல் அடியோடு முற்றிலும் மாறிப் போய் விட்டிருந்தது! (தொடரும்)

Printed & Published by R. Anandanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

யாரோ இவள் யாரோ?

என யாரும் கேட்க, எவரும் வியக்க...



உங்கள் மேனியெழிலை மிளிரச் செய்வது
செங்கமல வண்ண ப்ரீஸ்



இணங்கி இணைபிரியா நறுமண நலங்கோ...
எழிலுக்கொரு செவ்வண்ண நீராஞ்சனமோ...
செங்கமல வண்ண ப்ரீஸ் ஸ்நானமோ!
அரவணைத்து உங்கள் உரிமைப் பொலிவுக்கு
மெருகிழைக்க உருவெடுத்த அழகுசாதன சோப்...
உங்கள் வனப்புக்கு வனப்பு...ஒளிச் சிறப்பு!

இந்துஸ்தான் லீவர் லிமிடெடினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

BZ. 22-X52 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

